உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 8 புதன்கிழமை (24.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 363

# வடக்கில் சிங்களம் பலவந்தமாகத் திணிப்பு

# தமிழரின் வரலாற்றுச் சின்னங்கள் அழிப்பு



## நாடாளுமன்றத்தில் சுரேஷ் எம்.பி.

கொழும்பு, நவம்பர் 24

**வடக்கில் சிங்களம் பலவந்தமாகத் திணிக்கப்படுவதால் தமிழ் மக்களின் கலாசாரத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களின் வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கப்படுகின்றன. இது ஓர் இனவாத வரவு - செலவுத்திட்டம்.**

- இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக காலத்துக்குக் காலம் நடத்தப்பட்ட தமிழினத்துக்கு எதிரான தாக்குதல்கள் மூலமான உயிரிழப்புகள், சொத்தழிப்புகள், சொத்துக்களைச் சூறையாடல், தமிழ் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிப்பு, ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களின் வரைமுறையற்ற கைதுகள், கொலைகள், உயர் கல்வி வாய்ப்பு பறிப்பு, உத்தியோக பறிப்பு என உடல் ரீதியாகவும், உளரீதியாகவும், கலாசார ரீதியாகவும் பல முனைகளில் தமிழ் இன ஒழிப்பை நிகழ்த்தி வந்த சிங்கள ஆட்சியாளர்கள், தமிழ் இனஅழிப்பை வேகப்படுத்தும் வேலைத்திட்டத்தை பயங்கர வாதத்துக்கெதிரான யுத்தம் என்ற போர்வையில் கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக செயற்படுத்தி வருகின்றனர்.

இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைமையை உதாசீனம் செய்து, நிர்வாக அதிகாரிகளின் சுதந்திரமானதும் சட்டபூர்வமானது மான செயற்பாடுகளைத் தடுத்து, இனவெறியூட்டப்பட்ட இராணுவத்தின் துணையுடன் தமிழ் இனஅழிப்பு நடவடிக்கையை அதிவேகப்படுத்தும் செயற்திட்டத்தை அபிவிருத்தி என்ற பெயரால் இந்த அரசு செயற்படுத்தி வருகிறது. இங்கு சமர்ப்பிக் கப்பட்டிருக்கும் வரவு - செலவுத்திட்டமானது தமிழ் இன அழிப்பு செயற்றிட்டத்தை நாசூக்காகவும் தாக்கமாகவும் நடைமுறைப்படுத்துவதற்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளமை துலாம்பரமாக வெளிப்படுத்துகிறது. - இவ்வாறு அவர் கூறினார்.(சுரேஷ் பிரேமச்சந்திரனின் நீண்ட பேச்சின் விவரம் 4 ஆம் பக்கத்தில்)

### சனியன்று யாழ். வரும்

## இந்திய அமைச்சர் கிருஸ்ணா அரியாலையில் வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நடுவார்

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 27ஆம் திகதி வருகை தரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா அன்றையதினம் நண்பகல் 12.15 மணிக்கு அரியாலை நாவலடியில் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கவிருக்கிறார்.

வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு 50 ஆயி (26ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர் குழுவினரால் சவேந்திர விசாரிக்கப்படுவாரா?

வாஷிங்டன், நவ. 24

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினால் சவேந்திர சில்வா விசாரணைக்கு உட்படுத்தப்படுவரா என பான் கீ மூனின் பிரதிப் பதில் பேச்சாளர் பர்கான் ஹக்கிடம் இன்னசிற்றி பிரஸ் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியுள்ளார்.

(26ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

வியாழன் மாற்றப் பலன்கள் 16 ஆம் பக்கத்தில்

### உதயனின் வெள்ளி விழா உலா

**27.11.2010 இல் மலரும் உதயன் நாளிதழின் வெள்ளி விழாவை முன்னிட்டு உள்ளே...!**

**வாசகர் நெஞ்சங்கள் பேசுகின்றன**

உள்ளே

**கூட்டுறவுச் சங்கங்களுக்கு எதிராக நடவடிக்கை**
குடாநாட்டில் கூட்டுறவு சங்கங்களுக்கு எதிராக முறைப்பாடுகிடைப்பின் நடவடிக்கை — பக்கம் 2

**புதிய தலைமைத் துவம் வேண்டும்**
ஜனாதிபதி மஹிந்த இந்துவுக்குப் பேட்டி. — பக்கம் 3

**இனியும் வேண்டாம் இரத்தக்களரி**
ஆராய்கிறது கட்டுரை — பக்கம் 13

## அரச ஊழியர்களை அரசு ஏமாற்றிவிட்டது

### ஐ.தே. கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 24

அரச ஊழியர்களுக்கு 2010 ஜனவரி முதல் 2,500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமென வாக்குறுதி அளித்த அரசு (26 ஆம் பக்கம் பார்க்க)

## முடி வளர்ப்புக்கும் ஓர் அமைச்சரை நியமிக்கலாமே!

### ஜே.வி.பி. கிண்டல்



கொழும்பு, நவ. 24

''முடி வளர்க்கவும் அமைச்சுப் பதவி ஒன்றும் நியமிக்கப்படலாம்''

ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் (26 ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ளைக்கொடி விவகார வழக்கு:

# விசாரணை முடிவடைந்த பின்னரே ஐ.நாவிடம் விளக்கம் அளிப்போம்

### ஐ.நாவுக்கான இலங்கைத் தூதரக அதிகாரி சேனுகா சாட்சியம்

கொழும்பு, நவ.24

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை இலங்கையிடம் விளக்கம் கோரியுள்ளது. அது தொடர்பாக இலங்கையில் முழுமையான விசாரணைகள் முடிவடைந்த பின்னரே ஐக்கிய நாடுகள் சபைக்கு விளக்கமளிக்கப்படும்.

- இப்படி ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சேனுகா செனவிரட்ன நேற்று மேல்நீதிமன்றில் தெரிவித்தார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை மேல் நீதிமன்ற நீதியரசர்களான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி. வராவெல, சர்பிக் ரஷிக் ஆகியோர் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. (02 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் மக்களின் நன்மதிப்பை பெற்ற ஒரே ஒரு டையில் காட்சியறை

நவீன் செரமிக்



Naveen Ceramic PVT LTD
212, Palaly Road, Jaffna.
Tel : 212220033 / 212220044

## யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலும் எவரும் உபவேந்தராக நியமிக்கப்படலாம்

### இன ரீதியான பல்கலைக்கழகம் எதுவும் இல்லை என்கிறார் எஸ்.பி.

கொழும்பு, நவ. 24

இலங்கையிலுள்ள சில பல்கலைக் கழகங்களுக்கு தமிழ் உபவேந்தர்களை மாத்திரமே நியமிப்பதற்கு சட்டம் எதுவும் இல்லை. அதேபோன்று இலங்கையில் இன ரீதியான பல்கலைக்கழகம் எதுவும் இல்லை என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

வீட்டையோ வேலைத் தளத்தையோ எந்தநேரமும் எங்கிருந்தும் கண்காணிக்க

CCTV Camera



தொடர்பு:
இல.111/2,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Hot Line: 0750421776

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றில் மோசடி இடம்பெறுவதாக முறைப்பாடு

## அவற்றுக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.24

யாழ். மாவட்டத்தில் உள்ள சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மோசடிகள் இடம் பெற்ற சங்கங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை விரைவில் எடுக்கவுள்ளோம்.

அத்துடன் கூட்டுறவுச் சுற்று நிருபர்களுக்கு முரணனாகச் செயற்பாடுகள் சங்கங்களுக்கு எதிராகவும் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் வி.கே .அருந்தவநாதன்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்தொழிலாளர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கு கொண்ட கலந்துரையாடல் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் தலைமை உரை நிகழ்த்தும் போதே உதவி ஆணையாளர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

. கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றின் செயற்பாடுகள் மிகவும் வேதனைக்குரியதாகவும் அதிருப்தி அளிப்பதாகவும் இருக்கின்றன.

குறிப்பாக ஆறு அல்லது ஏழு கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இலாபத்தில் இயங்குகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குரிய சுற்று நிருபத்துக்கு அமைவாக செயற்படத் தவறியமையே இதற்கான முக்கிய காரணங்கள் ஆகும். சுற்று நிருபத்துக்கு முரணாக செயற்படும் அமைப்புகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின், நிர்வாகத்தினரின் பொறுப்பற்ற நடவடிக்கை காரணமாகவே சில துறைகளை அரசு பொறுப்பேற்க வேண்டி ஏற்பட்டது.

எனவே கூட்டங்களை நடத்துதல், குறிப்புப் புத்தகம் எழுதுதல், கணக்குகளைப் பேணுதல், பணியாளர்கள் நியமனம், சொத்துக் கொள்வனவு, சொத்து விற்பனை, குத்தகை, ஈடுவைத்தல், நிர்வாக சபை உறுப்பினர் வேதன்ம், பொருள்கள் கொள்வனவு, உடன் வழங்குதல், கணக்காய்வு மீளாய்வு அறிக்கை தயாரித்தல் உள்ளிட்ட அனைத்துச் செயல்களின் போதும் சுற்று நிரூபத்துக்கு அமைவாக செயற்பட வேண்டும்.

சில கூட்டுறவுச் சங்கங்கள் கூடிய விலைக்கு பொருள்களை கொள்வனவு செய்து கூடிய விலையில் விற்பனை செய்து வருகின்றன. இது மக்களுக்கு செய்யும் துரோகத்தனமாகும். விலைப்பட்டியல் கண்டிப்பாகப் பின்பற்றபடல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இயங்குமாயின் பனை தென்னை வளத் கூட்டுறவு அமைப்பு கடன் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது. யாழ். மாவட்டத்தில் பனை தென்னை வள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கம், சிக்கன கூட்டுறவுச் சங்கங்கள் மிகச் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன.

கூட்டுறவுத் துறையில் பணியாற்றுபவர்கள் இதய சுத்தியுடனும் நேர்மையுடனும் பணியாற்ற வேண்டும்.

கூட்டுறவுச் சுற்று நிரூபத்திலுள்ள சில பலவீனங்களைப் பயன்படுத்திக் கொண்டு தொடர்ந்தும் மோசடியில் ஈடுபடுவர்களின் பெயர், விவரங்களைப் பத்தரிகை மூலம் வெளிப்படுத்தவும் தயங்க மாட்டேன் என்றார். (த-14)

# புதிய பிரதியமைச்சர்கள்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுமுன் தினம் புதிதாகப் பதவியேற்ற பிரதியமைச்சர் கள் விவரம்:-

* சுசந்த புஞ்சி நிலமே - மீன் பிடிமற்றும் கடல்வள விவகாரம்
* லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன - பொருளாதார அபிவிருத்தி
* ரோஹித்த அபய குணவர்த்தன - துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி
* பந்து பண்டாரநாயக்க - ஆயுர்வேத மருத்துவ விவகாரம்
* ஜயரத்ன ஹேரத் - கைத்தொழில் மற்றும் வர்த்தகம்
* துமிந்த திஸாநாயக்க - இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி
* லசந்த அழகியவண்ண - வீடமைப்பு, பொறியியல் நிர்மாணத்துறை
* ரோஹண திஸாநாயக்க - போக்கு வரத்து விவகாரம்
* ஏச்.ஆர்.மித்ரபால- கால் நடை, கிராம சமூக அபவிருத்தி
* நிர்மல் கொத்தலாவ - துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அபவிருத்தி
* பிரேமலால் ஜயசேகர - மின் சக்தி மற்றும் மின்வலு
* கீத்தாஞ்சன குணவர்த்தன - நிதி திட்டமிடல்
* விநாயமூர்த்தி முரளிதரன் - மீள் குடியேற்றம்
* பைஸர் முஸ்தபா - தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி
* இந்திக்க பண்டாரநாயக்க - உள் நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபை
* முத்துசிவலிங்கம் - பொருளாதார அபிவிருத்தி
* சிறிபால கம்லத் -காணி அபிவிருத்தி
* டபிள்யூ.பி.ஏக்கநாயக்க - நீர்ப்பாசன நீர்வளம் மற்றும் முகாமைத்துவம்.
* சந்திரசிறி சூரியாராய்ச்சி - சமூக சேவைகள்
* நந்தமித்த ஏக்கநாயக்க - உயர்க்கல்வி
* நிருபமா ராஜபக்ஷ - நீர்வழங்கல் மற்றும் வடிகால்
* லலித் திஸாநாயக்க - சுகாதாரம்
* சரண குணவர்த்தன - பெற்றோலிய வளம்
* காமினி விஜித் விஜிதமுனி சொய்சா - கல்வி
* எம்.எல்.ஏ ஹிஸ்புல்லா - மகளிர் மற்றும் சிறுவர் விவகார
* வீரகுமார திஸாநாயக்க - பாரம்பரிய கைத்தொழில், மற்றும் சிறுகைத் தொழில்
* எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன - புத்த சாசன மதவிவகாரம்.
* ஏர்ல் குணசேகர - பெருந்தோட்ட கைத்தொழில்
* பஷீர் சேகுதாவூத் - உள் நாட்டு வர்த்த கம் கூட்டுறவு
* அப்துல் காதர் - சுற்றாடல் அபி விருத்தி
* துலிப் விஜயசேகர - அனர்த்த முகாமைத்துவம்

# யாழ்ப்பாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு சிங்கள உபவேந்தர் ஒருவர் நியமிக்கப்படுகின்றமை தொடர் பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.யோகேஸ்வரன் அனுப்பிய கடிதத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே உயர் கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அது குறித்து மேலும் தெரிவித்தமை வருமாறு:-

கிழக்கிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள பல்கலைக் கழகங்களில் உபவேந்தராகத் தமிழரையே நியமிக்க வேண்டும் என்று எவ்விதச் சட்டமும் கிடையாது. கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள நிர்வாகம் ஊழல் நிறைந்து காணப்படுகிறது.

எனவே, அவ்வாறான நிலைமை தொடராமல் இருக்க அதனை மாற்றியமைக்குமாறு மீள் குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள்.

அப் பல்கலைக்கழகத்தில் பொருள்கள் கொள்வனவு உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் ஊழல் காணப்படுகின்றது. அத்துடன் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு தவறான நிர்வாக வழி நடத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே இது தொடர்பாக நான் அறிக்கை வெளியிட்டுள்ளேன்.

அந்த அறிக்கையின்படி விசாரணைகள் நடத்தப்பட்டு நிர்வாகம் மாற்றப்படவுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக நாங்கள் விசாரணை மேற்கொள்ளவென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது. -இப்படி அவர் தெரிவித்தார்.

(சி)

# விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வழக்கின் 5 ஆவது சாட்சியாளரான சேனுகா செனவிரட்னவை பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் வசந்த நவரட்ன பண்டார நேற்று குறுக்கு விசாரணை செய்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். நேற்றைய வழக்கு விசாரணையின்போது கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு:-

கேள்வி:- ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைப் பிரதிநிதியாக நீங்கள் உள்ளீர்கள்? பதில்:- ஆம்.

கே:- இந்தப் பதவிக்கு எப்போது தெரிவு செய்யப்பட்டீர்கள்? ப:- 2009ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதி.

கே:- (2009ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் திகதி 'சண்டே லீடர்' பத்திரிகையை சாட்சியிடம் காண்பித்து) இந்தப் பத்திரிகையில் 'கோட்டா ஓடர்ட் தெம்டு பி ஷொட்' (Gota ordered them to be shot) எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.ப:- ஆம்.

கே:-இந்தப் பத்திரிகையை வாசித்தீர்களா? ப:-இணையத்தளத்தில் பார்த்தேன்.

கே:- அதாவது நீங்கள் அந்தப் பத்திரிகையை இணையத்தளத்தில் பார்த்துள்ளீர்கள்? ப:- ஆம்.

கே:-இப்பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பாக ஜக்கிய நாடுகள் சபை அதிகாரி என்ற வகையில் உங்களிடம் விளக்கம் கேட்கப்பட்டதா? ப:- 2009ஆம் ஆண்டு, டிசம்பர் 18ஆம் திகதி கடிதம் ஒன்று கிடைத்தது.

கே:- அந்தக் கடிதத்தில் ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் விளக்கம் கோரப்பட்டதா? ப:- ஆம்.

(அந்தக் கடிதம் மேல் நீதிமன்ற நீதியரசர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது)

கே:- ஐக்கிய நாடுகளினால் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது? ப:- ஆம்.

கே:- அது பக்ஸ்(fax) மூலமா கிடைத்தது? ப:-ஆம்.

கே:- 2009ஆம் ஆண்டு மே 17ஆம், 18ஆம் திகதிகளில் புலிகளின் முக்கியஸ்தர்களான பாலசிங்கம், நடேசன், புலித்தேவன் மற்றும் ரமேஷ் ஆகியோரின் இறப்பு தொடர்பாக விளக்கம் கோரப்பட்டது? ப:-ஆம்.

கே:- அவ்வாறு விளக்கம் கோரப்பட்ட பின்னர் நீங்கள் என்ன செய்தீர்கள்? ப:-அதன் பிரதியை பாதுகாப்புச் செயலாளர், அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பினேன்.

கே:- அது தவிர 2010ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி (International Crisis Group) சர்வதேச நெருக்கடிகள் குழு, அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது? ப:- ஆம்.

கே:- அந்த அறிக்கை தொடர்பாகவும், அந்த அமைப்பு குறித்தும் விளக்கம் தர முடியுமா? ப:- அது ஓர் அரச சார்பற்ற நிறுவனமாகும். சர்வதேச மட்டத்தில் விசேட நிலைமைகள் தொடர்பிலும், சர்வதேச பிரச்சினை, நெருக்கடி குறித்தும் அந்நிறுவனம் ஆராயும். அரசுகளுடன் அந்த நிறுவனம் சிறந்த தொடர்பைப் பேணிவருகிறது. ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளில் இருந்து அந்த நிறுவனத்துக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகமான கொபி அனானும் அந்த நிறுவனத்தின் உயர்பீட அதிகாரிகளுள் ஒருவராவார். அந்த அறிக்கையானது 2010ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி கிடைத்தது.

கே:- அதாவது யுத்தம் நிறைவடைந்து ஒரு வருட காலப் பகுதியில் அந்த அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது? ப:- ஆம்.

கே:- 'சண்டே லீடர்' பத்திரிகையில் வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பாக வெளியான செய்தி தொடர்பில் உங்களது கருத்து என்ன? ப:- சர்வதேச ரீதியில் இலங்கை மீதான கவனம் திரும்பியுள்ளது.

கே:- இலங்கை வெளிவிவகார அமைச்சின் உறுப்பினர் என்ற வகையில் நீங்கள் எவ்வாறான பணிகளை மேற்கொள்வீர்கள்? ப:- நான் தினமும் இலங்கை தொடர்பாக இணையத்தளங்களில் வெளியிடப்படுபவைகளைத் தேடிப்பார்ப்பேன்.

(இதன்போது தனது குறுக்கு விசாரணை நிறைவு பெற்றது எனக் கூறி பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் அமர்ந்ததைத் தொடர்ந்து பிரதிவாதியின் சட்டத்தரணி குறுக்கு விசாரணைகளை ஆரம்பித்தார்.)

கே:- நீங்கள் கடிதமொன்றை மன்றில் சமர்ப்பித்தீர்கள். அந்தக் கடிதம் அனுப்பப்பட்ட திகதி என்ன? ப:- 2009ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதி மாலை அனுப்பப்பட்டது.

கே:- அவ்வாறு அனுப்பிய கடிதத்தை இரண்டு நாள்களின் பின்னர் வாபஸ் பெற்றீர்களா? ப:- ஆம்.

கே:- 21ஆம் திகதி அனுப்பிய கடிதத்தை வாபஸ் பெற்றுள்ளீர்கள்? ப:- ஆம்.

கே:- அந்தக் கடிதத்தில் குறைபாடு இருந்தபடியினா லேயா அதனை வாபஸ் பெற்றீர்கள்? ப:- எனக்கு சரியான திகதி ஞாபகமில்லை. 22ஆம் திகதி வாபஸ் பெற்றோம். மீண்டும் 24ஆம் திகதி அடுத்த கடிதத்தை அனுப்பினோம்.

கே:-அதாவது, முன்னைய கடிதத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து பூரணத்துவமாக கடிதமொன்றையா இரண்டாவது முறை அனுப்பினீர்கள்? ப:- இல்லை. கூறப்பட்டுள்ள சம்பவம் தொடர்பாக (வெள்ளைக்கொடி) இலங்கை அரசால் விசாரணைகள் மேற்கொண்டு அதன் பின்னர் எதிர்காலத்தில் விளக்கம் அளிக்கப்படும் என அக்கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பினோம்.

கே:- அந்த எதிர்காலம் எப்போது? ப:- தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் முடிந்த பின்னர்.

கே:- அதாவது பதில் இன்னும் வழங்கப்படவில்லை. அந்த விடயம் குறித்து சரியான தீர்மானம் எடுக்கப்படவில்லை?ப:- ஆம்.

கே:- அந்தக் கடிதத்தில் கையெழுத்து இடப்பட்டுள்ளதா? ப:- இல்லை.

(இதன்போது தனது குறுக்கு விசாரணைகள் நிறைவு பெற்றன எனத் தெரிவித்து பிரதிவாதி சட்டத்தரணி அமர்ந்த பின்னர் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சாட்சியை மீள் விசாரணை செய்தார்.)

கே:- அதில் கையெழுத்து உள்ளதா? ப:- இல்லை. சாதாரணமாக அவ்வாறான கடிதங்களில் கையெழுத்து இடப்படுவதில்லை.

கே:- சர்வதேச நெருக்கடிகள் குழுவின் அறிக்கையானது இலங்கை தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை என்று நீங்கள் கூறுகிறீர்கள்? ப:-ஆம்.

கே:- அந்த அறிக்கையைத் தயாரித்தவர்களையும் நீங்கள் அறிவீர்கள்? ப:- ஆம்.

(இதை அடுத்து நேற்றைய விசாரணைகள் நிறைவு பெற, வழக்கு விசாரணை இன்று காலை 11 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தலைமைத்துவம் ஒன்று வேண்டும் தமிழர்கள் அப்படித்தான் நினைக்கிறார்கள்

புதிய தலைமைத்துவம் ஒன்று உருவாக வேண்டும் என்று தமிழர்கள் நினைக்கிறார்கள். தீர்வு தொடர்பில் நாம் அனைத்துத் தரப்பினருடனும் பேச வேண்டி இருக்கிறது. தீர்வு அடிமட்டத்தில் இருந்து வரவேண்டும். இதற்காக இரு தரப்பினரையும் கொண்ட குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. தமிழ் நாட்டில் இருந்து வெளியாகும் வெகுஜனப் பத்திரிகையான ஹிந்துவின் ஆசிரியர் என்.ராமுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அதிபர் மஹிந்த ராஜபக்ஷவினது முதலாவது பதவிக் காலத்தின் போது நாட்டினது எதிர்க்கட்சிகளும் வெளி உலகும் அவரைக் குறைத்து மதிப்பிட்டிருந்தன. ஆனால் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதற்கு அதிபர் ராஜபக்ஷ கைக்கொண்ட அரசியல் இராணுவ மூலோபாயம் அதனைமாற்றி அமைத்தது. தொடர்ந்து வந்த இரண்டு தேர்தல்களிலும் மஹிந்த அமோக வெற்றியீட்டியிருப்பது அவர் அரசியல் மேலாண்மையுடன் திகழ்வதற்கு வழிசெய்திருக்கிறது என்று ராம் தனது நேர்காணலின் தொடக்கத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் 19ஆம் நாளன்று மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்தினை ஆரம்பித்தார். அதன் பின்னர் முதல் தடவையாக அலரிமாளிகையில் வைத்து ஊடகவியலாளர் என்.ராமுக்கு நேர்காணல் வழங்கினார். அதில் தனது இந்தப் பதவிக் காலத்தில் எதிர்கொள்ள உள்ள சவால்கள் மற்றும் பணிகள் தொடர்பாக அவர் எடுத்து விளக்கியிருக்கிறார். ஒரு மணி நேரத்துக்கும் மேலாகத் தொடர்ந்த இந்த நேர்காணலின் முதலாவது பகுதி இது.

**கேள்வி:** உங்களது முதலாவது பதவிக் காலத்தின் போது நிறையவே சாதித்திருக்கிறீர்கள். இப்போது இரண்டாவது பதவிக் காலத்தினை நீங்கள் ஆரம்பித்திருக்கும் நிலையில் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் பெரும் எதிர்பார்ப்புக்கள் உள்ளன. உங்களின் பதில் என்ன?

**பதில்:** எனது முதலாவது பதவிக் காலத்தின் போது நான் இந்த நாட்டில் உண்மையான அமைதியினை ஏற்படுத்தியிருக்கிறேன். பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு அமைதி கொண்டுவரப்பட்டிருக்கிறது. நாட்டினை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்வதுதான் எனது தற்போதைய இலக்கு. இதனைத் தொடர்ந்து மக்களின் மனங்களை வெல்லும் முனைப்புக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இலங்கை ஒரே தேசம். இது பிளவுபட்டிருக்கவில்லை. குறித்ததொரு சமூகம் மாத்திரமல்லாது, குறித்ததொரு பிராந்தியம் மாத்திரமல்லாது அனைத்துத் தரப்பினருக்கும் இந்தப் பிரதேசங்களிற்கும் நன்மைகள் சென்று சேரும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். நாட்டினது பொருளாதாரத்தினை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்வதன் ஊடாக அனைத்து மக்களும் நன்மையடைவர்கள்.



கே: முன்னதாக அபிவிருத்தி, ஜனநாயக மயப்படுத்துதல் மற்றும் அதிகாரப்பகிர்வு என்ற மூன்று விடயங்கள் பற்றி நீங்கள் பேசியிருந்தீர்களே?

ப: இல்லை. அபிவிருத்தி முதன்மையானதொன்று. அபிவிருத்தியும் அமைதியும் இல்லாமல் நாங்கள் ஜனநாயகத்தினை அடையமுடியாது. நாங்கள் ஒரு ஜனநாயக நாடென்பதால் மக்களாட்சி முக்கியமானதொன்று. அதிகாரப் பகிர்வு என்று வரும்போது, நாங்கள் தொடர்புடைய மக்களின் எண்ண ஓட்டத்தினை முதலில் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் தங்களுக்கான கொள்கைகள், கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், மக்கள் குறிப்பாக இளைய சமூகத்தினர் மத்தியில் வேறுபட்ட பார்வைகள் உள்ளன. தமிழ் மக்கள் விரும்புவது எதனை என நாம் மீள உறுதிப்படுத்த வேண்டும். அதன் பின்னர்தான் இந்தச் செயற்பாட்டில் நாங்கள் இறங்க முடியும். அமைதி நிலவவேண்டுமெனில் நிச்சயமாக இந்த மூன்றும் அவசியமானதுதான்.

கே: கிராமப்புறங்களுக்கு நீங்கள் செல்லும் போது மக்களின் பிரதிபலிப்பு எவ்வாறுள்ளது? இந்த ஆண்டினது முற்பகுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் தொடர்ந்து இடம்பெற்ற பொதுத் தேர்தலிலும் நீங்கள் பெரும் வெற்றி பெற்றிருக்கிறீர்கள்.

ப: நான் கிராமங்களுக்குச் செல்லும் போது மக்களுடன் உரையாடுகிறேன். அவர்கள் உற்சாகத்துடனும் நட்புடனும் பழகுகிறார்கள். இதனை என்னால் உணரமுடிகிறது.

கே: அரசியல் ரீதியில் பேசுவதானால், நாட்டில் பல்வேறுபட்ட எதிர்க்கட்சிகள் இருக்கின்ற போதும், உறுதியான எதிர்க்கட்சிகள் எதுவும் உங்களுக்கில்லை. இடையில் ஜெனரல் பொன்சேகா அரசியல் களத்தில் இறங்கியிருந்தார். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற இரண்டு தேர்தல்களிலும் நீங்கள் அமோக வெற்றிபெற்றிருக்கிறீர்கள். இது போன்று அரசியல் ரீதியில் உறுதியான தலைமைப்பீடத்தை தென்னாசியப் பிராந்தியத்தின் வேறெந்த நாட்டிலும் நான் காணவில்லை. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்? இதனையிட்டு நீங்கள் திருப்தி அடைகிறீர்களா?

ப: இந்த நிலைமைக்காக நாட்டு மக்களுக்குத்தான் நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மக்கள் என் மீது நம்பிக்கை வைத்துச் செயற்படுகிறார்கள். நாட்டு மக்களுக்கு அமைதியினைப் பெற்றுக்கொடுத்தவன் நான்தான் என்பதை அவர்கள் அறிவார்கள். தற்போதைய நிலையில் அபிவிருத்தியும் அமைதியும்தான் அவர்களுக்கான உடனடித் தேவைகள். இதனைத்தான் மக்கள் என்னிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். 1.8 மில்லியன் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நாங்கள் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினைக் கொண்டிருக்கிறோம். இவை அனைத்தும் எனக்கும் எனது கட்சிக்கும் பலத்தினைத் தருகிறது. மக்கள் எதனை விரும்புகிறார்களோ அதனை நாங்கள் வழங்குவோம்.

கே: இனப்பிரச்சினை விடயத்திற்கு வருவோம். விடுதலைப் புலிகளமைப்பு இல்லாது ஒழிக்கப்பட்ட பின்னர் நீங்கள் எதிர்கொண்ட முதலாவது சவால் இடம்பெயர்ந்த 300,000 மக்களையும் முகாம்களில் வைத்து பராமரித்ததுதான். தற்போது அவர்களில் பெரும்பான்மையானவர்கள் மீளவும் குடியமர்த்தப்பட்டு விட்டார்கள். இன்றைய நிலையில் 18,000 பேர் மாத்திரமே இன்னமும் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள் என நான் நம்புகிறேன். இது தொடர்பில் என்ன கூறுகிறீர்கள்?

ப: முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் 18,000 மக்களும் தொடர்ந்தும் முகாம்களில் தங்குவதில்லை. இவர்கள் தங்களது உறவினர் வீடுகளுக்கு அடிக்கடி சென்று திரும்புகிறார்கள். கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்வதாலேயே இவர்களை மீள்குடியமர்த்துவது தாமதமாகிறது. இருப்பினும் தொடர்ந்தும் முகாம்களிலேயே தங்க விரும்புவோரைத் தவிர ஏனைய அனைவரையும் டிசெம்பர் மாத இறுதிக்குள் மீளக்குடியமர்த்தி விடுவோம்.

கே: இந்தச் செயற்பாடுகளுக்காக உள்ளிருந்தும் வெளியேயிருந்தும் கிடைக்கும் விளங்கள், ஆதரவு தொடர்பில் நீங்கள் திருப்தி அடைகிறீர்களா?

ப: ஆம்! நான் திருப்தி அடைகிறேன். அனைத்து நண்பர்களும் எங்களுக்கு உதவினார்கள். இல்லையேல் இந்த இலக்கினை எங்களால் நிச்சயம் அடைந்திருக்க முடியாது.

கே: முன்னர் உறுதியளிக்கப்பட்டது போன்று 13ஆவது திருத்தச் சட்டத்திற்கும் மேலானதான ஓர் அரசியல் தீர்வு தொடர்பில் உச்சபட்ச எதிர்பார்ப்பு இப்போது நிலவுகிறது. ஆனால் அதற்கான நடவடிக்கைகள் மந்தமடைந்துள்ளன போன்று தோன்றுகின்றனவே?

ப: நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்; இந்த விடயம் குறித்து ஏனைய அரசியல் கட்சிகளுடன் இப்போதுதான் எங்களால் பேச முடிகிறது. தேர்தலுக்குப் பின்னர் கட்சிகளுடன் நாம் பேச்சுக் களை நடத்தியிருந்தோம். அவை இப்போதும் தொடர் கின்றன. அரசியல் தீர்வு தொடர்பில் எனது மனதில் இருக்கும் எண்ணம் சில சமயம் அவர்களது எதிர்பார்ப்புகளுக்குப் போதுமானதாக இருக்காது; அவர்கள் அதனை ஏற்காமலிருக்கவும் கூடும். அரசியல் கட்சிகள் மாத்திரமல்லாது மக்களும் ஏற்கக்கூடிய தீர்வாக அது இருக்க வேண்டும்.

புதிய தலைமைத்துவம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களது சொந்தக் கிராமங்களுக்கு நாம் அவர்களை அனுப்பியதன் பின்னர் அவர்களுக்கு இந்த எதிர்பார்ப்புக்களும் நம்பிக்கைகளும் ஏற்பட்டுள்ளன. எனவே அவர்களிடம் இருந்தும் நாம் கேட்டறிய வேண்டும். அரச தரப்பிலும் எதிர்த் தரப்பிலும் இருக்கின்ற அரசியல் தலைவர்களுடன் நான் பேச்சுக்களை நடத்தி இருக்கின்றேன்.

கே: இதுதான் எனக் குறிப்பிட்டு நீங்கள் சொல்லவிட்டாலும் கூட, உங்களுடைய சிந்தனையில், எண்ணத்தில் தெளிவான ஓர் அரசியல் தீர்வு உள்ளதா?

ப: ஆம்! ஆனால், அவர்களின் கருத்துக்களையும் நான் முதலில் கேட்டறிய உள்ளேன். இரு தரப்புக்களையும் உள்ளடக்கியதான குழு ஒன்றை நாம் நியமிக்க வேண்டும். பின்னர் இவையெல்லாம் பற்றிக் கலந்துரையாட வேண்டும்.

கே: நாட்டினது எதிர்க்கட்சிகள், குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பை கணிசமான ஒத்துழைப்பை யாவது வழங்குகின்றன என்று நினைக்கிறீர்களா?

ப: (சிரிக்கிறார்) எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் தக்கவைத்துக் கொள்வதுதான் அவர்களின் இன்றைய சவாலாக இருக்கிறது. எதிர்க்கட்சிகள் எமக்கெதிரான தங்களது சுலோகங்கள் அனைத்தையும் இழந்துவிட்டன. இன்றைய களயதார்த்தத்திற்கு அமைய அவர்கள் புதிய சுலோகங்களைத் தேட வேண்டும். ஒரு வகையில் இது நல்லதுதான். ஆனால், ஜனநாயகப் பண்புகளின் அடிப்படையில் சிறிலங்காவிற்குள் அவர்கள் எங்களது செயற்பாடுகளை ஏற்கவேண்டும் என்பதையும் நினைவில் வைத்திருக்கவேண்டும். நாட்டுக்கு வெளியே என்று வரும்போது நாங்கள் அனைவரும் இலங்கையரே என்கிற அடிப்படை அம்சத்தில் ஒன்றுபட்டு எதிர்க்கட்சியினர் செயலாற்ற வேண்டும். அவர்கள் எப்போதுமே நாட்டினை மதித்துச் செயற்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு, கிழக்கில் 2 லட்சம் படையினர் குவிப்பு

# அரசின் இன அழிப்பு நடவடிக்கை வெவ்வேறு வடிவங்களில் தொடர்கிறது

## ஒரு லட்சம் விதவைகளில் பாதிப்பேர் இளம் வயதினர்

### 'பட்ஜெட்' விவாதத்தில் நேற்று சுரேஷ் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.24

கடந்த 30 ஆண்டுகளில் கொல்லப்பட்ட தமிழர்கள் ஏறத்தாழ இரண்டு லட்சம் பேர் இருக்கலாம் என்று பக்கச்சார்பற்ற கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இன அழிப்பு தற்போதும் வெவ்வேறு வழிகளில் தொடரவே செய்கின்றன.

வடக்கு கிழக்கில் ஏறத்தாழ ஒரு லட்சத்தை அண்மித்த தமிழ்ப் பெண்கள் விதவைகளாகியுள்ளனர். அவர்களில் பாதிப் பேர் இளம் வயதினர்.

இவ்வாறு நேற்றைய வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்த உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்கள் கடந்த 30 ஆண்டுகளில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சுதந்திரத்தின் பின் எத்தனை இனக்கலவரங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் எத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். 2005இல் இன்றைய ஆட்சியாளர் பதவிக்கு வர முன்னர் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற முகமூடிக்குள் ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பக்கச்சார்பற்ற கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட அல்லது காணாமற் போன இளைஞர்கள், யுவதிகள் பல்லாயிரம் பேர். மேலும் ஏறத்தாழ பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இராணுவ அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு விரட்டப்பட்டுள்ளனர். நடைபெற்ற பெரிய அளவிலான கொலைகள் தொடர்பாக அரசிடம் எந்த விதமான புள்ளிவிவரங்களும், தகவல்களும் இல்லை என்பதுடன் ஒரு சம்பவத்திலாவது குற்றவாளி தண்டிக்கப்பட்டாரா? என்றால் இல்லை! இவை எல்லாம் ஆட்சியாளரின் இனஒழிப்பு நோக்கத்தையே அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன. ஓர் இனத்தின் உறுப்பினர்களைப் பகுதியாகவோ, முழுமையாகவோ கொன்றொழிப்பது என்பது வெளிப்படையான இனவொழிப்பு நடவடிக்கையாகும்.

அதாவது ஓர் இனத்தின் ஒரு பகுதி மக்களையோ அல்லது அனைவரையுமோ உடல் ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ கடுமையான துன்பத்துக்கு உள்ளாக்குவதென்பதும் இனவொழிப்பின் இன்னோர் வடிவமாகும். அரச பயங்கரவாதம் காரணமாக கொன்றொழிக்கப்பட்ட மக்கள் போக எஞ்சியிருப்போரில் அங்கவீனர் ஆக்கப்பட்டோர், குண்டுத் தாக்குதல்களால் உடல்களில் ஷெல் துண்டுகளைத் தாங்கி நீண்டகால நோயாளிகளாக்கப்பட்டோர் பல்லாயிரம் பேர்.

தாய், தந்தையை இழந்து மன நிலை பாதிக்கப்பட்ட சிறுவர்கள், தமது பிள்ளைகளை இழந்து எதிர்காலம் பற்றிய கனவுகளையும் தமது பாதுகாப்பையும் தொலைத்து நடைப்பிணமாக வாழும் பெற்றோர்கள் பல பத்தாயிரத்தைத் தாண்டும். வடக்கு,கிழக்கில் ஏறத்தாழ ஒரு இலட்சத்தை அண்மித்த தமிழ் பெண்கள் கணவன்மாரை இழந்து வாழ்க்கையே வெறுமையாகப் போயுள்ளதுடன் தமது குழந்தைகளை வளர்க்க வழியற்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த விதவைகளில் ஏறத்தாழ பாதிப் பேர் இளம் வயதினர் ஆவர். ஆக தமிழ் மக்களின் ஒரு தலைமுறை இளைஞர் சமுதாயத்தின் பெரும்பகுதி அழித்தொழிக்கப்பட்டதன் மூலம் அடுத்த தலைமுறை உருவாக்கத்திற்கான மூலங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டிருக்கின்றன.

#### வடக்கு, கிழக்கில் 2 லட்சம் படையினர்

ஓர் இனத்தை முழுமையாகவோ அரைகுறையாகவோ அழிப்பதற்கான திட்டமிட்ட புறச்சூழ் நிலைகளை உருவாக்குதல் என்பது இனவொழிப்பின் இன்னோர் வடிவமாகும். வடக்கு, கிழக்கை இராணுவமயமாக்கி தமிழ் மக்களின் அரசியல் தலைமையையும் முடக்கி, திட்டமிட்ட இராணுவ ஆட்சியை நிலை நிறுத்துவதன் ஊடாக மக்களின் அடிப்படை உரிமைகள், ஜனநாயக உரிமைகளை மறுத்து அடிமைகளாக வாழ நிர்ப்பந்திக்கும் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. குக்கிராமங்களிலுள்ள மக்களின் குடிமனைகள் வரை பரவியிருக்கின்றனர். மக்களின் அன்றாட வாழ்க்கை, சுதந்திரமான போக்குவரத்து ஆகியவற்றை இது பாதிப்பது மட்டுமன்றி மக்களின் பாதுகாப்புக்கு - குறிப்பாகப் பெண்களின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. வடக்கு, கிழக்கில் போரின் போது மக்களின் வீடுகள், பொதுச் சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்பட்டதுடன் ஒரு பகுதி முற்றாக அழிக்கப்பட்டது.

சேதமான பெரும்பகுதி வீடுகளும் பொதுக் கட்டடங்களும் திருத்திப் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்தன. ஆனால் போர் முடிந்தபின்னர்தான் பெருமளவு வீடுகளும் பொதுக் கட்டடங்களும் இராணுவத்தினால் புல்டோசர் மூலம் தரைமட்டமாக்கப்பட்டு ஊர்கள் இருந்த அடையாளமே தெரியாமல் நிலத்துள் மூடப்பட்டன. கிழக்கில் சம்பூரும் வடக்கில் இயக்கச்சி, முல்லைத்தீவில் பல கிராமங்களும் இவ்வாறு காணாமற் போயுள்ளன.

ஆனால் சம்பூரில் வாழ்ந்த ஏறத்தாழ இரண்டாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த எட்டாயிரம் பேரில் இன்று வரை ஒருவர் கூட தமது வீடுகளில் குடியேற்றப்படவில்லை. ஆறு பாடசாலைகள், எட்டு கோயில்கள், இரண்டாயிரம் வரையான வீடுகள் ஒரு வைத்தியசாலை ஆகியவற்றைக் கொண்ட பல நூற்றாண்டு கால பழம்பெரும் குடியிருப்பு முற்று முழுதாக மண்ணுக்குள் புதைக்கப்பட்டு பத்தாயிரம் ஏக்கர் கொண்ட இவ்வூர் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளமே இல்லாமல் வெட்டை வெளியாக்கப்பட்டுள்ளது. இதை விட இவ்வூருக்கான விலாசத்தையே அழிக்கும் வகையில் தபால் அலுவலகம் மீளப் பெறப்பட்டுள்ளது.

#### வன்னியில் மக்களின் சொத்துக்கள் கொள்ளை

வன்னியில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மக்களின் சொத்துக்கள், கால்நடைகள், வாகனங்கள் ஆகியன கொள்ளையிடப்பட்டது மட்டுமின்றி வீட்டுக்கதவுகள், ஜன்னல்கள், கூரைகள் உட்பட அனைத்தும் இன்றும் மக்களின் கண் முன்னாலேயே அபகரிக்கப்படுகின்றன.

மக்களுக்கும் சிவில் அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட அன்றாட அலுவல்கள் இராணுவத்தின் தலையீடுகளாலும் இராணுவத்தினரிடம் அனுமதி பெற வேண்டிய நிலைகளாலும் அகதிகளான தமிழ் மக்களுக்கு கடும் அசௌகரியங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. வடக்கு, கிழக்கில் இராணுவ ஆட்சியானது அரசின் இனவொழிப்பு வேலைத்திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றுவதை நோக்கமாக கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது.

தம் இனவாதக் கொள்கையை செயற்படுத்துவதற்கும் மக்களைப் பணிய வைப்பதற்கும் புலிகளுடன் தொடர்பு அல்லது பயங்கரவாத நடடிக்கைகளுடன் தொடர்பு என்கின்ற சுலபமான ஒரு காரணத்தை துரும்புச்சீட்டாகப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய எதேச்சதிகார சூழ் நிலையானது வடக்கு, கிழக்கு மக்களை ஒன்றில் விரட்டியடிப்பது அல்லது அடிமைப்படுத்துவது என்கின்ற இனவழிப்பு நோக்கங்களைத் தவிர வேறு ஏதும் இருக்க முடியாது.

#### கலாசார அழிப்பு

இவற்றுக்குப் பலம் சேர்க்கும் வகையில் இன்னொருபுறம் வேகமான கலாசார அழிப்பு செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கில் இராணுவ விமானப் படை குண்டு வீச்சினால் பல நூறு கோயில்களும் தேவாலயங்களும் சேதப்படுத்தப் பட்டுள்ள சூழ்நிலையில் அவற்றைப் புனரமைத்து மக்களின் வழிபாட்டுக்கு அனுமதிப்பதற்கு மாறாக கோயில்களின் சுற்றுப்புறங்களில் இராணுவ முகாம்களை அமைப்பதும் மீதமிருக்கும் கோயில்களை அழிப்பதும் மக்கள் அவற்றைப் புனரமைப்பதற்கோ சுதந்திரமாகச் சென்று வழிபடுவதற்கோ தடைவிதிப்பது மட்டுமின்றி விலையுயர்ந்த கோயில் விக்கிரகங்களைத் திருடுவதுமே நடைபெறுகின்றது.

பௌத்தம் அரச மதம் என்ற அரசியல் யாப்பு உரிமையை கேள்விக்கிடமற்ற அதிகாரமாகப் பயன்படுத்தி பௌத்தர் இல்லாத இடங்களில் பௌத்த விகாரைகளை நிர்மாணித்தல், பழைமையும் - புனிதமும் மிக்க இந்துக் கோயில்களுக்கு அருகில் பௌத்த விகாரைகளையும் பெரும் புத்தர் சிலைகளையும் நிர்மாணித்தல், இதன் மூலம் பௌத்தர் அல்லாத மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்தலும் அவர்களின் நிலங்களை கபளீகரம் செய்தலும் தமிழ் மக்களின் கலாசார தனித்துவங்களை அழிக்கும் செயற்பாடுகளே!

யாழ்ப்பாணத்தின் மாதகலில் ஓர் புதிய பௌத்த கோயில் கட்டப்பட்டுள்ளது. இப்பொழுது ஏ-9 பாதையின் மாங்குளத்தில் புதிய பௌத்த கோயில் கட்டப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவு கச்சேரிக்கு முன்பாக பௌத்த கோவில் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

வவுனியா வைத்தியசாலையில் உள்ள நீர்த்தாங்கி உடைக்கப்பட்டு ஆளுநரின் உத்தரவின் பேரில் அங்கும் ஓர் பௌத்த கோயில் அமைக்கப்படுகின்றது. பாடல் பெற்ற பழம் பெருமை வாய்ந்த இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த இலங்கையின் ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரத்தின் முகப்பில் புதிய பௌத்த கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

#### கோணேஸ்வர ஆலயம் முன்பாக புத்தர் சிலை

ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்பாகப் பாடல் பெற்ற திருத்தலமான திருகோணமலையின் கோணேஸ்வர ஆலயத்தின் முன்பாக பெரிய புத்தர் சிலை அமைக்கப்பட்டது. இன்று தமிழ் மக்கள் தமது இறுதிக் கிரிகைகளைச் செய்கின்ற மிகவும் தொன்மை வாய்ந்த இராவணனால் தனது தாய்க்கு இறுதி கிரியைகள் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் கன்னியா வெந்நீர் ஊற்றும் பௌத்த துறவிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

அதனை விட வன்னியின் பல பகுதிகளிலும் பௌத்த கோயில்கள் உருவாகி வருகின்றன. நாங்கள் ஒன்றும் பௌத்த கோவில்களுக்கோ பௌத்தர்களுக்கோ எதிரானவர்கள் அல்லர். ஆனால் பௌத்த மக்கள் இருக்கும் இடங்களில் அவை உருவாக்கப்பட வேண்டும்.

வன்னியில் இராணுவத்தினருக்கோ பொலிஸாருக்கோ பௌத்த கோவில்கள் தேவைப்பட்டால் அது அவர்களின் முகாம்களில் அமைக்கப்பட வேண்டும். தமிழ் மக்களோ இந்துக்களோ செறிந்து வாழும் இடங்களில் அமைக்கப்படுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. அது தமிழ் இனவொழிப்பின் இன்னொரு பரிமாணமாகவே பார்க்கப்படும்.

#### கண்டிய நடனமும் சிங்கள இசையும்

இவை மட்டுமின்றி தமிழ்ப் பிரதேசங்களில் சாதாரண அரச அலுவலக திறப்பு விழாக்கள் உட்பட நடைபெறும் நிகழ்ச்சிகளில் தமிழ்ப் பாரம்பரிய இசைகளுக்குப் பதிலாக கண்டிய நடனங்களையும், சிங்கள இசைகளையும் திணித்தல் தேசிய கீதத்தை சிங்களத்தில் பாடும்படி தமிழ் மாணவர்களை நிர்ப்பந்தித்தல், பௌத்த விழாக்களுக்கு பௌத்தர் அல்லாத மக்களிடமும், வர்த்தகர்களிடமும் கட்டாயப்படுத்தி பணம் சேர்த்தல் அவ்விழாக்களுக்கு மக்களை வரும் படி வற்புறுத்தல் ஆகியவற்றின் மூலம் தமிழ்க் கலாசாரத்தின் இருப்பிற்கு அபாய விளக்கு காட்டப்படுகின்றது.

இவை மட்டுமின்றி தமிழ் மக்களின் வரலாற்றுச் சின்னங்களை அழித்தல் மற்றும் அவற்றை திரித்துக் காட்ட முற்படல் ஆகியவற்றிலும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். இவை எல்லாவற்றிக்கும் சிகரம் வைத்தாற் போல், இந்துக்களின் புனித நாளான நவம்பர் 21ஆம் திகதி தீபத் திருநாளன்று வீடுகளில் தீபமேற்றிய மக்கள் பலர் கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் இராணுவத்தினால் தாக்கப்பட்டுள்ளனர். இவையனைத்தும் வெளிப்படையான கலாசார அழிப்பின் உச்சக்கட்டம் ஆகும்.

நாட்டிற்குள் சர்வாதிகாரமான ஆட்சி முறையை முன்னெடுக்கும் அதேவேளை வடக்கு, கிழக்கில் இனவாத இராணுவத்தைப் பயன்படுத்தி இனவொழிப்பு கொள்கையை நடைமுறைப்படுத்தி வரும் இவ்வாட்சியாளர்கள்தான் இலங்கையை ஆசியாவின் அதிசயமாக்கவும், அடுத்த வருடத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை சீனாவுக்கு ஈடாக 11,12% உயர்த்துவதற்கான வரவு-செலவுத் திட்டமாகவும் இவ்வரவு செலவுத் திட்டத்தை விவரிக்கின்றனர்.

ஆனால், இலங்கையின் உள்நாட்டுக் கொள்கையும் சரி, வெளிநாட்டுக் கொள்கையும் சரி, இவர்கள் விரும்பும் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான முறையில் அமைந்ததாக இல்லை.

#### மனித உரிமை மீறல்கள் இன்னும் தொடர்கின்றன

யுத்தம் முடிவடைந்து 18 மாதங்கள் ஆன பின்னரும் கூட மனித உரிமை மீறல்கள் இன்னும் தொடரவே செய்கின்றன.

இராணுவ புலனாய்வுத்துறை என்பது இப்பொழுது தனக்கு விரும்பாத அல்லது அரசுக்கு விருப்பமற்ற ஜனநாயக அரசியல் கட்சிகளை அழித்தொழிப்பதிலேயே அக்கறையுடன் பணிபுரிகின்றது. தமது கொள்கைக்கு முரணான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேல் எப்படி வழக்குகளைச் சோடிப்பது, அவர்களை எவ்வாறு சிறைக் கம்பிகளுக்கு பின்னால் தள்ளுவது, இதன் மூலம் அவர்களை பணிய வைப்பது, அவ்வாறான கட்சிகளைச் சிதறடிப்பது இது தான் இன்று இலங்கையின் சகல புலனாய்வுத்துறையினரும் செய்கின்ற வேலையாக உள்ளது.

குடும்ப அரசாட்சியை எப்படி நிலை நிறுத்துவது, இதற்கெதிரான சக்திகளை எப்படி துவம்சம் செய்வது என்பது தான் அரசின் கவலையாக உள்ளது. அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டு, ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்கும் வேலையும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. புதிய, புதிய சட்ட மூலங்கள் மூலம் தனி நபர்களுக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்படுவதுடன், வெளிப்படைத் தன்மைக்கும் ஜனநாயக அமைப்புகளுக்கும் மூடு விழா நடைபெறுகின்றது.

#### அமெரிக்கா ஐரோப்பாவை எதிரிகளாக நோக்கும் செயல்

இது போன்றே இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையும் சர்வதேச சமூகத்தைக் கவர்வதாக இல்லை. குறிப்பாக ஜனநாயக (25 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வரவு - செலவுத் திட்டம் யார் பக்கம்?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சமர்ப்பித்த வரவு -செலவுத்திட்டம் ஸ்ரீமான் பொதுசனத்துக்கு பெரிதாக எந்த நன்மை களையும் கொண்டிருக்கவில்லை. அடிக்கடி திணிக் கப்படும் விலை உயர்வுகளால் ஏற்கனவே அல்லா டிக்கொண்டிருக்கும் சாமான்ய மக்களுக்கு சிறிதளவு விமோசனம் தானும் தரவல்ல எந்த விசேட அறிவிப் புகளும் அதில் இல்லை. ஏழை மக்களுக்கு - நலி வடைந்த மக்களுக்கு அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கான நலத்திட்டங்கள் எதுவும் பிரேரிக் கப்படவும் இல்லை.

உத்தேச வருமானம் 963 பில்லியன் ரூபாவாகத் தெரிவிக்கப் பட்டிருக்கும் போது, எதிர்பார்க்கப்படும் செலவு 1,017 பில்லியன் ரூபாவாகக் காட்டப்பட் டிருக்கிறது. துண்டுவிழும் 54 பில்லியனுக்கு ஈடு செய்ய அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்து எதுவும் கூறப்படவில்லை. அதன்மூலம் அடிக்கடி உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியா வசியப் பாவனைப் பொருள்களின் விலைகள் உயர்த் தப்படும் என்பது மறைமுகமாகச் சொல்லப்பட்டு இருக்கிறது.

சாதாரண பொதுமக்களுக்குப் பலன்தரவல்லவை என்று குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு எந்த யோச னையும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக் கப்படவில்லை.

போதாக்குறைக்கு சேவைகளுக்கு வரிவிதிக்கும் முறை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பளு மக்கள் முதுகிலேயே சுமத்தப் பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்பட்டது போன்று அரசாங்க ஊழியர்க ளுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுவதற் குப் பதிலாக அடிப்படைச் சம்பளத்தில் 5 சத வீத அதி கரிப்பு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் 1,200 ரூபா முதல் 3,140 ரூபா வரை சம் பள உயர்வு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இங்கேயும் குறைந்த பதவி நிலை அரச அலுவலர்களுக்கு வாழ்க்கைச் செலவு ஏற்றத்தை ஈடுசெய்யும் விதத் தில் சம்பள உயர்வு அமையவில்லை.

ஓய்வூதியம் பெறுவோருக்கான அதிகரிப்பும் 300 ரூபா தொடக்கம் 750 ரூபா வரை மட்டுமே வழங்கப் படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய வாழ்க்கைச் செலவில் இது ஒரு சிறுதுளியே.

மொத்தத்தில் சாமான்யர்களுக்கு வரவு - செலவுத் திட்ட அறிவிப்புகள், அவர்களின் நாளாந்த வாழ்க்கைத் துன்பங்களை நீக்கப் போவ தில்லை.

இதேவேளையில் -

விமானப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு அனைத்து வரிகளில் இருந்தும் 10 வருடங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் போக்குவரத்து வாகனங்களுக்கான இறக்குமதி தீர்வை மற்றும் வரிகள் 25 சத வீதத் தினால் குறைக்கப்படவுள்ளன.

மாதாந்தம் 50 ஆயிரம் ரூபா வருமானம் பெறு வோருக்கு வருமான வரியில் இருந்து விலக்கு அளிக் கப்படவுள்ளது.

வங்கி வைப்புக்கான வரிமுற்றாக நீக்கப்பட்டு உள்ளது.

நிதித்துறைக்கான வற்வரியும் 8 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

சமூகத்தில் மிக மேல் மட்டத்தில் உள்ளவர்களி டம் இருந்து எந்தெந்த வரிகள், எவ்வளவு வீதத்தால் உயர்தப்படும் என்பது பற்றிய எந்த அறிவிப்பும் வரவு - செலவுத்திட்ட உரையில் இல்லை. நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி செல்வந்தர்கள், பென் னம்பெரு முதலாளிகள் மீது 'கை வைக்க வில்லை.'!

மொத்தத்தில் இந்த வரவு - செலவுத்திட்டம் கீழ் மட்ட, மத்திய தர மக்கள் மீதேகஷ்டங்களையும் பளுக்களையும் ஏற்றுவதாக அமைந்திருக்கிறது.

இந்தப் பாரபட்சம் முதலாளித்துவத்துக்கு மறை முகமாகப் பக்கபலம் தருவதாகவே உள்ளது.

மேலும் -

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கான நலன்புரி திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது வர வேற்கத்தக்கதாகும். குறிப்பிட்ட மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கு 2 பில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்திருக் கிறது . எனினும் 2010 தொடக்கம் 2012 வரையான மீள்கட்டமைப்புத் திட்டத் துக்கு அரசு ஒதுக்கிய நிதி, யானைப் பசிக்குச் சோழப்பொரி போன்றதே. மொத் தத்தில் -

இந்த வரவு - செலவுத் திட்டம் சாதாரண பொது மக்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்துக்குக் குறைந் தளவு நிவாரணமும் வழங்கவில்லை என்றும் வர்த்த கர்களுக்கே நன்மை தரும் என்றும் தெளிவாகத் தெரிகிறது.

வரவு - செலவுத் திட்ட உரையில் வழமையாக அறி விக்கப்பட வேண் டிய பல அம்சங்கள், விடயங்கள் விலக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அது அரசாங்கம் சாமான்ய மக்கள் பக்கமாக வசதி படைத்தவர்களின் பக்கமாகத் தன்னிச்சையாகச் சாய்ந்து நிற்பது துலக்கமாக புலனாகிறது. இது நாட்டின் பொருளாதாரத்துக்கும், அபிவிருத்திக்கும், மக்களுக் கும் எந்தவகையிலும் உதவப்போவதில்லை.

# யாழ். நகர வர்த்தக நிலையங்களில் பொருள்களைக் காட்சிப்படுத்த முடியாது

### நெருக்கடியைக் குறைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.நகரப் பகுதியில் உள்ள வர்த் தக நிலையங்களில் பொருள்களை வெளியில் காட்சிப்படுத்த முடியாது.

யாழ்.மாநகர மேயரும் யாழ். பொலிஸ் அதிகாரியும் வர்த்தக சங் கப் பிரதிநிதிகளுக்கு நேற்றுத் திட்ட வட்டமாக அறிவித்துள்ளனர்.

யாழ்.வர்த்தக சங்கப் பிரதிநிதி களுக்கும் பொலிஸாருக்கும் மாநகர சபையினருக்குமிடையில் வர்த்தக சங்க அலுவலகத்தில் நேற்று நடை பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மேலும் எட்டப்பட்ட முடிவுகள் வருமாறு:-

யாழ்.நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் முன்பா கப் பொருள்களைக் காட்சிப்படுத்து வதால் பாதசாரிகளும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுதொடர்பாக மாநகர சபையி னரிடம் பொதுமக்கள் தமது முறைப் பாடுகளை பதிவுசெய்து வருகின்றனர்.

என்வே பொதுமக்களின் நல னைக் கருத்திற்கொண்டு இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள தாக மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ அறிவித்தார்.

அத்துடன் யாழ்.நகரப் பகுதியில் நவீனசந்தை, மின்சார நிலைய வீதி ஆகியவற்றில் உள்ள வர்த்தக நிலை யங்களுக்கு முன்னால் எவ்வளவு தூர இடைவெளிக்கு அப்பால் பொருள் களைக் காட்சிப்படுத்த வேண்டும் என் பதை வர்த்தக சங்கப் பிரதிநிதிகளும், யாழ்.பொலிஸாரும், மாநகர சபை உறுப்பினர்களும் இணைந்து இன்று புதன்கிழமை அடையாளப்படுத்த உள்ளதாகவும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

தொடர்ந்து நவீன சந்தைப் பகுதி யில்உள்ளவர்த்தகநிலையங்களுக்கும், மின்சார நிலைய வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கும் பொருள் களைக் கொள்வனவு செய்ய வரு வோர் தமது சைக்கிள்கள், மோட் டார் சைக்கிள்களைப் பாதுகாப்பாக விடுவதற்கு தனியான பாதுகாப்பு நிலையம் ஒன்று அமைப்பதாகவும் முடிவெடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம், செயலாளர் எஸ்.ஜனக்குமார், மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற் குணராஜா, ஆணையாளர் மு.செ.சரவ ணபவ மற்றும் யாழ்.பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி சமன் ஜெயசேகர, வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் ஆகி யோர் கலந்துகொண்டனர். (ம-9)

# பாடசாலை மாணவிகளுடன் சேஷ்டை புரிந்த குடும்பஸ்தர் இருவர் பொலிஸாரிடம் சிக்கினர்

### எச்சரிக்கையின் பின்னர் இருவரும் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.24

மருதங்கேணியில் பாடசாலை மாணவிகளுடன் சேஷ்டை புரிந்த குடும்பஸ்தர் இருவரை குடத் தனைப் பொலிஸார் மடக்கிப்பிடித்து கடும் எச்சரிக்கை செய்த பின்னர் விடுவித்துள்ளனர்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமை புரி யும் சிறுவர் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரின் உதவி யுடன் மேற்படி இரு நபர்களையும் பொலிஸார் மடக்கிப்பிடித்துள்ள னர்.

இது தொடர்பாக தெரிய வருவ தாவது:-

மருதங்கேணிப் பிரதேசத்தில் உள்ள அம்பன் மகா வித்தியாலயம் முடிவடையும் நேரத்தில் மோட்டார் சைக்கிளில் வரும் இருவர் வீதியில் செல்லும் மாணவிகளுடன் தினமும் சேஷ்டை புரிந்து வந்துள்ளனர்.

இது விடயம் தொடர்பாக பாதிக் கப்பட்ட மாணவிகளின் பெற்றோர் மருதங்கேணி உதவி அரசாங்க அதி பரின் பணிமனையில் கடந்த வாரம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனைக் கவனத்தில் எடுத்து அங்கு கடமை புரியும் சிறுவர் மேம் பாட்டு அபிவிருத்தி உத்தியோகத் தர் பாடசாலை முடிவடையும் நேரத் தில் வீதியில் நின்று குறித்த நடவ டிக்கைகளை அவதானித்தார்.

அத்துடன் மோட்டார் சைக்கிள் இலக்கத்தினைப் பதிவு செய்து கொண்டு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யும் பிரிவில் ஆண்டு வரிப் பணம் செலுத்தும் பட்டியலில் அவர் களின் பெயர்களைக் கண்டுபிடித்து அதனைக் குடத்தனை பொலிஸாரி டம் ஒப்படைத்தார்.

குறித்த தகவலின் படி அந்த இரு குடும்பஸ்தர்களின் முகவரி களுக்குச் சென்ற பொலிஸார் இரு வரையும் கைது செய்தனர்.

குடத்தனைப் பொலிஸ் நிலை யத்தில் பல மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்த போது இந்த இரண்டு நபர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து இனிமேல் இவ் வாறான நடவடிக்கைகளில் ஈடு படக்கூடாதென்று எச்சரிக்கை செய்த பொலிஸார் அவர்களை விடுதலை செய்தனர்.

(ம-9)

## உரும்பிராய் கிழக்கில் மருத்துவ முகாம்

கோப்பாய்,நவ.24

வலி.கிழக்கு ஆயுள்வேத பாது காப்புச் சபையினரும் வலி. கிழக்கு பிரதேச சபையினரும் இணைந்து நடத்தும் நடமாடும் இலவச மருத்துவ முகாம் உரும்பிராய் கிழக்கு, செல்வ புரம் உதயசூரியன் சனசமூக நிலை யத்தில்நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

இந்த முகாமில் பல்வேறுபட்ட நோய்கள், வாத நோய்கள் சொறி, சிரங்கு மற்றும் சிறப்பு மருத்துவ ஆலோசனைகளும் சித்த, யுனானி, அக்குபஞ்சர் முறையிலும் வழங் கப்படவுள்ளதாகவும் உரியவர்கள் கலந்து பயன்பெறுமாறும் ஏற்பாட் டாளர்கள் கேட்டுள்ளனர்.

மருத்துவ முகாமுக்கு வரும்போது 2 போத்தல்களை எடுத்துவருமாறும் கலந்துகொள்பவர்களுக்கு மூலிகை கள் சேர்க்கப்பட்ட சத்துணவுக் கஞ்சி யும் வழங்கப்படும் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஐ-73)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 9 | : | 25.11.2010 வியாழக்கிழமை |
| திதி: | : | சதுர்த்தி மு.இ.08.50 வரை |
| நட்சத்திரம் | : | திருவாதிரை மு.ப.08.47 வரை |
| [illegible] | : | 07.42-09.12 வரை |
| ராகுகாலம் | : | 01.42-03.12 வரை |

# இராணுவச் சீருடையில் மக்களை ஏமாற்றிய முன்னாள் சிப்பாய்

கொழும்பு,நவ.24

இராணுவக் கப்டன் சீருடையை அணிந்து கொண்டு, தான் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடு பட்டவர்களை உளவு பார்ப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ளதாக மக்களை ஏமாற்றி வந்த முன்னாள் இராணு வச் சிப்பாயொருவர் மொரகஹாஹேன பெலிஸாரால் அவரது சீருடையுட னேயே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தை விட்டுத் தப்பி யோடி வந்த இவர் மொரகஹாஹேன பிரதேசத்தில் உள்ள பெண்ணொரு வரை விவாகம் செய்து கொண்டு கடந்த ஒரு வருடகாலமாக இப்பிர தேசத்தில் வசித்து வந்துள்ளார்.

இக்காலப் பகுதியில் தனது சீரு டையுடன் வலம் வரும் இவர் பிர தேசத்தில் நடைபெறும் சட்டவிரோத செயல்களை உளவு பார்ப்பதற்குத் தான் நியமிக்கப்பட்டுள்ளதாக மக் களை ஏமாற்றிக் கொண்டு பல சட்ட விரோதச் செயல்களில் அவரே ஈடு பட்டு வந்துள்ளார் என விசாரணை களின் போது தெரியவந்துள்ளது.

ஹொரணை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சமன் ரத்நாயக்கவின் வழிநடத்தலின் பேரில் மொரகஹா ஹேன பொலிஸ் பொறுப்பதிகாரி கித் சிரி குமாரவின் தலைமையில் மேல திக விசாரணைகள் இடம்பெற்றன. (ம-5)

# மணல் ஏற்றிவந்த லொறிச் சாரதியை வழிமறித்து 25 ஆயிரம் ரூபா கொள்ளை

வலிவடக்கு,நவ.24

மணல் ஏற்றிவந்த லொறியை வழி மறித்த இளைஞர் குழுவினர் சாரதியின் சட்டைப்பையில் இருந்து சுமார் 25 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டதாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் சுன்னாகம் - சண்டிலிப் பாய் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

சிவில் உடையில் காணப்படும் பாதுகாப்புப் படையினர் போன்று மணல் ஏற்றி வந்த லொறியை நான்கு இளைஞர்கள் மறித்துள்ளனர்.

லொறியின் சாரதி லொறியை நிறுத்தியதும் சாரதியின் பொக்கட்டில் இருந்த பணப்பையை எடுத்துள்ள னர். இதனால் திகைப்படைந்த சாரதி அவர்களுடன் வாக்குவாதப்பட அய லிலுள்ளவர்கள் அந்த இடத்தில் கூடினர்.

இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட இளைஞர்கள் பணத்தை எடுத்துக் கொண்டு ஏனைய ஆவணங்களைக் கொடுத்து விட்டு அந்த இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(201-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு நலனுக்காகப் போரிடும் தியாகிகள் நக்ஸல்களின் போராட்டம் நியாயமானது

## பிரபல எழுத்தாளர் அருந்ததி ராய் தெரிவிப்பு

புவனேஸ்வரம், நவ. 24

நக்ஸலைட்டுகள் ஆயுதம் ஏந்திப் போராடுவதைச் சரி என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர்களின் போராட்டம் நியாயமானது என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நக்ஸலைட்டுகள், இந்தியாவின் முன்னேற்றத்திற்காகப் போராடும் தியாகிகள்.

- இவ்வாறு சமூகசேவகியும், எழுத்தாளருமான அருந்ததிராய் வெளிப்படையாக கூறியுள்ளார்.

இவ்விடயம் குறித்து புவனேஸ்வரத்தில் நடந்த விழாவில் பேசும்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

ஒரிஸா, ஜார்க்கண்ட், மேற்கு வங்கம், சதீஷ்கார் போன்ற மாநிலங்களில் ஏராளமான ஆதிவாசிகளின் நிலங்கள் உள்ளன. அவற்றை மத்திய அரசு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வாரி வழங்குகிறது.

இதனால் ஆதிவாசிகள் வசிக்க இடமின்றித் தவிக்கிறார்கள். அவர்களுக்கு அரசு நஷ்டஈடும் வழங்கவில்லை. வடமாநிலங்களில் உள்ள ஆதிவாசிகளுக்குச் சொந்தமான நிலங்களை வெளிநாடு மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விற்கப்படுவதை எதிர்த்துத்தான் மாவோ, நக்ஸலைட்டுகள் போராடுகிறார்கள்.

அரசியல் தலைவர்கள், கார்ப்பரேட் நிறுவனங்களிடம் பணம் பெற்றுக் கொண்டு ஆதிவாசிகளின் நிலத்தை விற்பதால் அவர்களை எதிர்த்து நக்ஸல்கள் போராடி வருகிறார்கள்.

இதனால் மத்திய அரசு, நக்ஸலைட்டுகளை அடக்க அதிரடிப் படையை அம்மாநிலங்களில் குவித்துள்ளது. பெரும்பாலான அரசியல்வாதிகள் தங்கள் சுய நலனுக்காகவே பதவியில் உள்ளனர். ஆனால் நக்ஸலைட்டுகள் இந்தியாவின் முன்னேற்றத்திற்காகப் போராடும் தியாகிகள் என்று சொல்லலாம்.



வெளிநாடு மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் தாங்களாகவே முன்வந்து ஆதிவாசிகளிடம் இருந்து பறித்த நிலத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

மாவோயிஸ்ட்டுகள் ஆயுதம் ஏந்திப் போராடுவதைச் சரி என்று நான் சொல்லவில்லை. அவர்கள் போராட்டம் நியாயமானது என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நக்ஸலைட்டுகளின் பிரச்சினைகளுக்கு மத்திய அரசு உடனடியாகத் தீர்வு காண்பது நல்லது. நக்ஸலைட்டுகள் விவகாரத்தில் மத்திய அரசு கடைப்பிடித்து வரும் அடக்கு முறை நடவடிக்கைகள் ஒருபோதும் பலன்தரா.

- இப்படி அவர் கூறினார்.

# தமிழினத்திற்காகத் தமிழ்த்தேசம் ஒன்று உருவாக வேண்டும் என்கின்றார் திருமா

சென்னை, நவ. 24

தமிழ் இனத்திற்காகத் தமிழ்த் தேசம் ஒன்று உருவாக வேண்டும். இதை வலியுறுத்தி சென்னையில் அடுத்த மாதம் தமிழர் இறையாண்மை மாநாடு நடத்த இருக்கிறோம் - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் எம்.பியுமான தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சேலம் மேற்கு மண்டலத்தைச் சேர்ந்த சேலம், நாமக்கல், தர்மபுரி, வேலூர், கோவை, திருப்பூர், ஈரோடு உட்பட 8 மாவட்டங்களை உள்ளடக்கிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தமிழர் இறையாண்மை மாநாடு விளக்கக் கூட்டம் சேலம் நேரு கலையரங்கில் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் திருமாவளவன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோது அவர் மேலும் கூறியவை வருமாறு -

தமிழ் இனத்திற்காகத் தமிழ்த் தேசம் ஒன்று உருவாக வேண்டும். இதை சர்வதேச சமுதாயம் அங்கீகரிக்க வேண்டும். உலகம் முழுவதும் 10 கோடி தமிழர்கள் உள்ளனர். இந்தத் தமிழ் இனத்துக்கெனத் தனியாக ஒரு நாடு கூட இல்லை.

தமிழ்த் தேசம் ஒன்று உருவாக வலியுறுத்தி சென்னையில் அடுத்த மாதம் இறையாண்மை மாநாடு நடத்த இருக்கிறோம். தமிழக அரசியலில் தி.மு.க, அ.தி.மு.கவுக்கு அடுத்த 3 ஆவது பெரிய சக்தியாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உருவாகியுள்ளது.

நாம் நடத்தும் இறையாண்மை மாநாடு வரும் சட்டமன்றத் தேர்தலில் திருப்புமுனையை ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.

அதன் மூலம் வருகிற சட்டமன்றத் தேர்தலில் நாம் போட்டியிட்டு தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

அதற்காக இறையாண்மை மாநாட்டில் திரளாக வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# 40 ரூபாவுக்காகச் சிறுவனை கொன்ற கொடூர இளைஞர்

ஆந்திர மாநிலத்தில் முதலாம் வகுப்புப் படிக்கும் பாடசாலை மாணவனை நாற்பது ரூபா பணத்துக்காக இளைஞன் ஒருவன் கொலை செய்துள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆந்திர மாநிலம் பிரகாசம் மாவட்டம் வேமுல கிராமத்தில் உள்ள அரச பாடசாலையில் முதலாம் வகுப்புப் படித்து வந்தவன் குருவாரெட்டி (வயது - 6). இவனது பெற்றோர் கூலித் தொழிலாளிகள்.

இவன் பாடசாலைக்குப் போக மாட்டேன் என்று அடம் பிடித்ததால் அவனிடம் 40 ரூபா வைப் பெற்றோர் கொடுத்து அனுப்பினர்.

இடைவேளையின்போது அவர் பாடசாலைக்கு வெளியே உள்ள கடைக்குச் சென்றான். அப்போது அவனது கையில் ரூபா 40 இருப்பதை கோட்டிரெட்டி (வயது - 18) என்பவர் பார்த்தார். உடனே அதை அவனிடம் இருந்து பறிக்கத் திட்டமிட்டார். சிறுவனை எவ்வளவோ ஏமாற்றியும் பணத்தைக் கைப்பற்ற முடியவில்லை.

இதையடுத்து சிறுவனை அங்குள்ள காட்டுப்பகுதிக்கு நைசாக அழைத்துச் சென்று 40 ரூபாவை அந்த இளைஞர் பறித்தார். சிறுவன் பெற்றோரிடம் உண்மையைச் சொல்லி விடுவானோ என்று பயந்த கோட்டிரெட்டி பாறாங்கல்லை அவன் தலையில் போட்டுக் கொன்று விட்டுத் தப்பி ஓடினான்.

இதுபற்றி வேமுலா பொலிஸார் வழக்குப்பதிவு செய்து கோட்டிரெட்டியைக் கைது செய்தனர். இச்சம்பவம் ஆந்திராவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பிரணாப்பின் சமரச முயற்சி தோல்வி 7 ஆவது நாளாகவும் சபை முடக்கம்

புதுடில்லி, நவ. 24

ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து விசாரிக்க நாடாளுமன்றின் கூட்டுக்குழு அமைக்கப்படாதவரை நாடாளுமன்றை நடத்த விடமாட்டோம் என எதிர்க்கட்சிகள் உறுதியாக இருப்பதால் மத்திய அரசுக்கு நெருக்கடி முற்றுகிறது.

குளிர்காலக் கூட்டத்தொடர் தொடங்கிய பின்னர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒரு நாள் கூட நிகழ்வுகள் முழுமையாக நடைபெற்றவில்லை. 7 ஆவது நாளாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையும் எதிர்க்கட்சிகளின் அமளியால் இரு அவைகளும் முடக்கப்பட்டன.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அவையைச் சுமுகமாக நடத்தவும் அவை முன்னவரும் நிதியமைச்சருமான பிரணாப் முகர்ஜி, 2 ஆவது முறையாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை திங்கட்கிழமை கூட்டினார். ஆனால் இந்தக் கூட்டத்தில் சமரசம் ஏற்படவில்லை.

2ஜி அலைக்கற்றை ஊழல் குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கையில் எதிர்க்கட்சிகள் பிடிவாதமாக இருந்தன. ஆனால் அதே பிடிவாதத்தோடு, எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள அரசு தரப்பில் மறுக்கப்பட்டது.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான தலைமைத் தணிக்கை அதிகாரியின் அறிக்கை மீது பொதுக் கணக்குக் குழுவுடன் ஒன்றுக்கும் மேற்பட்ட விசாரணை அமைப்புகளை இணைத்து பொது விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என அரசு தரப்பில் புதிய திட்டம் இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. ஆனால் அந்தப் புதிய திட்டத்தை எதிர்க்கட்சிகள் நிராகரித்து விட்டன.

இந்த விடயத்தில் சமரசம் ஏற்படாத நிலையில், பிரதமருடன் கலந்தாலோசித்துவிட்டு முடிவைச் சொல்கிறார் என நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்ததை அடுத்து அனைத்துக் கட்சிக் கூட்டம் கலைந்தது.

அரசு தெரிவித்த புதிய திட்டத்தை நாங்கள் ஏற்கவில்லை. எங்களது கருத்தைத்தான் எல்லா எதிர்க்கட்சிகளும் தெரிவித்தன.

நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை தேவை என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் கூறினார்.

பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படவில்லை. அடுத்த சுற்றுப் பேச்சு நடத்த ஒப்புக்கொண்டோம் என்று சிவசேனைத் தலைவர் மனோகர் ஜோஷி தெரிவித்தார்.

பல்வேறு முறைப்பாடுகளில் ஏற்கனவே 4 தடவைகள் நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இப்போது ஏன் தயங்குகிறார்கள் எனத் தெரியவில்லை என்று ஐக்கிய ஜனதாதள தலைவர் சரத் யாதவ் கூறினார்.


## உடன் தேவை

### திடீர் பரிசோதகர்

வடபிராந்திய தனியார் பேருந்து உரிமையாளரின் சங்கங்களின் ஒன்றியத்தின் திடீர் பரிசோதனைப் பணிக்கு பணியாளர் தேவை. இப்பணியில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தகைமையுடையோர் கீழுள்ள முகவரிக்கு சுயவிவரக் கோவையுடன் 30.11.2010 ஆம் திகதிக்கு முன் நேரில் வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: சாவகச்சேரி, கொடிகாமம், பளை பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

யாழ்.மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் இணையம்,
10/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



எமது முன்னாள் பங்குத் தந்தை
அருட்பணி பேராசிரியர்
## ஞானமுத்து பிலேந்திரன்
அவர்களை
## உளமார வாழ்த்துகின்றோம்



யாழ்.மறை மாவட்டத்தைச் சேர்ந்தவரும் யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமியத்துறைத் தலைவருமாகிய அருட்பணி ஞானமுத்து பிலேந்திரன் அவர்கள் 11.11.2010 அன்று பேராசிரியராக உயர்பதவி பெற்றதை முன்னிட்டு அவருக்கு உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்
பங்குத் தந்தை, பங்கு மக்கள்
அருட் பணிச்சபையினர்,
பக்திச் சபையினர்.
புனித அன்னாள் ஆலயம்
பாண்டியன்தாழ்வு.

(106399)



## Computer Express
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

6 ஆண்டு நிறைவை முன்னிட்டு
அதிரடிக் கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 1000/= 3 Months | Diploma in Desktop Publishing 1000/= 4 Months | Diploma in Web Page Designing 1000/= 3 Months |
| Diploma in Graphic Designing 1000/= 4 Months | Diploma in Hardware Engineering 1000/= 3 Months | Diploma in Auto CAD 1000/= 3 Months |
| Diploma in Accounting Package 1000/= 3 Months | Diploma in Computer Science 1000/= 4 Months | Honors Diploma in Computer Science 1000/= 3 Months |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/-
Diploma in Multimedia 4Months 1000/-

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.

Batch i - 24/11/2010- 9am or 3pm
Batch ii - 26/11/2010- 9am or 3pm
Batch iii - 27/11/2010- 9am or 3pm
Batch iv - 28/11/2010- 9am or 3pm

30.11.2010க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3:30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

முதன்முறையாக...
Full Version Software Tally-9.0
Tallyஇல் Date மாற்றலாமா???
NEW Batch :- Saturday (27.11.2010) & Sunday (28.11.2010) 3pm to 4pm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் ஆறு துறைகளை அபிவிருத்தி செய்க

## உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.24

வடமராட்சி கிழக்கு, அம்பன் பிரதேசத்தில் 6 துறைகளில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளுமாறு உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீட்டுவசதி, முன்பள்ளி வசதி, பாடசாலைகள், நீர்வழங்கல், வீதிகள் புனரமைப்பு, சுகாதார வசதிகள் ஆகிய 6 துறைகளில் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பொதுமக்கள் உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக உலக வங்கிப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அம்பன் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் துரித மீட்சித் திட்டத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளர் ச.குகதாஸ் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வேறு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் உதவிகள் தொடர்பாகக் கேட்கப் பட்ட போது,

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவையும் ஒவ்வொரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பொறுப் பேற்றுக் கொண்டன. அவை இன்னமும் ஜனாதிபதி செயலணியின் அனு மதியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும், ''பாசிக்'' நிறுவனத்தினால் மட்டும் கடனடிப்படையில் 65 மீன்பிடி படகுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இவற்றிற்கான பயனாளிகள் தெரிவும் மீள் குடியமர்வுக்கு முன்னராகவே இடம் பெற்றது என்று பதிலளிக்கப்பட்டது.

அத்துடன் ஆழியவளை, வத்திராயன்கிராம அலுவலர்பிரிவுகளை எந்த நிறுவனங்களும் பொறுப்பேற்கவில்லை எனவும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த உலக வங்கிப் பிரதிநிதி,

''அபிவிருத்தி என்பது தனியே நிதியை வழங்குவதில் தங்கியிருக்கவில்லை. அது மீளக்குடியமர்ந்த மக்களின் சமூகப் பங்களிப்பு மற்றும் செயற்பாட்டில் தான் தங்கியுள்ளது. வடக்கின் துரித மீட்சித் திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் விடயங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக இலங்கை அரசின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு முன்னர் உங்களின் கருத்துக்களை அறிவதற்காகவே இந்தக் கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தியுள்ளோம்''- என்றார்.

இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு பல்வேறு தேவைகள் உள்ளன என்பதை நன்கு அறிந்துள்ளார் எனவும், எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் நிறைவு செய்ய முடியாது எனவும் முன்னுரிமை அடிப்படையில் எந்த வசதிகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (த-15)

# வருமானவரி சம்பந்தமான ஆவணங்களை உடன் திணைக்களத்துக்கு அனுப்புக

## யாழ்.பிராந்திய பொறுப்பதிகாரி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.24

வருமானவரி விவரத்திரட்டுப் படிவம், பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு மற்றும் ஆவணங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ். பிராந்திய பணிமனைக்கு அனுப்பி வைக்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.




இவ்வாறு உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ். பிராந்தியப் பொறுப்பதிகாரி க.இராசையா அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணப் பிராந்திய பணிமனையில் வருமான வரிக் கோவை உடையவர்கள் அனைவரும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குரிய விவரத்திரட்டுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வருமானம் தொடர்பான விவரங்களை 2009/2010 ஆம் வரி மதிப்பாண்டுக்கான விவரத் திரட்டில் வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எனவே, முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விவரத்திரட்டுப் படிவத்துடன், வரிமதித்தல் கொடுப்பனவுப் பணப் பற்றுச் சீட்டு மற்றும் பிற ஆவணங்களுடன் யாழ்ப்பாணப் பிராந்தியப் பணிமனைக்கு நேரிலோ, அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். இவற்றை எதிர்வரும் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

குறித்த திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது பிழையான விவரத்திரட்டை வழங்கும் நபர் மீது தண்டம் விதிப்பதற்கும் சட்டத்தில் இடமுண்டு என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்- என்றார். (ஒ-14)

# கட்டுடைக்கு மீண்டும் குடிதண்ணீர் விநியோகம்

கட்டுடைப்பகுதி மக்களின் குடிதண்ணீருக்கான வரிப்பணத்தைத் தொடர்ந்து செலுத்துவதற்கு யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவைத் தலைவரும், ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தருமான எஸ். சிவகுமார் முன்வந்துள்ளார். இதனைத் தொடர்ந்து தடையின்றி குடிதண்ணீர் வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையும் முன் வந்துள்ளது. குடிதண்ணீருக்காக சிரமப்பட்ட கட்டுடைப் பகுதி மக்களின் நலன் கருதி தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபைகுழாய் மூலம் கட்டுடைச் சந்தியில் அமைக்கப்பட் டுள்ள நீர்த்தொட்டிக்கு குடிதண்ணீர் வழங்கிவந்தது. குடிதண்ணீருக்கான வரிப் பணத்தை இந்தப் பகுதி மக்கள் செலுத்தத் தவறியதால் மேற்படி சபையால் குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தது. (201-115)

# யாழ். பல்கலைக்கழக பொறியியல்பீட இணைப்பாளராக பேராசிரியர் ஹூல்

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்படவுள்ள பொறியியற்பீடத்தின் இணைப் பாளராக பேராசிரியர் எஸ்.ஆர். எச்.ஹூல் உத்தியோகபூர்வமாக கடந்த 18 ஆம் திகதி நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பொறியியல்பீடம் அமைப்பதற்கான பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்தல், பொறியியல் பீடத்தின் இயக்கத்திற்கான தேவைகள், நிதி ஆதாரங்களை முன்மொழிதல், இந்தியாவின் நிதி உதவியைப் பெற்றுப் பீடத்தை உருவாக்கும் சாத்தியப்பாடு பற்றிய அறிக்கை தயாரித்தல் போன்ற உடனடிப் பணிகளை இவர் மேற்கொள்ளவுள்ளார்.

பீடம் அமைக்கப்படும் போது ஏற்படுத்த வேண்டிய துறைகள் பற்றிய சிபார்சுகளும் இவரால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொறியியல் பீடம் அமைப்பதற்கான பணிகளை யாழ்.பல்கலைக்கழகத்தில் வழங்கப்படவுள்ள அலுவலகத்திலிருந்து இவர் மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய வெளியுறவுக்கான அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரும்போது யாழ். பல்கலைக்கழகப் பொறியியற்பீட உருவாக்கத்துக்கு இந்தியா எந்த வழிகளில் உதவ முடியுமென பேராசிரியர் ஹூல் திட்ட அமுலாக்கல் அறிக்கை வழங்கவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்காவால் தெரிவிக்கப்பட்ட பொறுப்புக்களுக்கு அமைய பேராசிரியர் ஹூல் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். (ம)

# வலி.கிழக்கு மக்களுக்கான இலவச நடமாடும் சேவை

நாவற்குழி,நவ.24

நீதி அமைச்சின் ஏற்பாட்டில் வலிகாமம் கிழக்கு பிரதேச மக்களுக்கான இலவச நடமாடும் சேவை எதிர்வரும் 28 ஆம் திகதி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்கள் தேசிய அடையாள அட்டை, காணி உறுதிகள், முதியோர் அடையாள அட்டை, ஓய்வூதியம், காணி போன்ற பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வுகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே மக்கள் மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக நடமாடும் சேவையில் தொடர்பு கொண்டு தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

கொழும்பிலுள்ள திணைக்களங்களின் உயரதிகாரிகள் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றி பிரதேச செயலக அதிகாரிகளுடன் இணைந்து பொது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவுவார்கள்.

இந்த நடமாடும் சேவை நடத்துவது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கும், பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கும் இரு நாள் செயலமர்வுகள் கடந்த செப்ரெம்பர் மாதம் நடத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எதிர்வரும் 27 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தென்மராட்சிப்பிரதேச மக்களுக்குரிய நடமாடும் சேவை நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ம-201-121)

# கலாசார மண்டபம் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.24

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனைக்கு அண்மையாக புதிய கலாசார மண்டபம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான காணி, உலர் உணவுத்திட்டத்தின் கீழ் மண் போட்டு நிரவப்படுவதுடன் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (204-7)

# வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் சொந்தக் காணியில்

சண்டிலிப்பாய்,நவ.24

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் அமைப்பதற்கான காணி கொள்முதல் செய்வதற்கு மானிப்பாய் வர்த்தகர் சங்கம் பிரதேச சபையிடம் 3 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

மானிப்பாய் பட்டினசபை இயங்கி வந்த சிறிய கட்டடத்தில் எதுவித வசதியுமின்றி இடநெருக்கடி மத்தியில் இயங்கிவரும் மேற்படி பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட இருக்கிறது: இதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டு மதிப்பீட்டு வேலைகளும் முடிவடைந்துள்ளன.

பிரதேச சபை இயங்கும் பகுதியில் கட்டடம் அமைப்பதற்கான காணி வசதி இல்லாததினால் அருகாமையிலுள்ள சிவன் கோயிலுக்குச் சொந்தமான காணியில் ஒரு பகுதியை வாங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி பொது மக்களிடமிருந்து கோரப்பட்டதைத் தொடர்ந்து பல வர்த்தகர்களும் பொதுமக்களும் நிதி வழங்கி வருகின்றனர். இந்த நிலையில் மானிப்பாய் வர்த்தகர் சங்கம் 3 லட்சம் ரூபாவை பிரதேச சபையிடம் வழங்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை மானிப்பாய், சோதி வேம்படி பாடசாலையில் இடம்பெற்ற மானிப்பாய் வர்த்தகர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் வைத்து சங்கத் தலைவர் இதற்கான காசோலையை செயலாளரிடம் வழங்கியுள்ளார்.

மேற்படி சங்கம் மத்திய சந்தை அமைப்பதற்காக 7½ பரப்புக் காணியையும் வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (201-115)

## விழாவின் அழைப்பு....



கௌரவிப்பு- பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் சுன்னாகக் கிளை முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார், சிறப்பு விருந்தினரான பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எம்.திருத்தேவி, பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஏ.எம்.ஜே.றீற்றா ஆகியோர் 'பாண்ட்' வாத்தியத்துடன் அழைத்து வரப்படுகின்றனர். பிரதம விருந்தினர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (204-130)

# வல்லை இரும்புப் பாலத்தில் சறுக்கி விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.24

வல்லை இரும்புப் பாலத்ினூடாகப் பயணம் செய்யும் மக்கள் சறுக்கி விபத்துக்குள்ளாகி வரும் சம்பவங்கள் தினமும் அதிகரித்து வருகின்றன.

தற்போது பெய்துவரும் மழை, பாலத்தில் வாகனங்களின் ஒயில் ஒழுக்கு ஆகிய காரணங்களால் சறுக்கல் ஏற்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் மேற்படி இரும்புப் பாலத்தில் சறுக்கி விழுந்து காயப்பட்டார். (201-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளாவெளி இந்து மயான புனரமைப்பு ஆரம்பம்

பண்டத்தரிப்பு, நவ.24

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக எல்லைப் பரப்பில் உள்ள விளாவெளி இந்து மயானத்திற்கு அபிவிருத்திச் சபை தெரிவு செய்யப்பட்டு மேற்படி மயானத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மேலும் மயானத்தில் சடலங்களை (பெரியவர்) தகனம் செய்வதற்கு ஐந்நூறு ரூபாவும், சிறுவர் சடலங்கள் புதைப்பதற்கு 250 ரூபாவும் அறவிடப்படுவதாக அதன் தலைவர் வை.சிவபாலன் தெரிவித்தார். மயானத்தின் தெற்கு பக்கத்தில் மதில் அமைத்து கேற் போடுவதன் மூலம் இறந்த மிருகங்களை ஒழுங்கற்ற முறையிலும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் விதத்திலும் புதைப்பதைக் கட்டுப்படுத்த முடியும். பதிலாக மயானத்தின் ஒரு பக்கத்தில் மிருகங்களைப் புதைப்பதற்கு 250 ரூபா அறவிடவும் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தலைவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை மயானத்திற்கு வருபவர்களுக்கு நிழல்தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள மடத்தில் கால் நடைகளை இரவு நேரங்களில் கட்டி அசுத்தம் செய்வதி னால் சடலங்களை தகனம் செய்ய வருபவர்கள் மயானத்தின் நிலையைக் கருத்திற்கொண்டு அதற்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர் எனவும் அவர் கவலை தெரிவித்தார். (201-130)

## சமுர்த்தி பயனாளிகளுக்கான வீடுகள் ஜனாதிபதி பதவியேற்பன்று கையளிப்பு

தென்மராட்சி,நவ.24

சமுர்த்தி அதிகார சபையின் 'திரிய பியஸ' வீட்டுத் திட்டத்தின் கீழ் வரணி கரம்பைக் குறிச்சியில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வையொட்டி பயனாளியிடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன. 'திரிய பியஸ' வீட்டுத்திட்டத்தின் கீழ் தென்மராட்சி சமுர்த்தி வலயங்கள் நான்கிலும் தலா மூன்று வீடுகள் வீதம் 12 வீடுகள் பிரதேச மகா சங்கத்தினரால் நிர்மாணிக்கப்படுகின்றன.

இவற்றில் வரணி சமுர்த்தி வலயத்தைச் சேர்ந்த கரம்பைக் குறிச்சியில் நிர்மாணிக்கப்பட்ட வீடே கையளிக்கப்பட்டது. தென்மராட்சி சமுர்த்தி மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் பயனாளியிடம் கையளித்தார். இந்த நிகழ்வில் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் , சமுர்த்தி முகாமையாளர் (தலைமைப்பீடம்), ப.பாலகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். அன்றையதினம் வரணி வலய சமுர்த்தி வங்கி வளாகத்தில் விருந்தினர்களால் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (201-207)




## வாக்காளர் பதிவு 2010

### வாக்களிப்பதற்கு பதிவு செய்து விட்டீர்களா?

- ✓ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் 2010 நவம்பர் 30ம் திகதி வரை தொடரும்.
- ✓ மேலதிகத் தகவல்கள் மற்றும் படிவங்களை பெற்றுக் கொள்ள இன்றே உங்கள் கிராம சேவை அலுவலர் அல்லது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை அணுகுங்கள்.

இத் தகவலை உங்களுக்கு வழங்குவோர்:

CPA

minority rights group international

## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **782**

சீட்டிழுப்பு திகதி **22.11.2010**

எழுத்து: **J**

வெற்றி இலக்கங்கள்: **10 37 58 64**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 27,441,156.80 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 02 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 16 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 305 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 650 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15529 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8910 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 221496 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 35153 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,622,280.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 27,537,413.60

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**


234/2, காலி வீதி, கொழும்பு 03.

தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம் (பேபி)



மலர்வு 12.01.1942





உதிர்வு 25.10.2010

அன்பிலே தெய்வமாக, அறிவிலே ஆசானாகப்
பண்புடனே எமை வளர்த்துப் பாசப்பிணைப்புடனே
பார்புகழ நாம் வாழ எல்லாம் எமக்களித்து
இன்பமாக வாழ்க்கையில் இறையடி சேர்ந்தாயே!
என்றும் நாம் மறவோம்- நெஞ்சிருக்கும்வரை
உம் நினைவால் வாழ்ந்திருப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

36, சின்னாலன்கண்டு லேன்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பிடங்கள் அமைத்துக் கொடுக்காமையால் தறப்பாள்களின் கீழ் பன்னங்கண்டி மக்கள் அவதி

கிளிநொச்சி,நவ.24

கிளிநொச்சி. பன்னங்கண்டியில் மக்கள் மீள்குடியேறிய போதிலும் இருப்பிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராம மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஒருவருட காலம் நிறைவடைந்த போதிலும் 'யுனிசெப்' நிறுவனத்தால் வழங்கப்பட்ட தறப்பாள் கொட்டகைகளிலேயே இவர்களின் வாழ்க்கை தொடர்கிறது. இந்தக் கிராமம் கிளிநொச்சியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் இருப்பதால் அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்கள் இதுவரை இங்கு வரவில்லை. நலன்புரி நிலையத்தில் இருந்து வரவழைக்கப்பட்டபோது வழங்கப்பட்ட தறப்பாளினைக் கொண்டே இவர்கள் தாமாகத் தமது குடிமனைகளை அமைத்துள்ளனர். இந்தத் தறப்பாள்களும் நலாபுறமும் கிழிந்த நிலையில் காணப்படுவதால் கொட்டில்களுக்குள் மழை நீர் தேங்கி நிற்கின்றது.

இதன் காரணமாகச் சிறுபிள்ளைகள் தொற்று நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

அன்றாடம் கூலிவேலை செய்து பிழைக்கும் மக்களே அதிகமாக இக்கிராமத்தில் வசிப்பதால் உரிய நிறுவனங்கள் இவர்களுக்குரிய இவ்விடங்களை அமைத்து வழங்க வேண்டுமென இந்த மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-313)

## சேவாலங்கா உதவி

முல்லைத்தீவு,நவ.24

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் கற்சிலைமடு கிராம சேவை அலுவலர் பிரிவு மக்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தினால் வாழைக் குட்டிகள் வழங்கப்பட்டன.

சேவாலங்கா நிறுவனம் மீள்குடியேறிய மக்களுக்கு மேட்டுப்பயிரான உப உணவுச் செய்கைக்கும் உதவிகளை வழங்கி வருகின்றது.

அத்துடன் தற்காலிக வீடுகள் மலசல கூட வசதிகள் இல்லாதோருக்கும் அவைகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. (க-500)

## கற்சிலைமடுவுக்கான பஸ் சேவையை கெருடமடுவரை நீடிக்க கோரிக்கை


முல்லைத்தீவு,நவ.24

யாழ்ப்பாணத்திலிருந்து முத்துஐயன் கட்டு ஊடாக கற்சிலைமடுவை வந்தடையும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பஸ் வண்டிச் சேவையை கெருடமடுவரை நீடிக்குமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பஸ்வண்டி கற்சிலைமடுவுடன் திரும்பிச் செல்கின்றது. இதனால் நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் கெருடமடுவில் வசிக்கும் மக்கள் ஒட்டுசுட்டானுக்கு வந்தே பஸ்ஸைப் பிடிக்க முடிகின்றது. இதற்காக இந்த மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஆகவே இந்த பஸ் சேவையை கெருடமடுவரை நீடித்தால் மீள்குடியேறிய மக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள் என்றும், இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ்.சாலையிடம் மக்கள் கேட்டுள்ளனர். (க-500)

## மறுக்கப்படும் மனித உரிமை .....



சட்டம் வழிகாட்டட்டும்:-மனித உரிமை அடிப்படைச் சட்டம் தொடர்பான செயலமர்வு கிளிநொச்சியில் நடைபெற்றபோது கலந்து கொண்டவர்கள் மத்தியில் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் உரையாற்றிக் கொண்டிருக்கிறார். (9-15)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 36 பேர் கைது

மன்னார்,நவ.24

மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்ற 36 பேரை மன்னார் பொலிஸாரின் உதவியுடன் இலங்கை மின்சார சபை அதிகாரிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி கே. ஜீவராணி குற்றத்திற்கமைவாக ஒவ்வெருவருக்கும் தலா 16 ஆயிரம் ரூபாய் முதல் 18 ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதித்தார்.

மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோத மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபை அதிகாரிகள் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொண்ட திடிர் சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ம)

## முன்பள்ளிகள் சீராக இயங்காததால் சிறார்களின் கல்வி நிலை பின்னடைவு

கிளிநொச்சி,நவ.24

கிளிநொச்சி பன்னங்கண்டிக் கிராமத்தில் முன்பள்ளிக் கல்வியைப் பெறுவதில் சிறார்கள் சிரமத்தை எதிர்கொள்கின்றார்கள்.

இந்தக் கிராமத்திலே 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது மீள்குடியமர்ந்துள்ளன. இவர்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் வழங்கப்படாத நிலையில் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். முக்கியமாக முன் கல்வியைப் பெறமுடியாத நிலையில் சிறார்கள் உள்ளமை இவர்களின் மனங்களில் வேதனையைத் தோற்றுவித்துள்ளது.

தற்போது இந்தப் பகுதியில் ஒரு முன்பள்ளியே உள்ளது. அதுவும் சீரானமுறையில் இயங்குவதில்லை. இதனால் இங்கு வாழும் சிறார்கள் முன்பள்ளிக் கல்வியைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். ஆகவே தமது பிள்ளைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு முன்பள்ளிகளைச் சீராக இயங்க வைக்குமாறு இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-313)

## ஒட்டுசுட்டானில் வளர்ப்புக்கோழிகள் நோயினால் இறக்கும் பரிதாபம்

முல்லைத்தீவு,நவ.24

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வளர்ப்புக் கோழிகள் ஒரு வித நோயினால் இறப்பதைக் கண்டு மீள்குடியேறிய மக்கள் வேதனையடைகின்றனர்.

மீள்குடியேறிய இப்பகுதி மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கோழிக்குஞ்சுகளை வளர்க்கத் தொடங்கினர். இவை ஓரளவு வளர்ந்துள்ள நிலையில் நோயினால் பாதிக்கப்பட்டு இறந்து வருகின்றன. ஆனால் கோழிகளுக்கு வரும் நோய்களைத் தடுப்பதற்கான மருந்துகள் எதுவும் இதுவரை தமக்கு வழங்கப்படவில்லையெனவும், எவரும் வந்து பார்வையிடவில்லை எனவும் இந்த மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

கால்நடை வைத்தியர் மாதத்தில் இருமுறையாவது இந்தப் பகுதிக்கு வந்து கால் நடை அபிவிருத்தி மற்றும் கால் நடைகளைப் பீடிக்கும் நோய் தொடர்பாக ஆலோசனை வழங்க வேண்டுமெனவும் உரிய மருந்துகளை விநியோகிக்க வேண்டுமெனவும் இவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து மீள்குடியேறிய இந்த மக்களின் வாழ்வில் ஒளியைக் காட்ட வேண்டியது அதிகாரிகளின் பொறுப்பெனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகின்றனர். (க-500)

வன்னி வலம்

## சாரதா சேவாச்சிரமம் உதவி

பருத்தித்துறை,நவ.24

பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் கிளிநொச்சி உருத்திரபுரம் திருக்குடும்ப கன்னியர் மட மாணவர் இல்லத்திற்கு சுமார் 2 லட்சம் ரூபா செலவில் பல உதவிகளை வழங்கியுள்ளது.

மாணவர் இல்லத்திற்கு மின் இணைப்பு வசதியையும் நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றையும், தொலைத் தொடர்பு வசதிக்காக சீ.டி.எம்.ஏ.தொலைபேசியினையும் வழங்கியுள்ளது. (201-190)

## முத்துஐயன் கட்டிலிருந்து முல்லைத்தீவுக்கு குறுகிய தூர பேருந்து சேவை அவசியம்

முல்லைத்தீவு,நவ.24

முத்துஐயன்கட்டு, கற்சிலைமடு, கெருடமடு, ஒட்டுசுட்டான் ஊடாக முல்லைத்தீவுக்குச் சென்று திரும்பும் வகையில் குறுகிய தூரம் பேருந்து சேவையை நடாத்துமாறு இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

தற்போது இப்பகுதிகளிலிருந்து உதவி அரச அதிபர் பணிமனை, தபாற்கந்தோர், வங்கிகள், வைத்தியசாலை ஆகியவற்றுக்குச் செல்லும் மக்கள் ஒட்டுசுட்டானில் பேருந்துக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

அல்லது தனியார் வாகனங்களை அதிக பணச் செலவில் வாடகைக்கு அமர்த்திச் சென்று வருகின்றனர். பத்து ரூபா செலவில் போகவேண்டிய தமது வீடுகளுக்கு இவர்கள் நூற்றி ஐம்பது தொடக்கம் இருநூறு ரூபா செலவழிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

நோயாளிகளும், வயது முதிர்ந்தவர்களும், தாய்மார்களும், கர்ப்பிணிப் பெண்களும் ஒட்டுசுட்டான் சந்தியிலே நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் பல சிரமங்களையும் இவர்கள் எதிர்கொள்கின்றனர்.

எனவே இந்தப் பகுதி மக்களின் வசதிகருதி இந்த குறுகிய தூர பேருந்து சேவையை ஆரம்பிக்குமாறு இந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-500)

## கிளிநொச்சி கணேசபுரத்தில் இரு வீடுகளில் ஒரே இரவில் தாலிக்கொடி, நகைகள் திருட்டு

கிளிநொச்சி,நவ.24

கிளிநொச்சி கணேசபுரத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இரண்டு வீடுகளில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த இரு வீடுகளிலும் வீட்டினுள்ளோர் அயர்ந்து உறங்கிய வேளையிலேயே திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஒரு வீட்டில் 10 பவுண் பெறுமதியான தாலிக்கொடி, காப்புக்கள், 15 ஆயிரம் ரூபா பணம், கைத்தொலைபேசி, நிவாரணத்திற்கு வழங்கப்பட்ட வீட்டுப் பாவனைப் பொருள்கள் என்பனவும், அடுத்த வீட்டில் சைக்கிளும் திருடப்பட்டுள்ளன.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வீட்டிலுள்ளோர் அதிகாலை 2 மணியளவில் மழை பெய்வதைக்கண்டு எழுந்து பார்த்த போது வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் வண்டியைக் காணாது திகைத்து அடுத்த வீட்டாரையும் எழுப்பிப் பார்த்தபோது அவர்களின் வீட்டிலும் திருட்டு இடம் பெற்றுள்ளமை தெரிய வந்தது.

பின்னர் வீட்டுக்காரர்கள் அயலில் தேடிய போது பக்கத்திலுள்ள வெறும் வளவொன்றில் சைக்கிள் காணப்பட்டது. அத்துடன் பாழடைந்த வீடொன்றில் தங்க நகைகள் வைக்கப்பட்டிருந்த கைப்பை சேதமாக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. கைத்தொலை பேசியின் சிம் அட்டையும் வீசப்பட்டிருந்தது.

இந்தப் பகுதிகளில் உள்ள அநேகமான வீடுகள் கதவுகளின்றிப் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதால் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியதோர் சந்தர்ப்பம்

தனியார் மற்றும் பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய இடம் யாழ்.நகர மத்தியில் உண்டு.

தொடர்பு: 0771397361 (106306)


## மரண அறிவித்தல்



### சிதம்பரப்பிள்ளை கதிரவேலு

சாவகச்சேரி நுணாவில் மத்தியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கதிரவேலு 21.11.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் அம்பிகாவதியின் அன்புக் கணவரும், சுரேஸ்குமார் (சுவிஸ்), றமேஸ்குமார், மிதுளா(ஆசிரியை, நீர்கொழும்பு அல் ஹிலால் ம.வி), சியாமளா (உபஅதிபர், ஹோலிறோசறி தமிழ் வித்தியாலயம், கொழும் பு- 2) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமிர்தாம்பிகையின் (கனடா) அன்புச்சகோதரனும், சுமதி, செந்தில்நாதன், கணராஜன், தெய்வேந்திரன், இரவீந்திரன், ராஜேந்திரன், கஜேந்திரன், செல்வேந்திரன், நளாயினி, தர்மேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஷ்மிதன், சுருதி, அபிஷகா, நிபுணாஷ் ஆகியோ ரின் அன்புப் பாட்டனாரும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சிவஞானம், கமலாம்பிகை, ஞானாம்பிகை, சிவபாதம், நீலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.11.2010) வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
P.கணராஜன் (மருமகன்)
T.P: 0112361975

No. 25, வவசட்பிளேஸ்,
கொழும்பு- 06. (106387)

## அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

அச்சுவேலி மத்திய கல்லூரியின் புதிய அதிபராக வே.அரசகேசரி வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரிப் பிரதி அதிபராக முன்னர் கடமையாற்றியவர் குறிப்பிடத்தக்கது. (201-72)

## மரக்கன்று நடும் நிகழ்வு

ஊர்காவற்றுறை, நவ.24

நாட்டுக்கு நிழல் தரும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகத்தினால் 76 மரக்கன்றுகள் வீதியோரங்களிலும் ஆலயங்களிலும் அண்மையில் நடப்பட்டன.

இந்த நிகழ்வு வேலண்ணப் பிரதேச சபையின் செயலாளர் கெ.தவராசா தலைமையில் நடைபெற்றது. (204- 325)

## ஸ்தாபகர் நினைவு தினம்

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்ற ஸ்தாபகர் அமரர் சண்முகம் ஞானப் பிரகாசத்தின் நினைவு தினமும் மரம் நடும் நிகழ்வும் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்ற அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தலைவி திருமதி ருக்குமணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலாளர் ம. பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வரவேற்புரையை மன்றத்தின் உப தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் நிகழ்த்துவார். தொடர்ந்து நினைவுப் பேருரையை இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.பஞ்சலிங்கம் வழங்குவார். (201-26)

## ஆலயக் குடிதண்ணீர் கிணற்றை அசுத்தமாக்க வேண்டாமென அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.24

கொழும்புத்துறை மேற்கு, இலந்தைக்குளம் ஆலயக் குடிதண்ணீர் கிணற்றை அசுத்தமாக்க வேண்டாம் என ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர்.

இப்பிரதேச மக்களின் குடிதண்ணீர் தேவைக்குப் பயன்படுத்தப்படும் இந்தக் கிணற்றை சிலர் இரவுவேளைகளில் அசுத்தப்படுத்தி வருகின்றனர். சிவயோக சுவாமிகளின் சமாதி கோயிலுக்கும் ஆயலத்திற்கும் இடைப்பட்ட இந்த புனித பிரதேசத்தில் அமைந்தி ருக்கும் நன்னீர்க் கிணற்றை இப்பிரதேச மக்கள் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (201-26)

## கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வெள்ளவத்தை இராம கிருஷ்ண மண்டபத்தில் நடைபெறும். கொக்குவில் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாட்டில் கொழும்புத் தலைவர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் அ.அகிலதாஸும் சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் பஞ்சலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளர்.


## இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்

## வழங்குநர்களைப் பதிவு செய்தல்- 2011

## REGISTRATION OF SUPPLIERS- 2011

இலங்கைச் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கொங்கிறீற் உற்பத்திப் பகுதிக்கும் யாழ்.அலுவலகத்திற்கும் 2011ஆம் ஆண்டு காலப்பகுதிக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவையினையும் வழங்கக் கூடிய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

### பொருள்கள்

01. உடைந்த சல்லிக்கல் (Crushed Metal) 1/2", 3/4"
02. மணல்
03.மணல்காடு மணல்
04.முறுக்குக் கம்பிகள் (Tore Steel)
05.மென் உருக்குக் கம்பிகள் (M.S.Bars)
06. கட்டுக் கம்பிகள் (Binding Wire)
07.கட்டட வேலைக்கான உபகரணங்கள்
08. மின்சாரப் பொருள்களும் மின்சார உபகரணங்களும்
09.வாகன உதிரிப்பாகங்கள் (Mitsubishi Double cab & Ashok Leyland Tipper) வாகனத்திற்குரியவை.
10. ரயர்களும் ரியூப்களும் (Tyre & Tubes)
11. துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள்
12. காகிதாதிகளும் அலுவலகப் பாவனைப் பொருள்களும் (Stationary and Office Requisites)
13. அலுவலகத் தளபாடங்கள்
14. கணினிப் பொருள்களும் உதிரிப்பாகங்களும் (Computer Spares).

### சேவை

01. வாகனம் பழுது பார்த்தல்
02. கணினி பழுது பார்த்தல்

மேற்கூறப்பட்ட பொருள்களையும் சேவையினையும் வழங்குவதற்காக கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புபவர்கள் 15.12.2010ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்க வகையில் தங்களின் பெயர், முழுவிலாசம், வழங்கப்படக்கூடிய பொருள், சேவை விவரம் கொண்ட விண்ணப்பத்தினைப் பின்வரும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விநியோக உத்தியோகத்தர்
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
பலாலி வீதி, உரும்பிராய்.
தொலைபேசி இல.: 0212227890. (சி/572518)



வெகுவிரைவில்...



## CeyLabs Training Programme (CLTP)

- Web Applications
  - PHP
    - HTML / Javascript / DBMS (MySQL)
- Desktop Applications
  - JAVA
    - DBMS / Netbeans
  - VB.Net
    - DBMS (SQL) / VisualStudio
- Advanced DBMS
- Networking & Hardware Analysis

மேலதிக தொடர்புகளுக்கு...!

Cey Labs

CeyLabs Solutions (Pvt) Ltd.
204, Brown Road,
Jaffna.

Hotline : 021-222 1807
General : 077-251 7223
Web : www.ceylabs.com
Email : contact@ceylabs.com



## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய பாவித்த ஐஸ் பெட்டி 2, T.V-1, மேசை 1 அம்மி, ஆட்டுக்கல் என்பன விற்பனைக்கு உண்டு.
V.மயில்வாகனம் 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (106386)

## பிரத்தியேக/குழு வகுப்புகள்

புலமைப்பரிசில் (paper class) ஸ்ரீரமணன் 0774006948 [ மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது]. (106388)

## விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 8½ பரப்புக் காணியும், கச்சேரி - நல்லூர் வீதியில் மூத்த நயினார் கோயில் அருகாமையில் 4 பரப்பும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-0777 - 626112 (106389)



## கொக்குவில் இந்துக் கல்லூரி

### அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்-2010

இடம் :
கொக்குவில் இந்துக் கல்லூரி-
பஞ்சலிங்கம் கேட்போர்கூடம்
காலம் :
11.12.2010 சனிக்கிழமை காலை 9.30 மணி
அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இ.செல்வநாதன்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

அ.அகிலதாஸ்
தலைவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(F/572521)



## STUDY IN LONDON

### இலகுவான இறுதி சந்தர்ப்பம்

IELTS அவசியமில்லை, ஆங்கில அறிவு பற்றிக் கவலைப்பட வேண்டாம்

- அடிப்படைத் தகுதி O/L
- 5 வாரத்தினுள் பயணமாகலாம்.
- A தரம் வாய்ந்த சிறந்த கல்லூரிகளிடம் இருந்து அனுமதிகள்.
- குறைந்த செலவில் Sponsor ஏற்பாடுகள்.
- 100 வீத உத்தரவாதம் அனைத்து உண்மையான ஆவணங்களுக்கும்.

விசேடமாகப் பட்டதாரிகள், பட்டமேற்படிப்புக்கு விண்ணப்பிப்பதன் மூலம் குறைந்த செலவில், இரண்டு மாதங்களுக்குள் குடும்பத்தோடு குடிபுகும் அரிய வாய்ப்பு.

- எமது அலுவலகத்தில் இலவச கருத்தரங்கு புதன், வியாழக்கிழமைகளில் நடைபெறும். அனைத்து ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.
- அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தொலைபேசியூடாகப் பதிவு செய்யவும்.

SEC (Pvt)Ltd
620, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.
(நாச்சிமார் கோயிலுக்கு எதிரில்) (106383)
021 222 0555
0777919293



## MULTIMEDIA COURSES

எண்ணங்களின் பிரதிபலிப்பு

DIPLOMA IN Digital Video Production (Audio & Video Editing)

PROFESSIONAL Diploma in Graphic Design

ADV. DIPLOMA IN Digital Pre-press

100% செய்முறை பயிற்சி

- Advanced Diploma in Macromedia Application
- Diploma in Desktop Publishing

தற்பொழுது பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

T.P:021-222-5677.
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P:021-2262399.
230,1ம் மாடி,கண்டி வீதி,சாவகச்சேரி.T.P.021-2270267


## பூநகரி ப.நோ.கூ.சங்கம்

### அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

எமது சங்கத்தில் அங்கத்தவர்களாக சேருவோர் ஒரு பங்குப் பணம் 100/= இனை செலுத்தியிருந்தால் செலுத்திய திகதியிலிருந்து ஒரு வருடத்தை பூர்த்தி செய்திருப்பின் கிளை பொதுச் சபை வாக்காளராக கணிப்பிட முடியும். குறைந்த பங்கொன்றின் பெறுமதி 100/= செலுத்தியவர்களை மையமாகக் கொண்டே எதிர்காலத்தில் கிளைகளில் பொதுச் சபை பேராளர்களின் தொகையை கிளைகள் ரீதியாக நிர்ணயம் செய்யமுடியும்.

எனவே ஏற்கனவே பங்குப்பணம் 100/= இற்கு குறைவாக செலுத்தியிருக்கும் அங்கத்தவர் எவரும் சங்கத்தின் கிளைகளிலோ அல்லது சங்கத்துடன் தொடர்பு கொண்டு அங்கத்துவ பங்குப்பணத்திற்குரிய மீதிப்பணத்தை 31.12.2010 இற்கு முன் செலுத்துமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

தலைவர்.
க.மகிந்தன்

செயலாளர்.
சி.தாரணி

(106355)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆச்சரியமிக்க நாடாகும்போது கிழக்கை மோசமான நிலையில் வைத்திருப்பதா?

## கேள்வி எழுப்புகிறார் முதலமைச்சர் சந்திரகாந்தன்



மட்டக்களப்பு, நவ.24

ஜனாதிபதி ஆசியாவிலேயே ஆச்சரியம் மிக்க நாடாக இலங்கையை மாற்றும் போது மட்டக்களப்பை மாத்திரம் ஆச்சரியப்படக் கூடிய மோசமான மாவட்டமாக வைத்திருப்பதா என கிழக்கு மாகாண முதலமைச்சர் சி. சந்திரகாந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மீள் குடியேற்றப்பட்டுள்ள பகுதியான நாவற்காட்டு கிராமிய வைத்தியசாலையில் 35 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வைத்திய விடுதியை கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் சந்திரகாந்தன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மட்டக்களப்பு மேற்குப் பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பல துறைகள் உள்ளன. பாரிய வளமும் இங்கேயே உள்ளது. இப்பகுதியில் இருந்து உருவாகும் படித்தவர்கள் இப்பகுதியை விட்டு வெளியேறுவதும் நகருக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதும், நகரிலேயே திருமணம் செய்ய வேண்டும் என எண்ணுவதுமே இப்பகுதியின் பின்னடைவிற்குக் காரணங்களாகும்.

60 பாடசாலைகளை உள்ளடக்கி புதிய கல்வி வலயம் உருவாக்கப்பட்டது. அதில் ஒரு '1 ஏபி' பாடசாலை கூட இல்லை '1சீ' பாடசாலைகள் 4 மாத்திரம் உள்ளன. இப் பிரதேசத்தில் பிறந்தவர்கள் தங்களது பிரதேசத்திற்குக் கடமையாற்ற முன்வராத நிலை உள்ளது.

ஜனாதிபதி, ஆசியாவிலேயே இலங்கையை ஆச்சரியம் மிக்க நாடாக மாற்றும் போது மட்டக்களப்பை மாத்திரம் ஆச்சரியப்படக் கூடிய மோசமான மாவட்டமாக வைப்பதா? இலங்கையை ஆச்சரியம் மிக்க நாடாக மாற்றும் போது கிழக்கு மாகாணம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

மக்கள் தாம் பிறந்த மண்ணுக்கு சேவையாற்ற வேண்டும். ஒவ்வொருவராக வெளியேறிச் சென்றால் யார் இப்பகுதி கல்வி வளர்ச்சி பற்றிக் கவனிப்பது? பிரச்சினைகள் இருக்கின்றன. அவை விரைவில் தீர்த்து வைக்கப்படும்.

எமது கிராமத்தை, எமது பிரதேசத்தை, எமது மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற உணர்வு ஒவ்வொருவர் மனதிலும் உருவாக வேண்டும். அப்போது தான் எமது மாகாணம் வளர்ச்சி அடையும்.

ஆசியாவில் இலங்கை ஆச்சரியம் மிக்க நாடாக மாற்றப்படும் போது கிழக்கு மாகாணம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அதுதான் எமது நோக்கம் - என்றார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுஹைர் இத்திறப்புவிழாவில் பேசுகையில், "வடக்கு - கிழக்கில் ஜே.வி.பி. பிரச்சினைகளைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றது. தற்போது கிழக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறையில் குறைபாடு நிலவுவதாகத் தம்பட்டம் அடித்து மேலும் பிரச்சினைகளை உருவாக்க முயல்கின்றது.

இங்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும். இன வாதக் கட்சி மக்களிடையே பிரச்சினைகளை தோற்றுவித்து தீர்த்துவைக்கப்பட்டுள்ள பிரச்சினைகளை மீண்டும் கிளறிவிடப் பார்க்கின்றது. எனவே, இவ்விடயத்தில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும்" என்றார்.

இந்த நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்களான எ.சி.கிருஷ்ணானந்தராசா, பூ.பிரசாந்தன், இரா.துரைரெட்ணம், சுகாதார அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, தாண்டியடி மண்டபத்தடி வைத்தியசாலையில் மகப்பேற்று மருத்துவ விடுதியும் அன்று திறந்துவைக்கப்பட்டது. (சி)

# பிரச்சினைகளைத் தீர்க்காத வரையில் பல்கலைகளுக்கு ஜனாதிபதி வரக்கூடாது

## மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.24

பல்கலைக்கழகங்களில் உக்கிரமடைந்துள்ள பிரச்சினைகளுக்கு உரிய தீர்வின்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்கலைக் கழகங்களுக்கு வரக்கூடாது - இவ்வாறு அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மருதானை சி.எஸ். ஆர். மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதி ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார மேலும் கூறியவை வருமாறு:-

மக்களின் நிதியை மோசடிசெய்து பிறந்தநாள் மற்றும் பதவி ஏற்பு விழாக்களுக்காக கோடிக்கணக்கில் செலவிடும் அரசுக்கு நூறு ரூபாய் செலவழித்து பல்கலைக்கழகத்திற்கு புல்லாங்குழல்களை வாங்கிக் கொடுக்க முடியவில்லை.

வெளிநாட்டுப் பணங்களைக் கொடுத்தும், நிதிகளை வழங்கியும் மாணவர்களின் போராட்டத்தை அரசால் அடக்க முடியாது. அதற்கு அமைச்சர்கள் தான் உகந்தவர்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் செல்ல உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

பல்கலைக்கழகங்களில் காணப்படும் பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வை வழங்கக் கூடியதாக இந்த வருகை இருக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். பல்கலைக்கழகங்களில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக கடிதமொன்றை விரைவில் நாம் ஜனாதிபதிக்கு அனுப்பி உள்ளோம்.

ஏனெனில் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுக்க முடியாத அளவுக்கு பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

மாணவ சமூகத்திற்கு சிறந்த எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதாக கூறும் அரசால் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியவில்லை.

றுகுணு பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படும் ஜீ.பி.எஸ். கருவியை அரசால் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. இக் கருவி வெறும் 12,500 ரூபா தான்.

அதேபோன்று கலைப்பீடங்களில் இசைத் தளபாடங்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு உள்ளது. ஆனால் அரசு தமது களியாட்டங்களுக்கு கோடிக்கணக்கில் செலவிட்டு மாணவர்களின் கல்வியை சீரழிக்கின்றது - இவ்வாறு சஞ்சீவ பண்டார கூறினார். (சி)

# சாப நீக்கம் கொடுக்கவந்த பூசாரி மாணவி மீது வல்லுறவுக்கு முயற்சி

கொழும்பு, நவ.24

16 வயது மாணவிக்கு ஏற்பட்ட சாபத்தை நீக்குவதற்காக வரவழைக்கப்பட்ட பிரபல பூசாரியொருவர் அந்த மாணவியை தனியாக அழைத்துச்சென்று வல்லுறவு புரிய முயன்ற போது பிடிபட்டார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள கட்டான கிழக்கு, கலிவாரிப் புவ பிரதேசத்தில் உள்ள இந்த மாணவி சிறிது காலம் நோய் வாய்ப்பட்டிருந்தார்.

அவரது பெற்றோர் இது தெய்வக்குற்றம் எனத் தீர்மானித்து படல்கம, அம்பகன்வேறயில் உள்ள பிரபல பூசாரி ஒருவரை சாப நீக்கத்துக்காக அழைத்து வந்தனர்.

இரவுப் பூசை வேலைகள் வீட்டில் நடந்துமுடிந்தபின்னர் மாணவி தன்னுடன் தனியாக வந்து முச்சந்தியில் சிறிதளவு மண்ணை எடுத்து வரவேண்டுமென பூசாரி கூறியுள்ளார்.

அதனையடுத்துப் பூசாரியுடன் சற்று தொலைவிலுள்ள முச்சந்திக்கு மாணவி சென்றுள்ளார்.

பல மணி நேரமாக இருவரும் திரும்பாததால் பதற்றமடைந்த பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு அப்பகுதியில் இருந்த பாழடைந்த வீட்டில் இருவரும் மீட்கப்பட்டனர்.

சந்தேக நபர் நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (ம-5)

# போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து 29 லட்சம் ரூபா மோசடி செய்த நபர்

கொழும்பு, நவ.24

போலி ஆவணங்களையும் தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியரின் 29 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை மோசடி செய்துவிட்டுத் தலை மறைவான நபரொருவருக்குக் காலிப் பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் நீண்டகாலமாகச் சேவையாற்றி அண்மையில் ஓய்வுபெறவுள்ள மகரகம பிரதேசவாசியான ஊழியரொருவர் தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதிப் பிரிவுக்குச் சென்று தனது கணக்கிலுள்ள மிகுதியை விசாரித்துள்ளார்.

அவரது கணக்கிலிருந்த 29 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் மீளப்பெறப்பட்டுள்ளதாகத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்ததையடுத்து தொழில் ஆணையாளருக்கு அவர் முறைப்பாடு செய்தார்.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது ஹபராதுவ கொக்கல பிரதேசத்திலுள்ள முகவரியொன்றைக் கொடுத்து காலித் தொழில் காரியாலயத்திலிருந்து தனது வங்கிக் கணக்குக்கு முழுத் தொகையையும் சந்தேக நபர் வைப்பிலிடச் செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் சமர்ப்பித்த ஆவணங்களின்படி அவரது புகைப்படம், கையொப்பம் ஆகியன உண்மையான ஊழியருடையதல்ல எனவும் அவற்றில் பாரிய வித்தியாசம் காணப்படுவதாகவும் விசாரணைகளின் போது அம்பலமாகியுள்ளது.

ஆவணங்களில் குறிப்பிட்டிருந்த முகவரிக்கு பொலிஸார் சென்றபோது, குறிப்பிட்ட நபர் தனது வீட்டில் சுமார் ஒரு மாத காலம் வாடகைக்குத் தங்கியிருந்தாகவும் அதன்பின் மீண்டும் வரவில்லை எனவும் அந்த வீட்டிலிருந்த பெண் கூறியுள்ளார்.

சந்தேக நபர் தனது வங்கிக் கணக்கிலிருந்து தானியக்கி இயந்திரங்கள் மூலம் முழுத்தொகைப் பணத்தையும் மீட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

காலிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.என்.சிசிரகுமாரவின் பணிப்புரையின்கீழ் காலி பொலிஸ் விசேட நடவடிக்கைப் பிரிவின் பொறுப்பதிகாரி எம். பி.பி. அருணலால் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம-5)

# நாட்டுக்கு கௌரவம் தரும் வகையில் அமைச்சர்கள் செயற்படுவது அவசியம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ.24

நாட்டுக்கும், மக்களுக்கும் கௌரவத்தை ஏற்படுத்தும் வகையில் புதிதாக நியமனம் பெற்றுள்ள அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் சேவைகள் அமைய வேண்டும். எந்த வகையிலும் அரசின் கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்தாத வகையில் நடந்துகொள்ள வேண்டும் - என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய அமைச்சரவைக்கான அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கு நியமனப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். ஜனாதிபதி அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்வதற்கான பாரிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. இதற்கு அமைச்சர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

நாட்டில் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பும் கடப்பாடு காணப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில், அமைச்சர்கள் தமது சுய கௌரவத்தை மாத்திரம் நோக்காகக் கொள்ளாமல் நாட்டு மக்கள் மத்தியில் நல்லெண்ணம் உருவாகவும், அவர்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையிலும் செயற்பட வேண்டும்.

அமைச்சர்கள் வெளியிடும் எந்தவொரு கருத்தும் அரசின் கருத்தாகவே அமையும். எனவே, அமைச்சர்கள் இதுவிடயத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் - இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (சி)

## கல்விப் பணி...



பரிசு: கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கனடாவிலுள்ள, கைதடிப் பாடசாலைகள் அபிவிருத்திச் சங்கத் தலைவர் செந்தில்குமார் வேலாயுதர், இணுங்கித்தோட்டக் கந்தசுவாமி ஆலய பிரதம குரு சாமிக் குருக்கள், பாடசாலை அதிபர் சி.பவளகாந்தன், தென் மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம், முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி நா.சத்தியநாதன் மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்துள்ளனர். (204-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:**
சொல்வாக்கை காப்பாற்றி செல்வாக்கு பெறும் நாள். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சில வேலைகளில் தீவிரமாக இறங்கி விட்டு, பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம். உதிரி வருமானங்களைப் பெறலாம். பிரியமான நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பு நிகழும். நல்ல செய்தி கேட்கலாம்.



**இடபம்:**
ஓய்வாக இருக்க முடியாத அளவுக்கு ஏதாவது வேலைகளை செய்யலாம். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். உறவினர்கள் அல்லது நண்பர்கள் சிலரிடம் கடனுதவி கேட்கலாம் அல்லது கடன் கொடுக்கலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகள் செய்யலாம்.



**மிதுனம்:**
எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. புதிய முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைப்பது கடினம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொடர்பு கொண்டு பேசலாம்.



**கடகம்:**
சுபச் செய்திகள் வீடு தேடி வரும் நாள். உறவினர்களால் உருவான தொல்லைகள் குறையும். கணவன், மனைவி இடையே அன்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவுகள் தங்கு தடையின்றி எளிதில் வந்து சேரும். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகச் சொல்வீர்கள்.



**சிங்கம்:**
எதிலும் நிதானமாக செயற்பட வேண்டிய நாள். குடும்ப உறுப்பினர்கள் கேட்ட பொருள்களை மறுக்காமல் வாங்கிக் கொடுப்பீர்கள். விருந்தினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டு. மருத்துவச் செலவுகளைத் தவிர்க்க, உடல் நலனில் கவனம் தேவை. தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம்.



**கன்னி:**
மற்றவர்களின் பாராட்டு அல்லது விமர்சனத்திற்கு ஆளாகலாம். சிலர் உங்களிடம் யோசனை கேட்டு செயற்பட முற்படுவர். தொழில் ரீதியான கூட்டங்கள், நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். வீடு வாங்க போட்ட திட்டங்கள் கைகூடி வரலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரியளவில் கவலைப்படுவீர்கள்.



**துலாம்:**
திட்டமிட்ட காரியங்கள் நடக்காமல் போகலாம். சிலர் உங்களை காத்திருக்க வைத்து கோப மூண்டாக்கலாம். உடன் பிறந்தவர்களுடன் வாக்குவாதங்கள் செய்யலாம். எதிர்பாராமல் சந்திக்கும் ஒருவரால் செலவுகள் ஏற்படலாம். நினைத்தது நடக்க வேண்டும் என, பிரார்த்தனைகளை மேற்கொள்வீர்கள்.



**விருச்சிகம்:**
ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகளை சந்திக்கலாம். பெரியளவில் பணியாளர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகள் தொடர்பான காரியங்களுக்காக மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உங்களின் திறமையைப் பார்த்து மற்றவர்கள் வியப்படைவர்.



**தனுசு:**
தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். அவசரப்பட்டு எந்தக் காரியத்திலும் இறங்காமல் இருப்பது நல்லது. உறவினர் ஒருவருக்கு உதவி செய்து அதை நினைத்து பெருமை அடைவீர்கள். தடை, தாமதங்கள் விலகி எதிலும் வெற்றி காணும் நாள். உள்ளத்தில் இனம்புரியாத உற்சாகம், மகிழ்ச்சி குடிகொள்ளும். கடன் தீரும்.



**மகரம்:**
பெண்கள் கடும் வேலை நெருக்கடியை எதிர் கொள்ளலாம். சில விடயங்களில் மற்றவர்களின் யோசனையை கேட்காமல் தன்னிச்சையாக செயற்படுவதன் மூலம் ஆதாயம் பெறுவீர்கள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல் அதை நீங்களே செய்ய நேரிடலாம்.



**கும்பம்:**
எதிலும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக செயற்படுவீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். உறவினர் ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வந்தாலும், அதை மறுத்து விடுவீர்கள். நண்பர்கள் சிலரிடம் சண்டை போடலாம். மற்றவர்களை பரிகாசம் செய்து பேசுவதைத் தவிர்க்க வேண்டும். அலைச்சல் உண்டு.



**மீனம்:**
மனக்குறைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். திட்டமிட்ட நேரத்தில் அனைத்து வேலைகளையும் செய்து முடிப்பீர்கள். வரவுகளை சேமிப்பாக மாற்றுவீர்கள். தொழில், உத்தியோக சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர் ஒருவரை சந்திக்கலாம். பணப்புழக்கம் கூடும்.

## ஓசை எழட்டும்........



கைமாறுகின்றது - யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து மாநகரசபை உறுப்பினர் திருமதி அன்ரன் மரியகொறற்றி, மாநகரசபை முன்பள்ளிக்கு 60ஆயிரம் ரூபா பெறுமதியான பாண்ட் வாத்தியக் கருவிகளை வழங்கினார். யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, மாநகர சபை உறுப்பினர் ஆகியோர் முன்பள்ளி ஆசிரியரிடம் உபகரணங்களைக் கையளிக்கின்றனர். (201-7)

# சைவ பரிபாலன சபையினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம் நவ.24

யாழ். சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் ஆறுமுகநாவலரின் 131 ஆவது குருபூசை தினத்தை யொட்டி பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடைபெற்றன.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**பேச்சுப்போட்டி**

**கீழ்ப்பிரிவு**

மோகனதாரணி மகேந்திரநாதன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிவனுஜா சிவசுப்பிரமணியம் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), நாகேந்திரன் கேசவராஜ் (கிளிநொச்சி மத்திய கல்லூரி).

**மத்தியபிரிவு**

விஜிதா சுரேஸ்குமார் (யா/ மகாஜனக் கல்லூரி), பவளகாந் பிரதீஸ் (யாழ். இந்துக்கல்லூரி), கோபிதா கிருஸ்ணபிள்ளை (யா/ அருணோதயாக் கல்லூரி).

**மேற்பிரிவு**

உமாகரன் அருள்பரன் (ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை), கனகபுனிதராஜா சாயிராம் (யாழ்.மத்திய கல்லூரி), வர்ாகினி தங்கவடிவேல் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**கட்டுரைப்போட்டி**

து.வசீகரன் (யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), குணசிங்கம் கனேந்திரன் (யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), அருள்ஜோதி இந்திரன் (யா/ முத்துத் தம்பி மகா வித்தியாலயம்). (204)

## சாணக்கியரின் அரசியல்



''சந்திரகுப்தர்'' என்று ஓர் அரசர் இருந்தார். அவருக்கு அமைச்சராக இருந்தவர் தான் சாணக்கியன்.

அவர் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார். அந்த ஊர் மக்கள் குளிரால் கஷ்டப்படுவதை அறிந்து அரசன் கம்பளப்போர்வைகளை வாங்கி சாணக்கியரின் குடிசைக்கு அனுப்பி விரைவில் அனைவருக்கும் கொடுக்குமாறும் கூறினார்.

அன்றையதினம் போர்வைகள் அனைத்தும் அவரது குடிசைக்குள் தான் இருந்தது. யாருக்கும் வழங்கப்படவில்லை.

அந்த ஊரில் இருந்த இரு திருடர்கள் ''ராஜா கொடுத்தனுப்பிய கம்பளிப் போர்வைகளைத் திருடுவதற்குத் திட்டம் போட்டு சாணக்கியரின் குடிசைக்குள் வந்தனர். அங்கு வந்த திருடர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

ஒருபக்கம் புத்தம் புதிய கம்பளிகள் குவிக்கப்பட்டிருந்தன. அதைவிட்டு விட்டு கிழிந்து போன கம்பளிப் போர்வைகளால் போர்த்துக் கொண்டு குளிரில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார் சாணக்கியன்.

திருடர்கள் வந்த காரியத்தையும் விட்டுவிட்டு சாணக்கியரை எழுப்பினார்கள். ஒன்றும் புரியாமல் எழுந்து உட்கார்ந்தார் சாணக்கியர்.

''நாங்கள் கம்பளி திருடுவதற்கு வந்தோம். ஏன் புதிய கம்பளிகள் இருக்க கிழிந்த பழைய கம்பளியால் உடம்பை மூடிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று வினவினார்கள். அதைப் போர்த்தினால் நானும் உங்களைப் போன்றவன் தானே'' என்றார் சாணக்கியர். திருடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அதற்கு சாணக்கியர் விளக்கம் கூறினார்:-

''ஏழை மக்களுக்குக் கொடுப்பதற்கு மன்னர் கொடுத்த கம்பளிகளை நான் எடுத்துப் போர்த்திக் கொண்டால் மக்களுடையதை நான் திருடியதாகப் போய்விடும்; அதனால் நான் அதை எடுக்கமாட்டேன்'' என்றார்.

திருடர்களுக்கு மனதில் முள் குத்தியது போலிருந்தது. இனிமேல் நாங்கள் திருடவேமாட்டோம். எங்களை மன்னித்து விடுங்கள் என்று கூறி விடைபெற்றுச் சென்றார்கள்.உயர்ந்த பதவியிலும், அரசியலிலும் இருப்பவர்களின் முன் உதாரணம்தான் அடிமட்டத்தில் இருப்பவர்களின் மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

கோ.கலைமசிநாதன்.

## நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான்



ஒரு நோயாளி மருத்துவரிடம் போய் உடம்பெல்லாம் வலிக்கிறது என்றான். தனது ஆள்காட்டி விரலால் தோளை அழுத்தியபடி ''ஆ......இங்கே வலி'' என்றவன் பிறகு தன் நெஞ்சு, வயிறு, தொடை, பாதம் ஒவ்வொன்றாகத் தன் விரலால் அழுத்தி ''இங்கே வலி'' என்று அலறிக்கொண்டே இருந்தான்.

மருத்துவர் அவனைக் கட்டிலில் படுக்க வைத்து அதே மாதிரி தன் கைகளால் அழுத்தி அழுத்தி ''இங்கே வலி இருக்கா... இங்கே வலி இருக்கா'' என்று கேட்டார். என்ன ஆச்சர்யம் ''இல்லை.....இல்லை'' என்று சொல்லிக் கொண்டே வந்தான். எழுந்து உட்கார்ந்ததும் அவனாக மீண்டும் தோளை அழுத்தியபடி ''ஆ..........இங்கே வலிக்கிறது'' என்றான்.

மருத்துவர் கூர்ந்து அவன் விரல்களைக் கவனித்தார். பிறகு சிரித்துக் கொண்டு அவன் விரலைப் பிடித்து அழுத்தியதும் ''ஆ'' என்று சத்தமாக அலறினான். காரணம் விரலில் தான் உண்மையில் வலி. வலிக்கிற விரலைக் கொண்டு அங்கேயும் இங்கேயும் அழுத்தி விட்டு ''ஆ உடம்பெல்லாம் வலி'' என்பவன் எவ்வளவு முட்டாள். நம் துக்கத்திற்குக் காரணம் நாம். ஆனால் அவன்.......இவன் என்று பிறரையே சுட்டுகிறோம். நோயுள்ள விரல்தான் நாம். வேதனை நம்மிடம் இருக்கிறது அப்படியிருக்க மற்றவர்கள் தோள், கால், கை, வலி அங்கிருப்பதாகப் புலம்புவது என்ன நியாயம் சொல்லுங்கள்.


மற்றவர்கள் உங்கள் துக்கத்திற்குக் காரணம் இல்லை. உங்கள் எதிர்பார்ப்புத்தான் துக்கத்தை உண்டு பண்ணுகிறது. பிறகு பிறரை நோவது ஏன்?

பிறர்மூலம் சுகம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதை விடுங்கள். அதன்பிறகு ஆனந்தம் பிறக்கும்.

நகி சிவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் வேண்டாம் இரத்தக்களரி




வன்னி யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்கள் கடவுளிடம் கேட்பது இதை மட்டும்தான். வளர்த்து வைத்திருந்த உயிர்களையும், சேர்த்து வைத்திருந்த பொருள்களையும் இழந்துவிட்ட நிலையில் அகதி முகாம்களுக்குள்ளும் தடுப்பு முகாம்களுக்குள்ளும் சிறைச்சாலைக்களுக்குள்ளும் இன்று வரைக்கும் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் கேள்வியாய் எழுந்திருப்பது, யுத்தம் யார்மீது நடத்தப்பட்டது? எதற்காக நடத்தப்பட்டது? யார் எல்லாம் இந்தக் கொடிய யுத்தத்துக்கு தூண்டுதலும் உதவி ஒத்தாசைகளும் புரிந்தார்கள்? என்பது மட்டுமே.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 'நாம் இலங்கையர்' என்ற அமைப்பின் போர்வையில் யாழ்ப்பாணம் வந்த ஜே.வி.பி குழுவினர் மீது இனந்தெரியாத நபர்கள், முன்னாள் தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் இந்நாள் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி அங்கத்தவருமான பத்மினி சிதம்பரநாதன் வீட்டில் வைத்து கல்லால் தாக்கி மூன்று பேருக்கு மண்டையை உடைத்து விட்டுத் தப்பிச்சென்றனர்.

இந்த அநாகரிகச் செயலை சம்பவ இடத்தில் வைத்தே பாதிக்கப்பட்ட ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ''ஜனநாயகத்தை விரும்பாத அரசு மக்களுக்காகப் பேசுபவர்களை அடக்க மிலேச்சத்தனமாக நடந்து கொள்கின்றது'' என அரசை குற்றம் சாட்டினார்.

ஆனால் அரச தரப்போ, ஜே.வி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி மற்றும் அவரது சகாக்கள் மீது யாழ். தமிழ்மக்கள் தாக்குதல் நடத்தியிருக்கலாம். இத்தாக்குதல் சம்பவத்துக்கும் அரசுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. கைது செய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுமாறு கொழும்பிலிருந்து சென்று இவர்கள் கோரிக்கை விடுப்பதை யாழ்ப்பாண மக்கள் விரும்பியிருக்கமாட்டார்கள். இதனால் ஆத்திரமுற்ற மக்கள் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தமிழ் மக்கள் மீது பந்தை எறிந்திருக்கிறது.

ஜே.வி.பி மீது தமிழ் மக்களுக்கு வெளிப்படையாகவே ஆத்திரம் உள்ளது. அது ஓர் இனவாதக்கட்சி என்ற பார்வை உள்ளது. இதனை தமிழ் மக்கள் தாமாக ஏற்படுத்தவில்லை. ஜே.வி.பியினர் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மீது நடந்து கொண்ட விதம், அரசுடன் சேர்ந்து நின்று தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டவிதம், இனவாதக் கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி தமிழ் மக்களுக்கு எதிராக அரசைப் போர் தொடுக்கத் தூண்டிய விதம் என்று அவர்களின் செயற்பாடுகளே அதை உருவாக்கியது. அந்தக் காலப்பகுதியில் ஜே.வி.பி., புலிகள் வேறு மக்கள் வேறு என்று பார்க்கவே இல்லை. மக்கள் தான் புலிகள் என்றும், தமிழர் - சிங்களவர் என்ற வேற்று மனோபாவமும், பெரும்பான்மையினரால் சிறுபான்மையினர் அடக்கி ஆளப்பட வேண்டும் என்ற ஏகாதிபத்தியமுமே குடி கொண்டிருந்தது.

இவர்களது கருத்து அப்போது அரசுக்குத் தேவையாக இருக்க, ஜே.வி.பி. அரசின் செல்லப் பிள்ளையாக (சகோதரர்களுக்குள் அடிபட்டுப் பின் சேர்வதைப் போல வெளியில் காட்டிக்கொண்டு) இருந்தது. ஆனால் அரசு தனது காரியங்களை முடித்துக் கொண்டு ஜே.வி.பியை புறமொதுக்கியது.

இதனைச் சவாலாகக் கொண்டு ஜே.வி.பி., தமிழ் மக்களின் மனங்களில் இடம் பிடித்து அதன்மூலம் அரசியல் நடத்தும் முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தது. இதற்காக வடக்கு - கிழக்கு பகுதிகளுக்குள் தமது அரசியல் வேலைப்பாடுகளை இவர்கள் முடுக்கி விட்டுள்ளனர். தமிழ்மக்களுக்காகக் குரல் கொடுக்கிறேம் என்ற பாணியில் சுவரொட்டிகளை ஒட்டுதல், கண்டனப் பேரணிகளை நடத்துதல், தமிழ் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை என்று இவர்களின் பணி தொடங்கப்பட்டுள்ளது.

யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாக காணாமற்போனோர் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்களை வெளியிடுமாறும் அவர்களை விடுதலை செய்யுமாறும் கோரி ஜே.வி.பியின் கிளை அமைப்புக்க[illegible] 'நாம் இலங்கையர்' என்ற [illegible] பட்ட பேரணியில் ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

காயமடைந்த மூவரும் இரத்தம் தோய்ந்த உடையுடன் தலையில் தலைப்பாகை போன்ற கட்டுடன் காணப்பட்டனர். பேரணி இவர்களுக்காகவே நடத்தப்பட்டது போன்ற நிலை உருவாகியிருந்தது. "உங்களுக்காகவே நாங்கள் எங்கள் தலையைக் கொடுத்தோம்" என்ற தோரணை பேரணியில் தெரிந்தது.





அரசியல் வேறு நட்பு வேறு: யாழ்ப்பாணம் வந்து அடிவாங்கிய ஜே.வி.பி. நடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறார். வரவு - செலவுத் திட்ட உரையை முடித்து ஜனாதிபதி வெளியே வந்தபோது நடந்த உரையாடல் இது.

இந்தப் பேரணியில், முதல்நாள் காயமடைந்த மூவரும் இரத்தம் தோய்ந்த உடையுடன் தலையில் தலைப்பாகை போன்ற கட்டுடன் காணப்பட்டனர். பேரணி இவர்களுக்காகவே நடத்தப்பட்டதாக மாறியிருந்தது. உங்களுக்காகவே நாங்கள் எங்கள் தலையைக் கொடுத்தோம் என்ற தோரணை பேரணியில் தெரிந்தது.

இருப்பினும் மக்கள் இவர்களின் உள்நோக்கத்தையோ முற் செயல்களையோ பொருள்படுத்தாது, தமது உறவுகளினதும் பிள்ளைகளினதும் விடுதலைக்காக ஜே.வி.பியுடன் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

சம நேரத்தில் தமிழ் மக்களின் கண்ணீரையும் அழுகையையும் பார்வையிட வந்திருந்த நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு முன்னிலையிலேயே ஊடகங்களையும் சாட்சிகளையும் எச்சரிக்கும் வகையில் மர்மக் குழு ஒன்று இயங்கியதை அவர்களே உறுதிப்படுத்தியுள்ளனர்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் யாழ்.குடாநாடு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. இராணுவத்தினரை மீறி யாரும் எதையும் செய்ய முடியாத நிலையே உள்ளது.

இந்த நிலையில் ஜே.வி.பி. குழு மீது 'யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் தாக்குதல் நடத்தியிருக்கலாம்' என்ற அரசின் ஏதேச்சையான கூற்று தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

அதில் அரசு, ஜே.வி.பியை தமிழ் மக்களுடன் சீண்டவைத்து மீண்டும் ஒரு இரத்தக்களரியை ஏற்படுத்த விரும்புகிறதா? (பொது நூலக எரிப்பு -அண்மையில் நூலகத்தில் நடந்த சம்பவம்,1983 [illegible], குமுதினி படுகொலை [illegible]க்கில் ஜே.வி.பிக்கும் -தமிழ் மக்களுக்கும் இடையில் இனமுரண்பாட்டை கட்டவிழ்க்க விரும்புகிறதா?) என்று அரசு பக்கமாகவும் -

மறுவகையில் ஜே.வி.பி தாமாகவே கதை எழுதி தமிழ்மக்களைப் பாத்திரமாகப் பயன்படுத்தி வடபகுதியில் திரைப்படம் எடுக்கிறதா? ஏன்ற வகையிலும் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அரசுக்கு எதிராகவோ, எதிர் அரசியல் தரப்புக்களுடனோ வன்முறையில் ஈடுபட அல்லது போர்க்கொடி தூக்கக்கூடிய வகையில் தமிழ் மக்களின் மனோநிலை இல்லை. அவர்கள் பட்ட துன்பங்களிலும் இழப்புக்களிலும் இருந்து இன்னமும் மீளவில்லை. இந்த நிலையில் அரசினதும் அரசியல் கட்சிகளினதும் இத்தகைய நடவடிக்கைகள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலவே உள்ளன.

உண்மையில் 2006ஆம் ஆண்டு யுத்தம் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அரசு ஊடகங்களுக்கும் சர்வதேசத்துக்கும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்றும், இன்னும் 25,000 புலிகள் மட்டுமே எஞ்சியிருக்கின்றனர், ஓரிரு மாதங்களுக்குள் அவர்களையும் ஒழித்துக்கட்டிவிடுவோம் என்றும் கங்கணம் பேசிக் கொண்டு யுத்தத்தை தொடர்ந்தது.

இதே அரசு 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் பின் விடுதலைப் புலிகளை முற்றாக ஒழித்துவிட்டதாகவும் பயங்கரவாதம் முடிவுக்கு வந்துவிட்டதாகவும் இனி உள் நாட்டுக்கும் ஏன் வெளிநாடுகளுக்கும் குறிப்பாக இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லை எனவும் பறை முழங்கியது.

இறுதி யுத்தத்தில் பயங்கரவாதம், புலிகள் என்ற போர்வைக்குள் அடக்கப்பட்டிருந்து விமானக்குண்டு வீச்சிலும் எறிகணைத் தாக்குதலிலும் துப்பாக்கிச் சூட்டிலும் உயிரிழந்தவர்கள் போக உடலாலும் உள்ளத்தாலும் ஊனமுற்ற எஞ்சிய மக்கள் அகதிமுகாம்களுக்குள் அடக்கப்பட்டனர்.

**திப்பிலி**

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு 'வடக்கின் வசந்தம்' 180 நாள் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து, இந்தக் காலப் பகுதிக்குள் எல்லா மக்களையும் மீளக் குடியமர்த்தி விடுவதாகவும் அறிவித்தது. ஆனால் மக்கள் இன்றுவரை பாதிப்பேர் அகதி முகாம்களிலும் பாதிப்பேர் அரைகுறை மீள்குடியேற்றத்திலும் எஞ்சியவர்கள் தடுப்பு முகாம்களிலும் சிறைகளிலும் வாடுகின்றனர். இவை எல்லாம் பழைய கதை ஆகிவிட்டது.

விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்பதில் இலங்கையுடன் சேர்ந்து அரைவாசிப் பங்களிப்புச் செய்த இந்தியா காயம் மாறுவதற்குள் எஞ்சியிருப்பதாகக் கூறப்படும் புலிகளை ஒன்றிணைத்து போரை மீண்டும் தொடக்குவதிலும் குறியாக இருக்கின்றது. இந்தியாவின் இந்த இரட்டை முகத்துக்கு, எஞ்சியிருக்கும் புலிகள் இனி பயங்கரவாதத்திலோ வன்முறையிலோ ஈடுபடமாட்டார்கள். இது குறித்து நீங்கள் பரிதாபமோ அன்றி அச்சமோ கொள்ளத் தேவை இல்லை என்ற பாணியில்,வெளிநாட்டில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவர் மின்னஞ்சல் மூலம்

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூச்சாடிப் பிரியர்களுக்கு....**

பலவகைத் இலகுவான அழகான பூச்சாடிகளை பெற நீங்கள் நாட வேண்டிய இடம் இல. 220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 222 1378

**காணியுடன் வீடும் விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு, இருபாலை டச்றோட்டில் சுற்று மதிலுடன் கூடிய 10 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இது இருபாலை சந்தி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை, இருபாலை கற்பக விநாயகர் கோயில் ஆகியவற்றிற்கு அண்மையில் உள்ளது. இங்கு பல பயன் தரும் மரங்களும் உண்டு.

தொடர்பு: 0771553248, 0726994524.


## மானிப்பாய் சங்கத்துக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு

சண்டிலிப்பாய், நவ.24

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்கள் அனைவரும் தமது பதவியை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து இதற்கான புதிய உறுப்பினர்களாக 7பேர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத்தின் தற்காலிகத் தலைவர் எஸ்.செல்வம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், பொது முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-115)

## கைக்குண்டு வைத்திருந்த கடற்படை வீரருக்கு இரண்டு வருடச் சிறை

கொழும்பு, நவ.24

கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் கடற்படை வீரரொருவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் 10ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் திருமதி தீபாலி விஜேசுந்தர தீர்ப்பளித்தார்.

கொழும்பு, விசேட குற்றத்தடுப்புப் பிரிவினால் 2006ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதி இவர் கைதுசெய்யப்பட்டார்.

விசாரணைகள் முடிவடையாமல் கடந்த நான்கு வருட காலமாக அவர் சிறையில் வைக்கப்பட்டிருந்ததாலும் அவர் மீது முன்னைய குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லாதபடியாலும் நீதிவான் மேற்படி தீர்ப்பை வழங்கினார். (ம-5)

## எய்ட்ஸ் தினப் போட்டிகள்

டிசெம்பர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக எய்ட்ஸ் தினத்தை யொட்டி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், மாணவர் மற்றும் பொதுமக்களிடையே எயிட்ஸ் மற்றும் பாலியல்நோய் தொடர்பான விழிப்புணர்வு வினா விடைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளனர். இதற்கான வினாத்தாள்களை ஆர்வ முள்ளோர் தத்தமது பிரிவுப் பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரிடம் பெற்று எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-207)

## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கப் பணியாளர் செ.இராஜேந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார்


**வைரமுத்து செல்லப்பா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## மூன்றாம் ஆண்டு நினைவுச் சங்கமம்

தோற்றம் 03 . 08 . 1933



மறைவு 27 . 11 . 2007

**அமரர் தம்பையா கார்த்திகேசு**


திதி: திருதியை (24.11.2010)

அப்பா! இனி எமக்குக் கிடைக்குமா உறவு நீங்கள்
எங்களுக்காய் பிறந்த தெய்வம் நீங்கள்
உடலை வருத்தி எங்களை வாழ வைத்த உங்களை
என்றென்றும் எம் உள்ளத்தில் பூசிப்போம் நாம்.
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி மேற்கு, கைதடி. (106366) குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நீங்காத நினைவுடன்

பிறப்பு 11★11★1961 இறப்பு 27★11★2007



**செல்வராசா சிவகுமாரன் (சிவா)**

(முன்னாள் உரிமையாளர், குமரன் புடைவையகம், கிளிநொச்சி)

திதி: 24.11.2010

அன்பான அப்பாவே! எங்களை விட்டு நீங்கள்
பிரிந்தபோது எமது சந்தோஷம், அரவணைப்பு
உறவு, பந்தம், பாசம் அனைத்தையும்
கூடவே எடுத்துச் சென்றுவிட்டீர்கள்
மிஞ்சி இருப்பவை வலி, துக்கம், கவலை,
கண்ணீர் மட்டும் தான்.

உங்கள் நினைவுகளுடன்:

இல.232, திருநகர், கிளிநொச்சி. (106334) மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

**தர்மலிங்கம் சிறிதரன்**



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஞா. பா. ச. வீதி (G.P.S, ROAD), கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிறிதரன் (ரஞ்சன்) (22.11.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்வர்களான தர்மலிங்கம்-திலகவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாதி-வேதவல்லி தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தகுமாரியின் அன்புக் கணவரும், இரவி, முரளிதரன், பிரதாபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தாருகாஷ், சஞ்சுதா, ஜான்சி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2010) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்கா எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞா.பா.ச. வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (சி/572514)

தகவல்: குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



(முன்னாள் உத்தியோகத்தர், பெற்றோலியக் கூட்டுத் தாபனம்)

மண்ணில்: 10.05.1959 விண்ணில்: 07.12.2006

சதிசெய்த விதியால் உங்களை
இழந்தோம்.
குழந்தைகளின் முகங்களில்
கண்ணீரைப் பார்த்தோம்.
உறவுகளின் நெஞ்சங்களில்
பிரிவினைக் கண்டோம்.
வேண்டும் எங்களுக்கு உங்கள் அன்பு
ஆண்டுகள் பல நகர்ந்தாலும்
ஆறாது, மாறாது துயரம், துன்பம்.

11/5, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 18 . 08 . 1942



உதிர்வு 04 . 12 . 2009

**அமரர் கணபதிப்பிள்ளை சிவகாமசுந்தரி** (திலகம்) புங்குடுதீவு

திதி: துதியை

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!
பண்பின் சிகரமே! அணையா விளக்கே!
விரைந்தோடிச் சென்று ஆண்டொன்று ஆனதம்மா!
புன்னகை மாறாத உங்கள் திருமுகம்
நெஞ்சம் நிறைந்து நிற்குதம்மா
பெருமைமிகும் நின் குணத்தை எம்
நெஞ்சமதில் நித்தியமாய் நினைத்திருப்போம்.

அம்மை பல்பொருள் வாணிபம், துணுக்காய் சாலை, மல்லாவி. (106358)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



**திருமதி இராஜேஸ்வரி தியாகராஜா**

(லோசினி அக்கா)

தோற்றம்: 12.04.1951 மறைவு:25.10.2010

கடந்த 25.10.2010அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தாயாரின் வீட்டுக் கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் இன்று 24.11.2010 புதன்கிழமை மு.ப. 11 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் குடும்ப சகிதமாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இலுப்பையடிப் பிள்ளையார் வீதி, பிராம்பத்தை, கோப்பாய் வடக்கு. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் அபிவிருத்தித் திட்டங்கள்

கண்டி,நவ.24

அரசின் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் கொத்மலை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தோட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான ஆரம்பப் பணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உதவிச்செயலாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ரமேஷ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதன்படி டன்சினன் தொழிற்சாலைப் பிரிவுக்கு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்திற்காக 5 லட்சம் ரூபாவும் - சீன் லோவர் பூண்டுலோயா தோட்டப் பாதை அபிவிருத்திக்கு 5 லட்சம் ரூபாவும் - நோர்த் மடக்கும்புர பளிங்கு மலைத் தோட்டத்தின் பாதை அபிவிருத்திக்கு 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் பிரிவு உதவிச் செயலாளரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான கணபதி கனகராஜினால்; அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் இந்த வருடம் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதவிர, மத்திய மாகாண சபையில் தனக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் 15 லட்சம் ரூபா நிதியில் அம்பகமுவ பிரதேசசபைக்கு உட்பட்ட தோட்டப் பகுதிகளில் 42 அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன - என இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான எஸ்.சதாசிவம் தெரிவித்தார். (ளி)

# லொறி மோதி 15 மாடுகள் மரணம் தம்புள்ளவில் கடந்த வாரம் சம்பவம்

கொழும்பு,நவ.24

தம்புள்ளை-பக்கமுன பிரதான வீதியின் ஓரத்தில் இருந்த 15 மாடுகள் கட்டுப்பாட்டை இழந்த லொறியொன்றால் மோதப்பட்டு துடிதுடித்து மரணமாகியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட லொறி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த மாடுகள் பக்கமுன பிரதேசத்திலுள்ள பாற் பண்ணையாளர் ஒருவருக்குச் சொந்தமானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அன்றிரவு மழையால் கொட்டகைகள் ஒழுகியதையடுத்து அதிலிருந்து வெளியேறிய இந்த மாடுகள் பாதை ஓரத்தில் படுத்திருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

மாடுகள் இறந்ததால் பாற்பண்ணையாளருக்கு சுமார் இரண்டு லட்சம் ரூபா வரை நஷ்டமேற்பட்டுள்ளது.

இறந்தமாடுகளின் உடல்களை காட்டுக்குள் இழுத்துச் சென்று குவித்த கிராமவாசிகள் அவற்றை தீ மூட்டி எரித்தனர். (ளி)

# மகாவலி கங்கையில் சாக்கடை நீர்: பிரதேச சபை மீது நடவடிக்கை

கொழும்பு,நவ.23

மகாவலி கங்கையோரமாக குப்பைகள் கொட்டப்படுவது தொடர்பில் கம்பளை உடபலாத்த பிரதேசசபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இப்பகுதியில் நாளாந்தம் பிரதேச சபையால் சேகரிக்கப்படும் குப்பைகள் மகாவலி கங்கையோரமாகக் குவிக்கப்படுகின்றன.

இக்குப்பைகளிலிருந்து வடிந்தோடும் சாக்கடை நீர் மகாவலி நீருடன் கலக்கின்றது.

இது தொடர்பாக நாம் பிரதேசசபையின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதிலும் அது எதுவித அக்கறையும் எடுக்கவில்லை - என சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (ளி)

# நெற்செய்கையைக் கைவிடவேண்டிய நிலையில் கண்டி மாவட்ட விவசாயிகள்

கண்டி,நவ.24

'கண்டி மாவட்டத்தில் நெற்செய்கையில் ஈடுபடுபவர்கள் அதனைக் கைவிட வேண்டிய நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




இது தொடர்பில் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

கண்டி, மாவட்டத்தில் பெருமளவிலான வயல் காணிகளில் சட்டவிரோதமாக கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இதனால் பயிர்செய்கைக்குப் போதுமான நீர்ப்பாசன வசதி இல்லை.

வயல்களின் ஒரு பகுதியை சட்டவிரோதமான முறையில் கட்டடங்கள் கட்டுவதற்கு பயன்படுத்தும்போது மற்றைய வயல்களில் நெல் விதைக்க முடியாத நிலை உருவாகின்றது.

இது தவிர வயல்களுக்கு செல்லும் பாதைகள் புனரமைக்கப்படாமையால் உழவுக்காக வயல்களுக்குள்ளேயே எருதுகளை ஓட்டிச்செல்ல வேண்டியுள்ளது. இதனால் பயிர்களுக்குச் சேதம் ஏற்படுகின்றது. (ளி)

# பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து ஒன்றரை வயதுக் குழந்தை மரணம்

கொழும்பு,நவ.24

வீட்டு முற்றத்திலிருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து 18 மாதக் குழந்தை யொன்று மரணமாகியுள்ளது என பதுரலிய பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. துரலிய மோல்காவ வீதியில் லக்பந்துர எனும் இடத்திலேயே இந்த மரணம் சம்பவித்துள்ளது.

குழந்தையை வீட்டுக்குள் உறங்கவைத்து விட்டு பெற்றோர் வீட்டின் பின்புறத்தில் கழிவறைக் குழியொன்றைத் தோண்டியுள்ளனர்.

சற்று நேரத்தில் வீட்டுக்குள் வந்த தாய் குழந்தையைக் காணாது தேடியபோது, அது வீட்டு முற்றத்திலிருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து மரணமாகியமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ளி)

# 8 மத்திய மருந்தகங்களுக்கு மட்டக்களப்பில் வைத்தியர்கள்

மட்டக்களப்பு,நவ.24

மட்டக்களப்பு மாவட்டத்தின் சுகாதாரத்துறை குறைபாடுகள் தொடர்பாக ஆராயும் உயர் மட்ட மாநாடொன்று ஞாயிற்றுக்கிழமை காலை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார அலுவலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர், கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் தேவராஜன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் எம். சதுர்முகம் ஆகியோர் இதில் பங்குபற்றினர். வைத்தியர்கள், சுகாதாரத்துறை அதிகாரிகள் ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள 8 மத்திய மருந்தகங்களுக்கு வைத்தியர்களை நியமிப்பதற்கு இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையிலிருந்தும் 4 வைத்தியர்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

காலாவதியான உணவு விநியோக விவகாரத்தில் முழுமையானகவனம் செலுத்தி அவற்றைப் பரிசோதனைக்குட்படுத்துவது, தொற்றுநோய் தொடர்பில் விழிப்புடன் நடந்து கொள்வது ஆகிய தீர்மானங்கள் இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டன என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுபைர் தெரிவித்தார். (ளி)

# இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு மட்டு. மாவட்டத்தில் பரப்புரை தீவிரம்

மட்டக்களப்பு, நவ.24

இலங்கையில் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் நாடளாவிய ரீதியில் முதன் முறையாக நடைபெறவுள்ள இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல்களையொட்டிய பிரசார நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தீவிரமடைந்துள்ளன.

இத்தேர்தல் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்தலின் மூலம் 339 உறுப்பினர்கள், இளைஞர் நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப் படவுள்ளனர்.




இவ்வாறு தெரிவாகும் உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய 105 பேர் போட்டியிடுகின்றனர்.

இம்மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களிடையே கடும் போட்டி நிலவுகிறது. வீதிகளில் வேட்பாளர்களின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. 'கட் அவுட்'களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்டத் தலைமையகத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம் பெறவுள்ளது. (ளி)

# சம்மாந்துறைப் பிரதேசத்தில் நீரின்றி வேளாண்மை பாதிப்பு

அம்பாறை,நவ.24

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட பல பிரதேசங்களிலுள்ள பெரும்போக வேளாண்மை வயல்களின் நீரில்லாத காரணத்தால் நெற்பயிர்கள் கருகி மஞ்சள் நிறமாகியுள்ளன. இடையிடையே பயிர்கள் முளைத்தும் உள்ளன.

விவசாயிகள் ஆற்றிலிருந்தும், நீரோடையிலிருந்தும் நீரைப் பெற்று வயல்களுக்குப் பாய்ச்சி வருகின்றனர்.

இதற்கிடையில் வயல் களில் களைகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளது. அதனால் களை நாசினி விசுறும் வேலைகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

# மண்டபத்தடியில் பிரசவ விடுதி திறப்பு

மட்டக்களப்பு, நவ.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், 80 இலட்சம் ரூபா செலவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வைத்திய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

மண்டபத்தடி வைத்திய சாலையில் 45 லட்சம் ரூபா செலவில் பிரசவ விடுதியும், நாவற்காடு வைத்தியசாலையில் விடுதியும் திறந்து வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு கட்டடங்களைத் திறந்து வைத்தனர்.

உலக வங்கியின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது . (ளி)

# ஒலுவில் அட்டப்பள்ளம் எல்லையில் அதிகளவில் மயில்களின் நடமாட்டம்



மட்டக்களப்பு,நவ.24

ஒலுவில் - அட்டப்பள்ளம் எல்லையில் மனித நடமாட்டமுள்ள பிரதான வீதியருகே கடந்த சில நாள்களாகப் பெருமளவிலான மயில்கள் நடமாடுகின்றன. பொதுமக்கள் இவற்றை ஆச்சரியத்துடன் கண்டு இரசிக்கின்றனர்.

அதிகளவில் கூட்டமாக வந்துள்ள மயில்கள் சர்வ சாதாரணமாக, நெல்வயல்களில் உணவு பொறுக்குகின்றன.

இதேவேளை, இந்த மயில்களை சிலர் வேட்டையாடுவதற்கு முயற்சி செய்கின்றனர் என அங்குள்ள மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

மயில் இறகு, மயில் இறைச்சியிலிருந்து பெறப்படும் எண்ணெய் ஆகியவற்றுக்காக மயில்கள் வேட்டையாடப்படுகின்றன.

இவ்வாறான செயல்களை தடுக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# பாதுகாப்பற்ற ரயில் கடவை

மட்டக்களப்பு,நவ.24

வாழைச்சேனைக்கும் ஓட்டமாவடிக்கும் இடையிலுள்ள ரயில்வே கடவையில் பாதுகாப்புக் கடவை இல்லாததால், பொது மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வாழைச்சேனை, பிறைந்துரைச்சேனை ஆகிய பகுதிகளிலிருந்து ஓட்டமாவடி, மீராவோடை, செம்மண்ணோடை, மாவடிச்சேனை ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று வருவதற்கு இதுவே பிரதான கடவையாக உள்ளது.

வாழைச்சேனை, பிறைந்துரைச்சேனை ஆகிய பகுதிகளிலிருந்து மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கி, ஓட்டமாவடி தேசிய பாடசாலை, பாத்திமா பாலிகா, ஓட்டமாவடி பஸார் ஆகியவற்றுக்குச் செல்வதற்கும் இக்கடவையே பயன்படுகின்றது.

இக்கடவை தொடர்பாக இப்பகுதி மக்கள் அரசியல்வாதிகளிடம் தெரிவித்துள்ளனர். எனினும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென அம்மக்கள் தெரிவிக்கின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 21.11.2010 முதல் 07.05.2011 வரை

வாசகர்களே !
நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த குருப் பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை கும்ப ராசியில் சஞ்சரித்து சிறிது காலப்பகுதியில் குருவாசம் செய்து, பின் மீனத்துக்கு அதிகாரமாகச் சென்று, பலா பலன்களைக் கொடுத்து மீண்டும் கும்பத்துக்கு வந்து ஒரு சில நாள்கள் மட்டும் இருந்த குரு இப்பொழுது 12 ஆம் இடமான மீனராசியில் கடந்த 21ஆம் திகதி முதல் சஞ்சரித்து உங்களுக்கான பலாபலன்களை வழங்கவுள்ளார்

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் உறுதிகொண்ட மேடராசி அன்பர்களே! உங்கள் ராசிக்கு




பன்னிரெண்டாம் இடத்தில் குருபகவான் பெயர்ச்சியாகி உள்ளார். இதனால் உங்கள் செயற்பாடுகளில் சில குளறுபடிகள் ஏற்படலாம். திட்டமிட்டுச் செயற்படுவதால் நன்மை ஏற்படும். மீனத்தில் உள்ள குருபகவான் தனது 5, 7, 9 ஆகிய பார்வைகளால் முறையே ராசிக்கு நான்காம் இடமான வீடு, வாகனம், ஆறாம் இடமான பணி, வழக்கு, கடன், எட்டாம் இடமான ஆயுள் ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார். குருவின் பார்வை பதிகிற இடங்கள் கோடி நன்மை பெறும் என்கிறது ஜோதிட சாஸ்திரம். பேச்சில் நிதானம் வேண்டும். எதிர்பார்க்கும் வேளையில் பணம் கிடைத்து விடும். சமூகப்பணியில் ஆர்வம் குறையும். உங்கள் சொந்தத் தேவைகளை சற்று சிரமத்தின் பேரில் நிறைவேற்றிக் கொள்வீர்கள். உடன் பிறந்தவர்களுடன் ஒற்றுமை ஏற்படும். தாய்வழி உறவினர்கள் மதிப்பு, மரியாதை தருவர். புதிய வீடு, வாகனம் வாங்கும் திட்டம் நிறைவேறும். பணவசதி குறைவாக உள்ளவர்கள் கூடுதல் வசதியுள்ள வீடுகளில் வாடகைக்காவது குடிபுக அனுகூல சூழ்நிலை ஏற்படும். புத்திரரின் படிப்பு மற்றும் விருப்பங்களை நிறைவேற்ற கடன் வாங்க வேண்டிவரும். பூர்வீக சொத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.உடல் நலம் சிறப்பாக இருக்கும். எதிரிகளால் வந்த துன்பம் மாறி நல்ல சூழ்நிலையை உருவாக்கும். கடன், வழக்கு விவகாரத்தில் சாதக தீர்வு உண்டு. தம்பதியர் ஒற்றுமையுடன் நடந்து குடும்பத்தில் நன்னிலையை உருவாக்குவர். கடுமையான சூழ் நிலைகளையும், சோதனைகளையும் எதிர் கொள்ளும் நேரத்தில் கூட உங்கள் வாழ்க்கை பாதுகாப்புடன் இருக்கும். வேலை காரணமாக அலைச்சல் மற்றும் தொழில் மாற்றம் போன்றவை ஏற்படும். நண்பர்களின் ஆலோசனை, உதவி உங்களின் வாழ்க்கை பாதையை சீராக்க பயன்படும். நிலுவையில் உள்ள ஆதாய பணவரவுகளை கடின நடைமுறைகளைப் பின்பற்றி பெறுவீர்கள். வெளிநாட்டு வேலை வாய்ப்பில் அளவான வருமானம் கிடைக்கும்.

**தொழிலதிபர்கள்:** பட்டாசு, அச்சகம், விவசாய கருவி, பூச்சிகொல்லி மருந்துகள், குளிர்பானம் உற் பத்தி செய்பவர்கள், கல்வி, நிதி நிறுவனம்,விடுதி, முகவர் நடத்தும் தொழிலதிபர்கள் தொழிலில் வளர்ச்சி பெற புதிய திட்டம், அணுகுமுறைகளை செயற்படுத் துவர். லாபம் ஓரளவுக்கு இருக்கும். தொழிலில் இருந்த போட்டி குறையும். அவநம்பிக்கை மாறி நன்னிலை ஏற் படும். பிற தொழில் புரிபவர்கள் தொழில் மாற்றம் செய்ய அல்லது கூடுதல் தொழில் செய்ய கிரகநிலை இடம் தரும். தொழில் சார்ந்த கடன், வழக்கு இருப்பவர்களுக்கு சாதக நிலை ஏற்படும்.

**வியாபாரிகள்:** வியாபாரத்தில் நிலவிய போட்டி குறையும். இருப்பினும் சுமாரான விற்பனை, அளவான பணவரவு என்கிற நிலை தொடரும். பொருள் இழப்பு எதுவும் ஏற்படாது. மற்றவர்களுக்கு லாபம் இவர்களை விட சற்று அதிகமாக இருக்கும். கடன்பெற்று மூல தனத்தை பெருக்க வேண்டியிருக்கும். பொருள் ஏற்று வாகனம் வாங்கும் திட்டம் நிறைவேறும்.

**பணியாளர்கள்:** அரசு, தனியார் துறையில் பணிபுரி பவர்கள் கூடுதல் பணிச் சுமைக்கு உட்படுவர். கவன முடன் குளறுபடி வராமல் செயல்படுவதால் மட்டுமே நிர்வாகத்தின் கண்டிப்பு, ஒழுங்கு நடவடிக்கையை தவிர்க்க இயலும். சிலருக்கு பணியிட மாற்றம் போன்ற தன்மைகள் உருவாகும். சலுகைகள் ஓரளவுக்கு கிடைக்கும். இயந்திர பணி களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அளவான வருமானம் கிடைக்கும். சக பணியாளர்களுடன் நட்பு வளரும். தொழில்நுட்ப பணியாளர்களுக்கு வெளியூர் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்களுக்கு பணியில் அவ்வப்போது குறுக்கீடு ஏற்படும். இதனால், வேலைகளை முடிக்க தாமதமாகும். சலுகைகள் கிடைக்க தாமதமாகும். குடும்பப் பெண்களுக்கு ஓரளவே பணவரவு இருக்கும். கணவரின் வருமானத்திற் கேற்ப செலவுகளை திட்டமிடுவது அவசியம். தாய் வீட்டு சீர்முறை எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். சுயதொழில் புரியும் பெண்கள் புதிய நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தியில் தரம், விற்பனையில் வளர்ச்சி என்கிற நன்னிலை காண்பர்.

**மாணவர்கள்:** மருத்துவம், பொறியியல்துறை, விவசாயம், இரசாயனம், கணிணித்துறை, இதழியல் துறை மாணவர்களுக்கு படிப்பில் இருந்த தாமதமான

**தருபவர் வித்யா**

நிலைமாறி ஞாபகத்திறன் வளரும். ஏனைய மாணவர்கள் இவர்களையும் விட சிறப்பாகப் படிப்பார்கள். ஆரம்பக் கல்வி மாணவர்கள் படிப்பில் மிளிர்வர். நண்பர்களின் உதவியுடன் படிப்பில் இருந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்வீர்கள். படித்து முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு சற்று தாமதமாகும். வேலை கிடைத்தாலும் சுமாரான வருமானமே இருக்கும். பெற்றோர் மனதில் உங்களைப் பற்றிய நல் எண்ணம் வளரும் விதத்தில் செயற்படுவீர்கள்.

**விவசாயிகள்:** விவசாயப்பணிகளை சிறப்புற நிறைவேற்ற அனுகூலத்தன்மை பலமாக அமையும். விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும். பணியாளர் பற்றாக்குறையால் பணிகளில் தாமதம் ஏற்படும். நிலம் சார்ந்த பிரச்சினை சீராகும். கால்நடை வளர்ப்பில் கூடுதல் பணவரவு பெறுவீர்கள்.

(வளரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில் விஞ்ஞானப் போட்டி

யாழ்ப்பாண விஞ்ஞான் சங்கத்தினது ஒரு குறிக்கோளாக விஞ்ஞான அறிவினை மக்களிடையே பரப்புதல் எனும் கருவுக்கமைவாக பாடசாலை விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகள் கடந்த காலங்களைப் போன்று இவ்வருடமும் யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசம் உள்ளடங்கலாக வடமாகாணத்திலுள்ள 1AB, 1C பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளன. இப் போட்டி நிகழ்ச்சிகளுக்கூடாக மாணவர்களிடையே விஞ்ஞானத்தின் அறிவை மேம்படுத்த மேற்கொண்ட செயற்பாடாகவே இப்போட்டி நிகழ்வுகள் அமைகின்றன.

இவ்வருடத்திற்கான போட்டி நிகழ்வுகள் எவ்வாறு அமைய வேண்டுமென மேற்படி பாடசாலைகளின் அதிபர்களது கருத்துக்களை செவிமடுத்ததன் பலனாக பின்வரும் போட்டி நிகழ்வுகள் நடத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப்போட்டி நிகழ்வுகளுக் கூடாக மாணவர்களினது மென்திறன்களை மேம்படுத்த விஞ்ஞான சங்கத்திற்குக் கிடைத்த வாய்ப்பையிட்டு மகிழ்வுறுகின்றோம்.

வினாவிடைப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கண்காட்சிப் போட்டி, சுவரொட்டிப் போட்டி, சித்திரப் போட்டி, விவரணப்படப் போட்டி, பாடசாலைத் தோட்டப் போட்டி.

**விஞ்ஞான வினாவிடைப் போட்டி (2010-2011)**

இப்போட்டியானது இரண்டு கட்டங்களாக நடைபெறும். முதல் கட்டமாக பொது அறிவு எழுத்துப் பரீட்சையும், இரண்டாம் கட்டமாக வாய்மூல வினாவிடைப் போட்டியும் நடைபெறும்.

யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களுக்குத் தனித்தனியாகப் போட்டிகள் நடைபெறும். இப்போட்டியில் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்கள் கலந்துகொள்ளலாம். யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களிலுள்ள 1AB, 1C பாடசாலைகளிலிருந்து க.பொ.த. சாதாரணதர, உயர்தர மாணவர்களிலிருந்து பாடசாலையினால் தெரிவுசெய்யப்பட்ட 5 மாணவர்கள் முதலில் எழுத்து மூலமான பொது அறிவுப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் பங்குபற்றிய ஐந்து போட்டியாளர்கள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் முதல் எட்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு (யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களுக்குத் தனித்தனியாக) வாய்மூல வினாவிடைப் போட்டி நடத்தப்படும். எழுத்து மூலமான பொது அறிவுப் போட்டி 2011ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதி நடைபெறும். பரீட்சை நடைபெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

வாய்மூலமான இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் வினாவிடைப் போட்டியில் கலந்து கொண்டமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் முதலாம், இரண்டாம் நிலைகளைப் பெற்ற பாடசாலைகளுக்கு பரிசில்களும் வழங்கப்படும். இவைதவிர எழுத்து மூலமான பொது அறிவுப் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் முதல் 10 மாணவர்களுக்குத் திறமை அடிப்படையில் எழுத்து மூலமான பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றமைக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**விஞ்ஞான கட்டுரைப் போட்டி**

ஒவ்வொரு கல்லூரியிலும் க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்விகற்கும் ஒவ்வொரு ஐம்பது மாணவர்களுக்கு இரண்டு மாணவர்கள் என்ற விகிதத்தில் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம். எனினும் எந்தவொரு கல்லூரியிலிருந்தும் ஆகக் குறைந்ததாக இரண்டு மாணவர்கள் பங்குபற்ற அனுமதியளிக்கப்படுவர்.

கட்டுரைப் போட்டிக்கு உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளிலிருந்து மொத்தமாக ஆறு (06) தலைப்புக்கள் வழங்கப்படும். அதில் ஒரு தலைப்பிலான கட்டுரையை ஒருமணி நேரத்தினுள் எழுதி முடிக்க வேண்டும். இப்போட்டியில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தலா முதல் மூன்று மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். அத்துடன் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் மூன்று இடங்களைப் பெறும் கட்டுரைகள் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் வெளியிடப்படும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

**விஞ்ஞான பேச்சுப் போட்டி**

இப்போட்டிக்கு ஒரு கல்லூரியிலிருந்து இரு மாணவர்கள் (உயிரியல் / பௌதிக விஞ்ஞானப் பிரிவிலிருந்து ஒருவரும், கலை / வர்த்தகப் பிரிவிலிருந்து ஒருவரும்) மட்டுமே பங்குபற்றலாம். முதல் சுற்றில் போட்டியாளர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு போட்டியாளருக்கும் 30 நிமிடங்களுக்கு முன்னதாக ஆறு தலைப்புக்கள் முறையே உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் ஆகியவற்றில் வழங்கப்படும். அத்தலைப்புக்கள் ஒன்றினைப் பற்றி ஐந்து நிமிடங்கள் பேசுதல் வேண்டும். முதல் சுற்றில் ஒவ்வொரு குழுவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் அதே தினத்தில் நடைபெறும் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறுவர். இறுதிச்சுற்றில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

**விவரணப் படமாக்கல் போட்டி (Documentary film contest)**

இப்போட்டியில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் க. பொ.த. உயர்தர வகுப்பில் கல்விகற்கும் மாணவர்களில் ஆகக்கூடியது ஐந்து மாணவர்களைக் கொண்ட ஒரு குழு மட்டுமே பங்குபற்றலாம். இப்போட்டியில் உயிரியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் ஆகியவற்றில் ஏதாவது ஒரு துறைசார்ந்த ஒரு முக்கிய விடயத்தை அல்லது ஒரு பிரச்சினையை இனங்கண்டு ஆகக்கூடியது 10 நிமிடங்களுக்குள் காட்சிப்படுத்தக்கூடியதாக விவரணப்படம் அமைய வேண்டும். இவ்விவரணப்படமாக்கல் செயற்பாடானது குறைந்த செலவில் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு:- விவரணப்படத்தின் தரத்தினை விட அதில் அடங்கியுள்ள அம்சங்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர் குழுக்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**விஞ்ஞான கண்காட்சிப் போட்டி**

இப்போட்டி இரு பிரிவுகளாக நடத்தப்படும். யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கென தனித்தனியாக யாழ்ப்பாணத்திலும், வன்னிப் பிரதேசத்திலும் நடைபெறும். இப்பாடசாலைகளிலுள்ள க.பொ.த. உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்கள் பங்குபற்றலாம்.

**சுவரொட்டி (Poster) சித்திரம் (Drawing) போட்டிகள்**

இப்போட்டிகள் கண்காட்சிப் போட்டியுடனேயே நடைபெறும். ஒரு பாடசாலையிலிருந்து எத்தனை குழுக்களும் பங்குபற்றலாம். கண்காட்சிப் போட்டியில் ஒரு குழுவின் காட்சிப்படுத்தலுக்கு ஆகக்கூடியது மூன்று மாணவர்கள் மட்டும் உரிமைகோர முடியும். இரு பிரிவுப் போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். சுவரொட்டி, சித்திரப் போட்டிகள், கண்காட்சிப் போட்டி நடைபெறும் இடத்திலே அதே தினத்திலேயே நடைபெறும்.

காட்சிப்படுத்தலுக்கான ஆக்கங்கள் கீழ்க் குறிக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

- விஞ்ஞானம் சார்ந்த புத்தாக்கமாக (Innovative) இருத்தல் வேண்டும்.
- ''நின்று நிலைக்கக்கூடிய தொழில்நுட்பப் புத்தாக்கமும் அபிவிருத்தியும்'' (Sustainable Techno logical Innovation and Development) என்ற கருப்பொருளுக்கு வலுச் சேர்ப்பதாக அமைய வேண்டும்.
- சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், சக்தி வள மேம்பாடு மற்றும் கழிவுப் பொருள்கள் மீள் சுழற்சி என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

**கலாநிதி கு.மிகுந்தன்**
தேர்வுத் தலைவர்
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளிர்ந்த நீரில் குளியுங்கள்!

பூமியில், பெரும்பாலும் தண்ணீர்தான் மூன்று பக்கமும் சுற்றிப் பரவியுள்ளது. அதே போல் மனித உடலும் முக்கால்வாசி தண்ணீரால்தான் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, தண்ணீர் வைத்தியம் என்பது சக்தி வாய்ந்த ஒன்றாகத் திகழ்கிறது. எனவே, உடலுக்கும் உள்ளத்திற்கும் சக்தி தேவை என்றால் குளிர்ந்த தண்ணீரில் தினமும் குளிக்க வேண்டும்.

இதற்காகப் பத்து அங்குல ஆழமுள்ள தொட்டியில் குளிர்ந்த தண்ணீர் நிரப்பிக் கொண்டு தொட்டிக்குள் உட்காருங்கள். ஒரு நிமிடம் தண்ணீருக்குள் முழு உடலும் இருக்கும் விதத்தில் மூழ்கிக் கொண்டு உடலை ஆங்காங்கே தேய்த்து விடவும். ஒரு நிமிடம் முதல் மூன்று நிமிடங்கள் வரை இப்படி குளிர்ந்த தண்ணீரில் சோப் இன்றித் தேய்த்துக் குளிக்கும்போது நிணநீர் மண்டலம் சுறுசுறுப்பாக இயங்கி உள்ளே உள்ள உறுப்புகளை சுத்தம் செய்துவிடுகிறது.

இதனால் இதயமும் சுறுசுறுப்படைகிறது. குளித்ததும் உடலை நன்கு துடைத்து விடுங்கள். இதனால் அடுத்த பல மணிநேரம் சுறுசுறுப்பாகப் பணிபுரியலாம்.

## உலர்ந்த திராட்சையை உபயோகிப்போர் கவனத்திற்கு



சளி பிடித்திருக்கும் போதும், காச நோய் உள்ளவர்களும், வாத நோய் உள்ளவர்களும் திராட்சை அல்லது உலர்ந்த திராட்சையைக் கொண்டு செய்யப்படும் மருந்துகளை தவிர்ப்பது நல்லது.

உலர்ந்த திராட்சையை பதப்படுத்தும்போது ரசாயன அமிலங்கள் கொண்டுதான் பதப்படுத்துகின்றனர்.

எனவே உலர்ந்த திராட்சையை அப்படியே பயன்படுத்துவது மிகவும் தவறு. அதனை நன்றாகக் கழுவிவிட்டு அல்லது தண்ணீரில் சிறிது நேரம் ஊறவிட்டு பின்னர் நன்கு கைகளால் பிசைந்து கழுவ வேண்டும்.

குழந்தைகளுக்கு உலர்ந்த திராட்சையைக் கொடுக்கும்போதும் நன்கு கவனமாகக் கழுவிய பன்னரேக் கொடுக்க வேண்டும்.

## பச்சைக் காய்கறிகள்

பச்சை, மஞ்சள் காய்கறிகள் பழங்கள் சிறந்தவை. இவைகளில் விற்றமின் ஏ, விற்றமின் சி அதிகமாக உள்ளன. விற்றமின் ஏ யில் பீட்டா கரோட்டின் உள்ளது இது ஒரு ஆண்டி ஒக்ஸிடெண்ட். புற்று நோய் வராமல் தடுக்கும் குணம் கொண்டது.

கரட், தக்காளி பீட்ரூட், மாம்பழம், கொய்யா, ஒரேஞ்சு, அப்பிள், எலுமிச்சை, நெல்லி, திராட்சை இவைகளில் இந்த சத்து அதிகம் அவைகளை அடிக்கடி சாப்பிட்டால் புற்றுநோய் வரும் வாய்ப்பு குறைவு.




# மரண அறிவித்தல்



## கணேசபிள்ளை சிவதாஸ்

### (நாதஸ்வர வித்துவான்)

நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட கணேசபிள்ளை சிவதாஸ் 21.11.2010 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தவில் வித்துவான் கலாபூஷணம் கே.கணேசபிள்ளை - நாகரத்தினம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சரஸ்வதி தம்பதியினரின் மூத்த மருமகனும், திருமதி சி.சர்வேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி ப.சுவர்ணாகௌரி (கனடா), பிரபாகரன், சிந்து, பிரசாத், சாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், பவன் (கனடா), சங்கர் (கனடா), ஜானகி, ராஜன், சுதன் ஆகியோரின் அன்பு மாமனும், கிருசன், மாதங்கி, வேந்துசன், பாதுசன், துஷ்யந்தன், பரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தவில் வித்துவான் க.சிவ குமார், சிவசங்கர் மற்றும் சிவனேஸ்வரி (கனடா), சிவறஞ்சினி (கொழும்பு), சிவராம் (கொழும்பு), சிவநந்தினி (கனடா), சிவ காந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராணி, இராசநாயகம், சேகர், சாந்தி, கண்ணன், வனஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் **இன்று (24.11.2010) புதன்கிழமை மு.ப.10 மணியளவில்** அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயனத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஞ்சி ஒரு சஞ்சீவி



இஞ்சி ஒரு சஞ்சீவி எனக்கூறினால் அதுமிகையாகாது ஆயிரக் கணக்கில் பணத்தைச் செலவழித்து நாளொன்றில் இருபது, முப்பது என மருந்து மாத்திரைகளை விழுங்க வேண்டி நேரும். ஒரு சில நோய்களுக்குக் கூட சிரமப்படாது. சந்தைகளில் வாங்கக் கூடிய ஒரு இஞ்சிக் கிழங்கின் மூலம் ஆச்சரிய கரமான சுகத்தைப்பெற இயலும்.

பெரும்பாலும் கிராமப்புறங்களில் ஒவ்வொரு வீடுகளிலும் இஞ்சிப் பயிரைக் காணமுடியும். ஒரு இஞ்சிக் கன்றை வீட்டின் கொல்லையில் வளர்ப்பதற்கு கிராமத்து மக்கள் தவறுவதில்லை. இஞ்சி ஒரு சஞ்சீவி என்பதை கிராமத்து மக்கள் தெரிந்து வைத்திருப்பதே அதற்குக் காரணமாகும். மழை,பனி இவற்றின் காரணமாக ஏற்படு நோய்களுக்கு மட்டுமல்லாது இன்னும் ஏராளமான நோய்களுக்கு இஞ்சி கைகண்ட மருந்தாகின்றது.

வைரஸ்கள், விஷத்தன்மை கொண்ட இராசாயணங்கள், ஒவ்வாத பக்றீரியாக்களுக்கும் எதிராகச் செயற்படும் ஆற்றல் இஞ்சிக்கு உண்டு. இதன் காரணமாகவே அடிக்கடி ஏற்படும் காய்ச்சலுக்குப் பரிகாரமாக இஞ்சி பயன்படுகிறது. அந்த வகையில் தடிமன், காய்ச்சல், சளிக்காய்ச்சல் ஏற்படும்போது நமது முன்னோர்களால் இந்தக் கைகண்ட மருந்தான இஞ்சி அதன் மாற்று உருவான வேர்க்கொம்பு (சுக்கு) பயன்படுத்தப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்டும் வருகிறது. அதேபோன்று மன உழைச்சல்களுக்கு எதிராகச் செயற்படும் ஆற்றலையும் இஞ்சி கொண்டிருப்பதன் காரணமாக மன உழைச்சல் அல்லது மனத் தாக்கங்களுக்குச் சிகிச்சையாளிப்பதற்கும் ஔஷத ஒன்றாக இஞ்சி பயன்படுத்தப்படுகிறது.

தசைக்கோளங்களில் ஏற்படும் பலவீனங்களுக்கும் ஔஷதமொன்றாக இஞ்சி பயன்படுத்தப்படுகிறது.இலங்கையின் நாட்டு வைத்திய விஞ்ஞானத்தில் ரூமற்றிக் ஆதறய்டீஸ், ஒஸ்ரியோ ஆதறைடீஸ் போன்றே வேறும் தசைநார், தசைக் கோளங்களில் ஏற்படும் பலவீனங்கள் தொடர்பாக பயன்படுத்தப்படும் ஔஷதம் ஒன்றாக இஞ்சியைக் குறிப்பிட முடியும். சுளுக்கு ஏற்படுவதன் காரணமாக கை, கால், கழுத்தில் ஏற்படும் வீக்ககத்துக்குப் பரிகாரமொன்றான இஞ்சியை நீங்கள் பரீட்சித்துப்பார்க்க முடியும். இத்தகைய பாதிப்புக்களைக் கவனத்தில் கொண்டு தினசரி தங்களது உணவில் சிறு அளவுப் பிரமாணத்திலாவது இஞ்சியைச் சேர்த்துக் கொள்வதால் அனுபவ ரீதியாக அத்தகைய பாதிப்புக்கள் தவிர்ந்து போவதை உணர முடிவதோடு இனிவரும் நாள்களில் பெருமளவு நோய்த் தாக்கங்கள் ஏற்படாது தவிர்துக்கொள்வதற்கு இது மிக இலகுவானதொரு வழிமுறையாகும்.

இஞ்சியில் அடங்கியுள்ள ஒரு வித மிக சிறப்பான என்சைமின் மூலம் உணவு வகைகளிலுள்ள புரோட்டீன்களை செறிக்கச் செய்கிறது. இதன் காரணமாக உணவு சமிபாடைவதும் இலகுபடுத்தப்படுகிறது. எனவே உணவு சமிபாடு அடையாது சிரமப்படுவோருக்கு இஞ்சி மிகச் சிறந்ததொரு மருந்தாகிறது.

பண்டைய கிரேக்க மக்கள் ஆடம்பரமான உணவு வகைகளையே பெரிதும் விரும்பி உண்டனர். அவர்கள் ஆடம்பர உணவுப் பிரியர்களாகவே காணப்பட்டதாகவும் ஒவ்வொரு உணவு வேளைக்குப் பின்னரும் மெலிதாக வெட்டப்பட்ட சிறு இஞ்சித் துண்டங்கள் சிலவற்றை சப்பிச் சாப்பிடும் வழமையைக் கொண்டிருந்ததாகவும் கிரேக்க குறிப்பேடுகள் மற்றும் நூல்கள் தெரிவிக்கின்றன.

இன்று கொலொஸ்ற்றோல் என்பது பிரச்சினைக்குரிய ஒரு வஸ்துவாகி விட்டுள்ளது. அதைக் கட்டுப்படுத்துவது பற்றியே பெருமளவிலானோர் பேசிக்கொள்கின்றனர். இந்த கொலொஸ்ரோல் மட்டத்தைக் கட்டுப்படுத்தவும் இரத்தக் கட்டிகள் ஏற்படாது தடுப்பதற்கும் இஞ்சியில் அடங்கியுள்ள என்சைம் பேருதவி புரிவதாக மருத்துவ விஞ்ஞானம் கண்டறிந்துள்ளது.

மனோநிலை பாதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்ககளில் அதிலிருந்து விடுபடுவதற்கும் இஞ்சி பேருதவி புரிகிறது. இஞ்சியில் அடங்கியுள்ள சினே ஒல் செறிவின் காரணமாக இஞ்சிக்கு இந்த விசேடகுணம் அமைந்துள்ளது.

ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளில் இஞ்சியைப் பயிர் செய்து கொள்வது சிரமமானதல்ல. இஞ்சிக் கன்றொன்றை நடுவதற்கு மிகச் சிறு இடப்பிரமாணம் போதுமானதாகும். ஆனாலும் இஞ்சியினால் கிட்டும் பலாபலன்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

ஒற்றைத் தலைவலியைச் சமனப்படுத்துவதற்கும் பல்வழியை சமன்ப்படுத்துவதற்கும் முரசுகளில் ஏற்படும் பாதிப்புக்களை நீக்கிக் கொள்வதற்கும் மருந்தொன்றாக இஞ்சி பயன்படுத்தப்படுகிறது. இளம் இஞ்சித்துண்டமொன்றை வாயிலிட்டுச் சப்பிச் சாப்பிடப் பழகிக் கொள்வதானது மாடு அசைபோடுவது போன்று 'பபிள்க்கம்' சப்புவதைவிடப் பெரிதும் ஆராக்கியமானது-குணம்மிக்கது என்பதைப் புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை.

குளிர் காலங்களில் இஞ்சியைப் போன்று குணமளிக்கும் இயற்கையான வேறு மருந்தொன்று இல்லையென்றே கூற முடியும். *(தொடரும்).*

தொகுப்பு: சரா.

# இரத்தத்தில் குளுக்கோசின் அளவைக் கண்டுபிடிக்க நவீன பரிசோதனை



குளுக்கோசின் அளவைக் கண்டுபிடிக்க நவின பரிசோதனை அறிமுகம் செய்யப்பட் டுள்ளது.

இரத்தத்தில் கடந்த மூன்று மாத காலமாக ஏறி இறங்கும் குளுக்கோசின் சராசரி அளவுகோல், இது எப்படி கண்டறியப்படுகிறது என்றால், நம் இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களிலிருந்து பிரித்தெடுத்து பரிசோதனை செய்யப்படுகிறது. இதுவரை ஒருவருக்கு குளுக்கோசின் அளவு கட்டுப்பாட்டில் உள்ளதா? இல்லையா என்று கண்டறியச் செய்யப்பட்டு வந்தது. இப்போது இதே பரிசோதனை ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளதா என்று கண்டுபிடிக்க முடியும் என்று கூறப்படுகின்றது.

பயன்கள்

எந்த நேரம் வேண்டுமானாலும் பரிசோதனை செய்து கொள்ளலாம். ஒரே இரத்த பரிசோதனை மூலம் குளுக்கோஸ் உள்ளதா? இல்லையா என்று கண்டறிய முடியும். இரண்டு அல்லது மூன்று வேளை இரத்தப் பரிசோதனை செய்யவேண்டிய அவசியமில்லை. இந்தப் பரிசோதனை முடிவு 6.5 சதவீதத்துக்கு மேல் இருந்தால் குளுக்கோஸ் உள்ளது என்று உறுதி செய்யலாம். 6 முதல் 6.5 சதவீதம் வரை இருந்தால் நீரிழிவு நோய்வரும் வாய்ப்பு உள்ளது என்று தெரிந்துகொள்ளலாம். 6 சதவீதத்துக்கு கீழ் இருந்தால், குளுக்கோஸ் இல்லை என்று கூறலாம். குளுக்கோசின் அளவு உண்ணும் உணவை பொறுத்து மாறுபடும். பரிசோதனைக்கு முன் கொஞ்சம் அதிகமாகச் சாப்பிட்டாலும் குளுக்கோசின் அளவை அதிகமாகக் காட்டும். இதை வைத்துக் கொண்டு ஒருவருக்கு குளுக்கோஸ் உள்ளது என்று தீர்மானம் செய்யக்கூடாது. இதனால்தான் இந்தப் புதிய பரிசோதனை முக்கியத்துவம் வாய்ந்தது.

## கடுகு சிறிது காரம் பெரிது

பெரிய விஷயங்களை விட சிறிய விஷயங்களே நம்மைக் காயப்படுத்தி விடும்.

எடுத்துக்காட்டு: மலைமேல் உட்கார முடியும் குண்டூசி மேல் உட்கார முடியுமா?

கு.நிர்மி.




## நட்பு

மூன்றெழுத்து மந்திரமான நட்பு
என் வாழ்வின் விடிவெள்ளி
இவ்விடிவெள்ளி என் வாழ்க்கையின்
அணையா ஒளி விளக்கு
இவ் ஒளி விளக்கு - என் உயிர்
பிரியும் வரை ஒளிர்ந்து கொண்டிருக்கும்
இதுதான் மெய்யான நட்பு
இதைப் பிரிக்க முடியாது.

சிவஞானம் துஷாளினி,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# மறைந்தது தும்பிக்கை மூக்கு!



மருத்துவத் துறையில் புதுமையானதொரு சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட்டுள்ள தகவல் ரஷ்யாவிலிருந்து கிட்டியுள்ளது.

ஒருவரது முகத்தின் மத்தியில் தும்பிக்கை போன்று வளர்ந்த தசைக் கோளம் அவருக்குப் பெரும் தொந்தரவாக, தலையிடியாக மாறியிருந்தது. உண்மையில் அபூர்வமாக அந்த மனிதருக்கு ஏற்பட்டிருந்த அந்த தசை வளரும் நோய் "RHINOPHYMA" என்பதாக மருத்துவர்கள் குறிப்பிட்டனர். ரஷ்யாவின் மொஸ்கோ நகரை அண்டிய பிரதேசமொன்றில் வாழ்ந்த 63 வயதான முதியவரொருவருக்கே அந்த நோய் ஏற்பட்டிருந்தது.

அவரது மூக்கு தும்பிக்கை போன்று தசைக் கோளமாக வாய்வரை கீழ்நோக்கி வளர்ந்திருந்தது. உலகில் இத்தகைய புதுமையான நோய் கண்டறியப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவே எனத்தெரியவருகிறது.

உணவு உண்ணவோ, சுவாசிக்கவோ இயலாது இவர் பெரிதும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளார். அவரது மூக்கு தும்பிக்கைபோன்று தடித்து வாய்வரையில் நீண்டுள்ளதால் தமது ஒரு கரத்தால் அத்தசைக் கோளத்தைத் தூக்கிப் பிடித்தவாறே மறுகரத்தால் கரண்டியொன்றின் மூலமாகவே உணவை உண்டு வந்துள்ளார். மருத்துவ நிபுணர்களுக்கு சத்திரசிகிச்சை மூலம் அத்தசைப் பகுதியை அகற்றி விடுவதைத் தவிர வேறு மாற்று வழி இருக்கவில்லை. ஆனாலும், சத்திர சிகிச்சையின் பின்னர் மருத்துவர்கள் எதிர்கொண்ட பெரும் சவால் அவரது முகத்தை முன்னரைப் போன்று சீர்ப்படுத்துவது எவ்வாறு என்பதேயாகும்.

இருந்த போதிலும் மேலதிக தசை நார்களைப் பயன்படுத்திச் சத்திர சிகிச்சையொன்றின் மூலம் அவரது முகத்தைப் பழயை நிலைக்குக் கொண்டுவருவதில் மருத்துவ நிபுணர்கள் திறன் பெற்றிருந்தனர். ஆனாலும் இந்த நோய்க்கான காரணி எதுவென்பது இன்னமும் கண்டறியப்படவில்லை.

இருந்த போதிலும், புகைபிடித்தல், மதுபானம், உயர்இரத்த அழுத்தம், நீரிழிவு போன்றவை இந்த நோய்த் தன்மைக்கு காரணமொன்றாக முடியுமெனத் தெரிவிக்கும் ஒரு சில மருத்துவர்கள், மூக்கு சிவந்த நிறமாக மாற்றமடைதல், நீல நிறமாக மாற்றமடைதல், அல்லது வேறு நிறமாக மாற்றமடைதல்,வெளிரிப் போவது தென்படுமானால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறுவதே நோயிலிருந்து விடுபடுவதற்கான இலகுவழியெனவும் தெரிவிக்கின்றனர்.

தொகுப்பு: கே.எஸ்.எம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம் - 2010
க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின்ஊடக முன்னோடி உதயன்

நன்றித்தரிய ஆசிரியர்:
திரு.ஏ.மொஹமட் தாஹிர், அல்-மின்சஜ் தேசிய பாடசாலை,கபுகஸ்தலாவ.
தொ.பே.இல: 077-6526981

G.C.E.(O/L) வலம்-6 வெளியீடு-2 நுவரெலியா

## English Language - Time - one hour

01. There are some headings from a local newspaper. Read them.

| | | | |
|---|---|---|---|
| AROUND THE WORLD | A | EDUCATION | B |
| TV | C | SPORTS DIARY | D |
| TRADE | E | WEATHER | F |
| OBITUARIES | G | CLASSIFIED | H |
| RADIO | I | EMPLOYMENT OPPORTUNITIES | J |
| AIRLINE SCHEDULE | K | ENTERTAINMENT | L |
| ASTROLOGICAL GUIDE | M | | |

Now which will you be looking for to find out the following? Write the letter of the heading against the sentences in the cages.
1) What is happening outside Sri Lanka?
2) The death of a relation.
3) To know the arrival time of a friend flying from abroad.
4) Is it safe to go fishing?
5) What's your future going to be?
6) 3 months IT course at British Council.
7) "Doo Daruwo" at ITN channel at 8.30 p.m.
8) A 10 perch land sale near Galle Face in front of Galle Road.
9) An IT graduate seeking a job in a mercantile firm.
10) 20-20 cricket match today begins in Galle.

02. Here is a notice taken from a newspaper. Read it and answer the questions given below.

NOTICE
Exhibition and Sale:
A two – day exhibition and sale of garden ornaments, masks, tray gardens, mosa ic stepping stones and mosaic table tops by Mrs. Rockwood will be held from December 19th at 31, Bullers Lane, Colpetty.
Mrs. Malini Bodhinagoda will declare open the sale and exhibition at 10.30 a.m. on December 19th.

a) Who is holding the exhibition?
..............................................................
b) Name three different items you will find at the exhibition.
..............................................................
c) Who will declare open the exhibition?
..............................................................
d) Where is it going to be held?
..............................................................
e) When will the exhibition end?
..............................................................

03. Read the following newspaper headlines and match them correctly with those given below. Write the LETTER of the headline in the correct box.
A Leopard terrorizing villagers nabbed.
B Cyclist run over by hiace van.
C "Rupavahini not clear" say residents.
D "Don't harbour wanted criminal" says C.I.D.
E "Tea helps beat heart disease" say doctors.

1. A great relief (..........)
2. A complaint (..........)
3. A request (..........)
4. A medical discovers (..........)
5. A warning (..........)
6. A tragedy (..........)

04. Read the following passage and complete the necessary details.
Clothes are very expensive in Sri Lanka, but Sri Lankans living abroad love to buy clothes from Sri Lanka. The most expensive clothes are found in the fancy shops in Colombo. Women's clothes are expensive, but men's clothes are even more expe nsive than women's. When I went to buy a T-Shirt, I looked at the sleeveless ones because I thought they would be cheaper than the ones with short sleeves. I was wrong. The T-Shirts with designs were less expensive than the ones without designs, that was the only difference. I wanted a T-Shirt with a lot of colours. The nicer T-Shirts had two or three colours, the uglier ones had two pale colours.
* The writer went to buy ..............................................
* T-Shirts with two or three colours ..............................................
* The writer thought sleeveless T-Shirts are (cheaper / more expensive / less expensive)
* Sri Lankan living abroad ..............................................
* Women's clothes are (cheaper/ uglier/ more expensive)

05. Complete the paragraph by filling in the blanks with the correct form of pronoun in the bracket.
1. Bandara and.......... his ............ (he) brother work together in the chena from morning till evening. Last year .................. (their) had a good harvest. Every year .................. (they) work has been rewarded. The secret of ............ (they) success is hard work. It will give ................ (they) a good harvest this year, too.
2. Nirmala, a loyal pupil of .............. (I) and ............ (she) friend, Amitha, work at the People's Bank, Nugegoda. When ................ (I) visited the bank yesterday, Nirmala introduced ............ (she) friend to ..................(I).

06. Your friend Nimalka has invited you to spend next Sunday at her place. But, unfortunately you are unable to do so. Write a note in the space given below thanking her and giving a reason for your inability to accept the invitation that day.
..............................................................
..............................................................

07. Look at the information given below. Use it and write a short paragraph about William Shakespeare. Use about 70 words.

| | | |
|---|---|---|
| Name | : | William Shakespeare |
| Date of birth | : | 23rd April, 1564 |
| Place of birth | : | Stratford – on – Avon in England |
| Occupation | : | Poet, play-wright, actor |
| Marriage | : | To Anne Hathaway in 1581 |
| Children | : | Three daughters and one son |
| Names of some of his plays: | | |
| Tragedies | : | Romeo & Juliet, King Lear, Hamlet |
| Comedies | : | Winter's Tale, Tempest |
| Historical Plays | : | Julius Caesar, Richard II |
| Death | : | 1616 |

William Shakespeare ..............................................................
..............................................................

08. You moved to a new house last week. Write a letter to the post master of the area telling him about the change of address and asking him to mail/direct your letters to the present address.

## English Language - II Time - 2 hours

09. There is an incorrect word in each line. Write the correct word in the space provided.
Florence Nightingale which was born in 1820 in Italy was ( )
a famous nurse. She show much interest in nursing ( )
from her childhood. But her parents who was very much rich ( )
didn't want her to become a nurse. On 1853 she started a nursing ( )
centre in London. Soon she opened many centers to the training ( )
of nurses in London. She was very kind for her patients. Florence ( )
went round the hospital with a lamp on her hand, at night to see ( )
her patients. Therefore the patients begin to call her "The lady ( )
with the Lamp". Florence died in the age of ninety years. Her name ( )
is well known all in the world. ( )

10. Choose the correct word from the box below and fill in the blanks to complete the text.

| | | | | |
|---|---|---|---|---|
| central | drought | important | insects | islands |
| located | medicinal | oxygen | produced | regular |

Tropical rainforests are .......................... around the equator. They are found in South and ...................... America, Africa and in the .......................... around Australia and Asia. The rainforests are ........................ for human existence. There are many mammals, birds, ...................... and reptiles in these forests. We can find a large number of ............................ plants in these rainforests. These vast forest areas help us get a .................... rainfall. They also help us to prevent floods, ........................ and soil erosion. A significant amount of world's ..................is ........................ and given out into the atmosphere by these rainforests.

11. Read the following weather forecast for tomorrow and answer the questions given below.

WEATHER
South west monsoon conditions prevail over the island. There will be showers or thundershowers at many places in the Central Sabaragamuwa and Western provinces and in Galle and Matara districts. Rain may be fairly heavy at some places and may be accompanied by fairly strong westerly winds.
Showers will occur at a number of places in the North Central and North Western provinces.
Isolated showers or thundershowers are likely in the Uva and Eastern provinces particularly during the afternoon or evening.
Sea area off west and south west coasts will be rough with fairly strong winds and occasional showers, Sea areas off west coast will be fairly rough.

a) What are the two districts mentioned here?
..............................................................
b) Will it be a good day for fisherman along the west coast?
..............................................................
c) Which monsoon has set it?
..............................................................
d) What sort of weather will the Uva province have during afternoon or evening?
..............................................................
e) Which parts of the coasts will have occasional showers?
..............................................................

12. Read the following passage on Wilpattu National Park and fill in the blanks with missing letters in the box to complete it.

WILPATTU NATIONAL PARK
Wilpattu National Park is situated 180 km f .................... Colombo. It is the largest wild life s .................. in Sri Lanka. Wilpattu reserve is a p ............. attraction for tourists. A visit to Sri Lanka is not c ................ without visiting this jungle. We can see many tropical a ................ such as monkeys, lories, d .............. , sambur and elephants roaming about freely in their n ................ surrounding. We can visit this place with the help of a guide. They will t ................ us around in a land-over and show everything. We can also see a wide v ......... of birds there. We can take p ....... of animals from a distance. We are not allowed to take guns into the park.

13. Complete the following dialogue. Use the phrases given below. First one is done for you.
Karthi : Hello Kamal. Good Morning.
Soorya : (1) Good Morning Karthi. Did you read today's Daily Mirror Paper?
Karthi : (2) ..............................................................
Was there anything special?
Soorya : (3) ..............................................................
Karthi : (4) ..............................................................
Soorya : It's a puzzle word. We need five relations with the knowledge in different areas.
Karthi : (5) ..............................................................
Soorya : Let's tell this to our English teacher
(6) ..............................................................
Karthi : There goes the bell. Let's meet at the interval and discuss more.

a) Competition? b) Good Morning
c) Ya, there's a Competition. d) How can we select them?
e) She will help us and she will give more information about that.
f) No, I was busy with my examinations.

15. Your class has arranged a tour to the cities of Sri Lanka. Write a progress report of work done so far regarding the tour to be handed over to the class teacher. Use about 150 - 160 words.
You may include these points.
- Date and time of leaving and duration of the tour
- Getting permission from the principal
- Booking of buses
- Collecting of money
- Arrangement regarding meals, accommodation etc.
- Date of return

16. Write on one of the following using about 200 words.
a. There is a frequent power failure in your area. Write a letter of complaint to the Area Electrical Engineer.
Include: the time of power interruption, Inconveniences causes by the children. Decrease in the production of the factories etc.
or
b. "An unforgettable incident in my life."

(END)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வெற்றிடம்



# MCN கணினிப் பூங்கா



**பாடங்கள்**

* MS Windows & It
* MS Office
* Photo Shop
* Internet & E- mail
* English
* DTP
* Tally
* Accounting
* Auto CAD
* Java Programming
* Video Editing
* Multimedia

**வகுப்புகள் நடைபெறும் இடங்கள்**

★ மந்திகை
★ உடுப்பிட்டி
★ யாழ்ப்பாணம்
★ சுன்னாகம்
★ மானிப்பாய்
★ அச்சுவேலி
★ வவுனியா
★ மன்னார்
★ கிளிநொச்சி
★ விசுவமடு
★ மல்லாவி

**வெற்றிடங்கள்**


1) கணினி கற்பிக்கக்கூடிய போதனாசிரியர்கள்
தகைமை:- Computer Diploma கணினிப் பட்டதாரி

2) ஆங்கிலம் கற்பிப்பதற்கான ஆசிரியர்
தகைமை:- பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்/
Dip in English/ ஆங்கிலத்தை ஒருபாடமாகக் கொண்ட பட்டதாரி.

3) கிராமங்களுக்குச் சென்று MCN கணினிப் பூங்காவை விளம்பரப்படுத்தக்கூடிய விளம்பரதாரர்கள்.
தகைமை:- G.C.E. AL கணினி அறிவு.

(106400) **தொடர்புக்கு: 0771290458**


# கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய தெய்வக் குழந்தைகள் இல்லப் பொருளாளரும், பிரபல வர்த்தகரும் சிறந்த சமூகசேவையாளருமாகிய


**தாமோதரம்பிள்ளை நாகலிங்கம்**

20.11.2010 அன்று காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனிடம் வேண்டுகிறோம்.

**நிர்வாகம்**
தெய்வக்குழந்தைகள் இல்லம்,
புனித அந்தோனியார் ஆலயம், புங்குடுதீவு.

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 25.10.2010 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர் **மாணிக்கவாசகர் விஸ்ணுகுமாரன்**

அவர்களின் நினைவாக இன்று(24.11.2010) புதன்கிழமை காலை 5 மணிக்கு திக்கம்பள்ளம் தனி வைரவர் ஆலய முன்றிலில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சாந்தி, சபிண்டீகரணத்திலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விளாத்தி ஓலை,
திக்கம், அல்வாய் மேற்கு,
அல்வாய்.
(104495)
குடும்பத்தினர்.

## யாழ்ப்பாண.....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

* சுவரொட்டியும், சித்திரமும் சாதாரண Bristol Board ஒன்றின் பரிமாணத்தில் தயாரிக்கப்பட வேண்டும்.

* இயலுமானவரை குறைந்த செலவில் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

* இலகுவில் இடம்மாற்றக்கூடிய (காவிச்செல்லக் கூடியதாக) இருத்தல் வேண்டும்.

இக்காட்சிப் பொருள்கள் தொடர்பான எவ்விதமான செலவுகளையும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பொறுப்பேற்காது என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலைத் தோட்டப் போட்டி

இப்போட்டி பாடசாலைக்கானது. இப்போட்டியை மதிப்பீடு செய்வதில் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

* தோட்டத்தின் விஸ்தீரணம்.

* தோட்டத்திலுள்ள பயிர்கள்/ தாவரங்களின் வகைகள்.

* மூலிகைத் தாவரங்களின் எண்ணிக்கை.

* அவரைப் பயிர்கள் மற்றும் கிழங்குப் பயிர்கள்.

* நாளாந்த தேவைக்குப் பயன்படும் வகையிலுள்ளவை (இலைக்கறி வகைகள்)

* பழமரங்களின் எண்ணிக்கை.

* அலங்கார தாவரங்களின் எண்ணிக்கை.

* தாவரங்களுக்கு பெயர்ப்பலகையிருத்தல் (தாவரப் பெயர், குடும்பப் பெயர், பொதுப்பெயர்)

* சேதன முறையிலான பராமரிப்பு, பூச்சி பீடைக் கட்டுப்பாடு

* கழிவுகளை மீள்சுழற்சி செய்தல், கூட்டுரம் தயாரித்தல்.

* பொதி பயிர்ச்செய்கை.

* பீடைகளின் தாக்கமும், அவற்றின் அளவும்.

* பயிர்ச்செய்கை முறைகள், சிறப்பான பயிர்ச்செய்கைகள், ஊடு பயிர்ச் செய்கை.

* மாணவர்களின் பங்களிப்பு

பெப்ரவரி மாதம் 2011இல் இப்போட்டி மதிப்பீடு செய்யப்படும். பாடசாலை அதிபர்கள் தங்களது பாடசாலையை முன்கூட்டியே பதிவு செய்தல் வேண்டும். சிறந்த பாடசாலைத் தோட்டத்திற்கான பரிசில்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

மேற்படி போட்டிகளில்1AB, 1C பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்கள் பங்குபற்றலாம். ஆகையால் இப்போட்டிகளில் குறிப்பிட்டவாறு மாணவர்களை பங்கெடுப்பதில் பாடசாலைகள் ஊக்கமளிக்கவேண்டும் என யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

## இனியும் வேண்டாம்....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசியல் பிரமுகர்களுக்கு பதிலளித்திருப்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். பயங் கரவாதிகள் என வர்ணிக்கப்பட்டவர்களின் பதில் இப்படி அமைந்திருக்க, தமிழ் மக்கள்தான் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்ற அரசின் கூற்று எந்தளவுக்கு பொருத்தப்பாடுடையது என்பது எல் லோருக்கும் புரிந்துவிடும்.

இந்த வகையில் தமிழ் மக்களைக் குறிவைத்து அரசும் அரசியல் கட்சிகளும் மேற்கொள்ளும் திட்டமிட்ட சதி முயற்சிகளைக் கைவிடவேண்டும். பிரிந்துபோன எம் உறவுகளை எம்முடன் சேர்த்து விட வேண்டும்.

எல்லா மக்களும் இந்த நாட்டில் சமமானவர்கள் என்ற ஜனாதி பதியின் கூற்று உண்மையாக வேண்டும். எங்கள் இடங்களில் அச்சுறுத்தலற்ற சுதந்திரமான வாழ்வு மலர வேண்டும்.

இதுவே அரசும் அரசியல் கட்சிகளும் இனி எமக்கு செய்யும் மிகப் பெரிய உதவியாகும், விடுத்து எம்மீது மீண்டும் ஓர் இனவாதத்தைக் கட்டவிழ்த்து அதில் குளிர்காய முற்படுவது வருத்தத்துக்குரியது என்பதே தமிழ் மக்களின் அவாவும் ஆசையுமாக உள்ளது.


**தேவை**

லவன் கபேக்கு சகல வேலைகளும் தெரிந்த றொட்டி தயாரிப்பாளர் தேவை. தகுந்த வேதனம் வழங்கப்படும்.
தொடர்பு:- லவன் கபே
தொ.பே:- 0770856457

# ஜயோதா



சீட்டிழுப்பு இலக்கம் 701 திகதி 22-11-2010

வெற்றி எண்கள்

**06 33 45 50 J**

ஜக்பொட் பரிசு ரூ. 14,121,760/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 14,121,760/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 2,000/= | 22,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 411 | 1,000/= | 411,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 686 | 1,000/= | 686,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16235 | 60/= | 974,100/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7814 | 40/= | 312,560/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 192569 | 20/= | 3,851,380/= |
| | | மொத்தம் | ரூ. 7,057,040/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| காலி | 600577011-6-26 |
| மாத்தளை | 600566903-9-09 |
| கொழும்பு | 600574964-1-21 |
| கம்பஹா | 600577439-2-42 |
| மொனராகலை | 600569747-8-08 |
| பதுளை | 600569686-6-26 |
| கண்டி | 600563718-0-30 |
| மாத்தறை | 600562378-3-03 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,457,040/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 14,643,910/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 25 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356., கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை.
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


# அறிவித்தல்

## பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கிளைக் குழுக்களைத் தெரிவு செய்தல் 27.11.2010

மேற்படி சங்கத்தின் துணை விதி 20.02இன்படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்காக இக்கிளைகளின் பொதுச் சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 9இற்கு அமைய கீழ் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறுமென யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம் 27.11.2010 முற்பகல் 10 மணி.
கூட்டம் நடைபெறும் இடங்கள் விவரம் கீழ் வருமாறு.

| தொ.இல. | கிளை இல | கிளைப்பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 67 | பண்டத்தரிப்பு | பண்டத்தரிப்பு சென்மேரிஸ் ச.ச.நிலையம் |
| 02 | 73 | விளான் | தலைமைக் காரியாலயம், பண்டத்தரிப்பு |
| 03 | 74 | இளவாலை | உயரப்புலம் ஸ்ரீமுருகன் ச.ச.நிலையம் |
| 04 | 75 | மாதகல் | மாதகல் காந்திஜி ச.ச.நிலையம் |
| 05 | 76 | சகாயபுரம் | சகாயபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் |
| 06 | 77 | சில்லாலை | சாந்தை விநாயகர் ச.ச.நிலையம் |

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

(சி/572523)

**கி.இந்திரசித்து**
கௌரவ செயலாளர், பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியத் திருவிழாவில் நெரிசல் 350 பேர் பலி; அநேகர் படுகாயம்!

போனோபென்,நவ.24

கம்போடியாவில் நடந்த வருடாந்தத் திருவிழாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 345இற்கும் மேற்பட்டோர் பலியாயினர். மேலும் பலர் காயமடைந்தனர்.


கம்போடியா தலைநகர் போனேபென் மாகாணத்தில் வருடந்தோறும் தண்ணீர் திருவிழாவை கம்போடி மக்கள் கொண்டாடுவது வழக்கம். இந்தாண்டும் டோன்லிசாப் நதிக் கரையில் கொண்டாட குவிந்தனர்.

திருவிழாவின் இறுதி நாள் என்பதாலும், விடுமுறை என்பதாலும் மக்கள் பெருமளவில் கூடியிருந்தனர். இந்த நதியின் குறுக்கே பாலம் ஒன்று உள்ளது. சம்பவத்தன்று திருவிழாவை கொண்டாடுவதற்காக பலர் குவிந்தனர்.

இதில் பாலத்தில் மக்கள் கூட்டம் அதிகமாகவே பலருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. பலர் தாக்குப்பிடிக்க முடியாமல் நதியில் குதித்தனர். கூட்ட நெரிசலில் சிக்கி 345 பேர் பலியாயினர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பிரதமர் ஹூன் சென் கூறுகையில், "கூட்ட நெரிசலில் 300இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம். காயமடைந்தவர்கள் வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்னும் எத்தனை பேர் ஆற்றில் மூழ்கி பலியாயினர் என்பது தெரியவில்லை. தேடும் பணி நடந்து வருகிறது என்றார்.

## உறவில் நெருக்கம்....



சந்திப்பு:- தென்கொரியா வந்திருந்த வட மற்றும் தென்கொரிய நாடுகளுக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் ஸ்டீபன் போஸ்வொர்த் (வலது), தென்கொரிய வெளியுறவு அமைச்சர் கிம்-சங்-ஹூ வாங்கை தலைநகர் சியோலிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் சந்திக்கிறார்.

## 17 வயது மாணவனுடன் கத்திமுனையில் பத்துப் பெண்கள் பாலியல் பலாத்காரம்

சிட்னி, நவ. 24

ஆஸ்திரேலியாவில் 17 வயது பாடசாலை மாணவரைக் கத்திமுனையில் 10 பெண்கள் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவத்தால் சிட்னியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆஸ்திரேலியாவின் ஏ.ஏ.பி. எனும் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், ஆஸ்திரேலியாவின் தெற்கு வேல்ஸ் மாகாணத்தில் கடந்த வாரம் பாடசாலை சென்று கொண்டிருந்த 17 வயது சிறுவனை 10 பெண்கள் திடீரென வழிமறித்தனர்.

சமையலுக்கு பயன்படுத்தும் கத்தியைக் காட்டி மிரட்டினர். இதில் 4 பெண்கள் அந்த சிறுவனைப் பாலியல் பலாத்காரம் செய்தனர். இது குறித்துப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், சிறுவனிடம் பலாத்காரம் செய்த பெண்கள் அனைவரும் ஆபிரிக்க நாடான பாப்புவா நியூகினியாவைச் சேர்ந்தவர்கள்.

தற்போது அந்த மாணவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் அவர் அளித்த வாக்குமூலத்தில் தனக்கு ஏதேனும் எய்ட்ஸ், எச்.ஐ.வி. பாதிப்பு வந்துவிடும் என தான் அஞ்சுகிறார் என்றும், தன்னைப் பலாத்காரம் செய்த பெண்களுக்கு ஏதேனும் எச்.ஐ.வி. வைரஸ் உள்ளனவா எனச் சோதனை செய்யும் படியும் கூறியுள்ளார்.

ஐ.நா. அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில், உலகின் அதிகம் எய்ட்ஸ் நோயாளிகள் உள்ள நாடு பாப்புவா நியூகினியா தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனாலேயே அந்த மாணவர் தனக்கு எய்ட்ஸ் பாதிப்பு வந்துவிடுமோ எனப் பீதியில் உள்ளார் எனப் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## 1,600 கி.மீ. வேகத்தில் ஓடும் அதிநவீன கார்

லண்டன், நவ. 24

உலகிலேயே அதிவேகமாக இயங்கும் புல்லட் ரயில் சீனாவில் செயல்பாட்டில் உள்ளது. இது மணிக்கு 1,200 கி.மீ. வேகத்தில் பாய்ந்து செல்கிறது. ஆனால் அதைவிட அதிவேகமாகச் செல்லக்கூடிய கார் தயாரிக்கப்படவுள்ளது.

மணிக்கு சுமார் 1,600 கி.மீற்றர் வேகத்தில் பாய்ந்து செல்லத்தக்க இக்காரை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் உருவாக்கவுள்ளனர். இக்கார் தயாரிக்கும் பணியில் ரிச்சர்ட் நோபல் என்பவர் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டுள்ளனர். இப்பணி எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளது.

அதில், அதிசக்தி வாய்ந்த ஜெட் என்ஜின், ரொக்கெட் ஆகியவை பொருத்தப்படுகின்றன. மேலும், இதன் பாகங்கள் மிக மெலிதான உலோக கலவையினால் அமைக்கப்படவுள்ளன. மேலும் 4 அலுமினிய சக்கரங்களும் பொருத்தப்படவுள்ளன.

இக்கார் எதிர்வரும் 2012ஆம் ஆண்டு பயன்பாட்டில் வரும். அப்போது அதிவேகமாக இயங்கி உலக சாதனை படைக்கும் என விஞ்ஞானி ரிச்சர்ட் நோபல் தெரிவித்துள்ளார்.

ரிச்சர்ட் நோபல் ஒரு பொறியியலாளர் ஆவார். இவர் சாதனை படைப்பதில் ஆர்வம் படைத்தவர். கடந்த 1983ஆம் ஆண்டு மணிக்கு 1,019 கி.மீற்றர் வேகத்தில் செல்லும் டர்போ ஜெட் காரை நிவேதா பாலைவனத்தில் ஓட்டி கடந்து சாதனை படைத்துள்ளார்.

1997ஆம் ஆண்டு ஆண்டில் கிரீன், மணிக்கு 1,228 கி.மீற்றர் வேகத்தில் ஓட்டி சாதனை படைத்த சூப்பர் சோனிக் கார் இவர் தலைமையில் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முதல் அட்டையில் சூகியின் படம்: ஒன்பது பத்திரிகைகளுக்குத் தடை

யாங்கூன், நவ. 24

மியான்மரின் ஜனநாயகத் தலைவி ஆங் சாங் சூகி படத்தை முகப்பு அட்டையில் போட்டதால், ஒன்பது பத்திரிகைகளுக்கு, பதிப்பு விதிகளை மீறியதாக, அந்நாட்டு ராணுவ அரசு தடைவிதித்துள்ளது.

மியான்மரின் தேசிய ஜனநாயக லீக் கட்சித் தலைவி சூகி. சமீபத்தில் விடுதலையானதையொட்டி, அந்நாட்டு பத்திரிகைகள் சில அவரது படத்தை தங்களது முகப்பு அட்டையில் வெளியிட்டிருந்தன.

இந்நிலையில், அந்தப் பத்திரிகைகள் அனைத்தும், நாட்டின் பதிப்பு விதிமுறைகளை மீறிவிட்டன எனக் குற்றம் சாட்டப்பட்டு, இராணுவ அரசால் தடை செய்யப்பட்டுள்ளன.

விதிமுறை மீறல்கள் குறித்து எவ்வித விவரங்களும் வெளியிடப்படவில்லை. இந்த அளவு முக்கியத்துவம் வருவதை இராணுவ அரசு விரும்பவில்லை என்று மட்டும் தெரிகிறது.

## 10 ஆண்டுகளுக்குப் பிறகு புதல்வரைச் சந்தித்த சூகி

யாங்கூன், நவ. 24

10 ஆண்டுகளுக்குப் பின்னர் மியான்மர் எதிர்க்கட்சித் தலைவி தனது புதல்வரைச் சந்தித்துள்ளார்.

மியான்மரின் எதிர்க்கட்சித் தலைவி சூகியூ (வயது - 65).




இராணுவ ஆட்சிக்கு எதிராக செயற்பட்டதால் 20 ஆண்டுகள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். எனவே அவரைச் சந்திக்க எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

இந்நிலையில் சமீபத்தில் அங்கு நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. இதைத் தொடர்ந்து கடந்த சில நாள்களுக்கு முன்னர் சூகி வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

சூகியின் 2ஆவது புதல்வர் கிம் ஆரிஸ் (வயது - 33) பாங்கொக் நகரில் தங்கியுள்ளார். இவர் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் தனது தாயார் சூகியை சந்தித்துள்ளார்.

தற்போது அவர் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனது தாயை நேரில் சந்திக்க மியான்மர் அரசிடம் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அதை ஏற்றுக்கொண்டு அவருக்கு பாங்கொக்கிலுள்ள மியான்மர் தூதரகம் விசா வழங்கியது. இதைத் தொடர்ந்து அவர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை விமானம் மூலம் யாங்கூன் வந்து சேர்ந்தார்.

விமானத்திலிருந்து இறங்கிய அவர் தன்னைச் சந்திக்க அங்கு காத்திருந்த தனது தாயார் சூகியை கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் வடித்தார். 10 ஆண்டுகளுக்குப் பின்னர் தாயும் மகனும் சந்தித்து நலம் விசாரித்துக் கொண்டனர்.

## ஷ்வார்ஸ்நேகர் மீண்டும் சினிமாவுக்கு

வாஷிங்டன், நவ. 24

அமெரிக்காவில் கலிபோர்னியா ஆளுநராக இப்போது இருப்பவர் அர்னால்ட் ஷ்வார்ஸ்நேகர்.

இவர் இந்தப் பதவிக்கு வருவதற்கு முன்னர் சினிமா நடிகராக இருந்தார். டெர்மினேட்டர் உட்பட பல படங்களில் இவர் நடித்து புகழ் பெற்றுள்ளார்.

இவரது பதவிக்காலம் எதிர்வரும் ஜனவரி மாதத்துடன் முடிவடைகிறது. அதன்பின்னர் இவர் திரை உலகத்துக்கு திரும்ப இருக்கிறார்.

மீண்டும் சினிமாவில் நடிக்கப் போகிறேன் என்று இவர் கூறி இருக்கிறார்.

## சவூதி அரேபிய மன்னர் சிகிச்சைக்கு அமெ.பயணம்



ரியாத்,நவ.24

இரத்தக்கட்டி நோய், கடும் முதுகு வலி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள சவூதி அரேபிய மன்னர் அப்துல்லா பின்-அப்துல் அஜீஸ் (வயது - 86) மேல் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றுள்ளார் என சவூதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து சன்டே எனும் சவூதி அரேபிய அரசு தொலைக்காட்சி சேவைக்கு சுகாதாரத்துறை அமைச்சர் அப்துல்லா - அல் - ரபியாஹ் அளித்த பேட்டியில், சவூதி அரேபிய மன்னர் அப்துல்லா பின்-அப்துல்லா அஜீஸுக்கு சமீபத்தில் கடும் முதுகுவழி ஏற்பட்டது.

இவரை பரிசோதித்த டாகடர்கள் இரத்தக்கட்டு வலியால் அவதியுறுகிறார் எனத் தெரிவித்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து மேலும் பல மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டு அமெரிக்காவில் சிறப்பு சிகிச்சை அளிக்க டாக்டர்கள் ஆலோசனை வழங்கினர். அதன்படி இவருக்கு மேல் சிகிச்சை அளிக்க முடிவு செய்யப்பட்டது.

இதனால் மன்னர் அப்துல்லா பின்- அஜீஸ் திங்கட்கிழமை அமெரிக்க புறப்பட்டுச் சென்றுள்ளார். அவர் சிகிச்சை முடித்து நலமுடன் நாடு திரும்புவார். அதுவரை சவூதி இளவரசரும் ரியாத் ஆளுநருமான சால்மன்-பின் அப்துல் அஜீஸ் தற்காலிகப் பொறுப்பேற்பார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சுரங்கத்தில் சிக்கியவர்களை மீட்க 'எந்திரன்'

சிட்னி,நவ.24

நியூஸிலாந்து நிலக்கரிச் சுரங்கத்தில் கடந்த 3 நாள்களாக சிக்கித் தவிக்கும் 29 பேரை மீட்க இயந்திர மனிதனை அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுரங்கத்திலிருந்து கெட்ட வாயுகள் வெளிவருவது குறைந்ததும் இப்பணி மேற்கொள்ளப்படும். மீட்புப் பணியை ஒருங்கிணைத்து வரும் பொலிஸ் கொமாண்டர் கேரி நோலெஸ் இதனை தெரிவித் தார் என நியூஸிலாந்து ஹெரால்ட் என்ற உள்ளூர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நியூஸிலாந்தின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள நிலக்கரி சுரங்கம் ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை வெடிவிபத்து ஏற்பட்டது. இதனால், [illegible] ஏற்பட்ட [illegible] கொண்டனர்.

சுரங்கத்திற்குள்ளிருந்து கரியமில வாயு, மீதேன் ஆகிய கெட்ட வாயுக்கள் அதிகளவில் வெளியேறிவருதால் அவர்களை மீட்கும் பணி திங்கட்கிழமை தடைப்பட்டது.

இதற்கிடையே, இந்த வாயுக்கள் வெளியேறுவது குறைந்துவிட்டதா என அரைமணி நேரத்திற்கு ஒரு முறை சோதனை செய்யப்பட்டு வருகிறது. மீட்புப் படையினர் தயார்நிலையில் உள்ளனர்.

வாயுக்கள் வெளியேறுவது குறைந்ததும் இயந்திர மனிதர்களைச் சுரங்கத்திற்குள் அனுப்பி மீட்புப்பணி மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுரங்கத்தின் எந்தப் பகுதியில் முதலில் இறங்குவது என்பது பற்றி ஆலோசனை நடத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சென்றலைட்ஸ் சொக்ஸ் சம்பியன்



யாழ்ப்பாணம், நவ.24

பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கழகங்களுக்கு இடையிலான மின்னல் வேக கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் மின் ஒளியில் இடம்பெற்றது.

இதில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை 40:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

இதில் சிறந்த ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் எஸ்.தயாளன் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாவது இடத்திற்காக இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் புளூஸ் அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் சென்றலைட்ஸ் புளூஸ் அணி, தன்னை எதிர்த்து விளையாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை 33:23 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவரும், மாநகர சபையின் உறுப்பினருமான என்.ராஜதேவனும் சிறப்பு விருந்தினராக மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் சம்பத் வங்கியின் பிராந்திய முகாமையாளருமான எஸ்.சங்கரும் கலந்துகொண்டனர். (த-23)

# நவஜீவன் வி.கவுக்கு வெற்றிக்கிண்ணம்

வலி.வடக்கு, நவ.24

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு பொலிஸ் நிலைய கழகங்களுக்கு இடையே, நடமாடும் சேவையை முன்னிட்டு நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் திறமையை நிருபிக்கும் வகையில் மோதிக் கொண்ட போதிலும் இறுதி இரு நேர்சுற்றுக்களையும் வென்று நவஜீவன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

முதல் சுற்றை தெல்லிப்பழை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

அடுத்த இரண்டாம் மூன்றாம் சுற்றுக்களை உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம் 25:17, 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது. ஆட்ட நிறைவில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (த.86)

# கடற்கரை உதைபந்தாட்டம்; பயிற்சி முகாம் நீர்கொழும்பில்

கொழும்பு, நவ.24

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தோடு இணைந்து ஏற்பாடு செய்துள்ள கடற்கரை உதைபந்தாட்டப் பயிற்சி செயலமர்வு ஒன்று நீர்கொழும்பு கடற்கரைப் பிரதேசத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இது தொடர்பாகக் ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத் தலைவர் மணிலால் பெர்னான்டோ கருத்து கூறுகையில்,

தற்போது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுமூகமான சூழ்நிலை காணப்படுவதால் கரையோரப் பகுதிகளில் கடற்கரை உதைபந்தாட்டத்தை முன்னெடுத்து செல்வதற்காகவே இந்தச் செயலமர்வை ஒழுங்கு செய்துள்ளோம் - என்றார். (த-23)

## நாங்களும் வெல்வோம்...



திறமை: பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்ற முன்பள்ளிச்சிறார்களின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினரான பருத்தித்துறை உதவி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் வெற்றிபெற்ற சிறார் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (த-236)

உள்ளூர் விளையாட்டு அரங்குகளில்

# திருகோணமலை லீக் வென்றது

யாழ்ப்பாணம்,நவ.24

19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணி வெற்றி பெற்றது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் யூனியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணி மோதியது.

இரு அணி வீரர்களும் உற்சாகத்தோடு களம் இறங்கினர். ஆட்டம் தொடங்கியது முதல் இரு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களைப் போடுவதற்காக ஆட்டத்தினை வேகப் படுத்திக்கொண்டனர்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் முதலாவது கோலைப் போட்டது. இதனால் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணியும் கோல் பெறுவதற்காக ஆட்டத்தை வேகப்படுத்தி எதிரணியினரின் கோல் பரப்பை முற்றுகையிட்டது.

இந்த வேளையில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அணிக்காக முதலாவது கோலைப் போட்டது.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது இரு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகிய போது இரு அணி வீரர்களும் மிகவும் உற்சாகத்தோடுகளம் இறங்கினர்.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகி 5 நிமிடங்களில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தனது இரண்டாவது கோலைப் பெற்றது.

இந்த வேளையில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணிக்குத் தண்டனை உதை ஒன்று கிடைத்தது. அதனைக் கோலாக மாற்றித் தனது அணிக்காக இரண்டாவது கோலைப் பெற்றது.

இரண்டு அணியினரும் தலா இரு கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையை அடைந்தது.

ஆட்டம் முடிவிற்கு 3 நிமிடங்கள் இருக்கையில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் மூன்றாவது கோலை அடித்து தனது வெற்றியினை உறுதி செய்து கொண்டது.

ஆட்ட முடிவில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (த-23)

# உதைபந்தாட்ட பயிற்சிப் பட்டறை

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் மத்தியஸ்தர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிப்பட்டறை, எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை வரை யாழ் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதென யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளர் மு. பிரான்சிஸ் அறிவித்துள்ளார். (த-23)

# சென். பற்றிக்ஸ் மூன்றாமிடம்

வலி.வடக்கு, நவ.24

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபையின் ஏற்பாட்டில் அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி பெற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியும், கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்பட்டது.

நான்கு கால் பாதி ஆட்டத்தில் 6:4 புள்ளிகள் என்ற நிலையில் இருந்தது.

மூன்றாம் கால்பாதி ஆட்டத்தில் 11:05 புள்ளிகள் எனக் காணப்பட்ட சென்.பற்றிக்ஸ் கல்லூரி இறுதி கால் பாதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி 14:12 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 43:29 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சுவன்ஜீ 24, நிரோஜன் 12, கென்ரக்சன் 04, அன்ரனி பிரசாத் 3 புள்ளிகளையும் பெற்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த விதுசன் 12, மயூரன் 10, சாருஜன் 6, மிருனன் ஒரு புள்ளிகளையும் பெற்றனர். (த-35)

## போட்டி...



வெற்றி: சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக மின் ஒளியில் ந டத்திய மின்னல் வேக கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தின் பரிசளிப்பு வைபவத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவரும், யாழ் மாநகர சபை உறுப்பினருமான என். ராஜதேவன் முதலாமிடத்தைப் பெற்ற சென்றலைட்ஸ் சொக்ஸ், இரண்டாமிடத்தைப் பெற்ற ஜொலிஸ்ரார் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குகின்றார். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஆரம்பம் தடுமாற்றம் நேற்றைய ஆட்டம் மழையால் பாதிப்பு

கொழும்பு, நவ. 24

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் ஆரம்பம் இலங்கைக்குத் தடுமாற்றத்தைக் கொடுத்துள்ளது. அதேவேளை, இந்த ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டது.

மேற்கிந்தியத் தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் இலங்கையில் நடைபெற்றுவருகிறது.

ஏற்கனவே முடிந்த முதலாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது.

அபாரமாகப் பந்துவீசிய மேற்கிந்தியத் தீவுகள் வீரரான ரோஜ் ஆரம்ப வீரர்களின் விக்கெட்டுகளைப் பதம் பார்த்தார்.

ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் ஆரம்ப வீரரான டில்ஷான் 4 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து பரணவிதாரண 16 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த மஹேல ஜெயவர்த்தனவும் (2) ஏமாற்றிச் செல்ல இலங்கை அணி 34 ஓட்டங்களுக்குள் மூன்று விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

மறுமுனையில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த அணித்தலைவர் சங்கக்காரவுடன் சமரவீர இணைந்துகொண்டார். இவர்கள் இருவரும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.



இலங்கை அணி, மூன்று விக்கெட்டுகள் இழப்புக்கு 84 ஓட்டங்களைச் சேர்த்திருந்த வேளை, போதி வெளிச்ச மின்மை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பந்துவீச்சில் ரோஜ் இரண்டு விக்கெட்டு களையும், சமி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சங்கக்கார 25 ஓட்டங் களுடனும் சமர வீர 26 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும்.

# தொடரை வென்றது இந்தியா!

நாக்பூர், நவ. 24



நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றது. இதன்மூலம் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தியா - நியூஸிலாந்து அணி களுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் இந்தியாவில் நடந்துவந்தது.

இதில் முன்னர் நடந்து முடிந்த இரண்டு போட்டிகளும் சமனிலையில் முடிந்தன.

இந்நிலையில், 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நாக்பூரில் கடந்த சனியன்று தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப் பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, 193 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

பின்னர், தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 566 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

தொடர்ந்து, 373 ஓட்டங்கள் பின்னிலையுடன் களமிறங்கிய நியூஸிலாந்து அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது ஒரு விக்கெட் இழப்புக்கு 24 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மீண்டும் நேற்றுத் தனது இனிங்ஸைத் தொடர்ந்த நியூஸிலாந்து அணி, சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தவண்ணமிருந்தது.

இறுதியில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்மூலம், ஓர் இனிங்ஸ் மற்றும் 198 ஓட்டங்களால் இந்திய அணி அபார வெற்றியைப் பெற்றதுடன், சொந்த மண்ணில் வைத்து டெஸ்ட் தொடரையும் கைப்பற்றியது.

நியூஸிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில், ஆகக்கூடுதலாக செளத்தி 31 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார்.

இந்திய அணி சார்பாக பந்திவீச்சில், ஹர்பஜன்சிங், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ஓஜா, ரெய்னா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப் பற்றினர்.

ஆட்டநாயகனாக டிராவிட் தெரிவுசெய்யப்பட்டார்.தொட ரின் நாயகனாக ஹர்பஜன் சிங் தெரிவுசெய்யப்பட்டார்.

# இந்திய அணியில் நிரந்தர இடத்தைப் பிடிப்பேன் - பதான்

நாக்பூர், நவ. 24

''எனது ஆட்டத்திறனில் உள்ள குறைபாடுகளைத் திருத்திக் கொண்டு மீண்டும் சிறப்பாக ஆடுவேன். அதற்காக, இனிவரும் போட்டிகளில் சிறப்பாகச் செயல்பட்டு அணியில் நிரந்தர இடத்தைப் பிடிப்பேன்.''

- இவ்வாறு இந்திய வீரரான யூசுப்பதான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான யூசுப்பதான், சமீபகாலமாக ஆட்டத்திறனை இழந்து தவித்து வருகிறார்.

இவருக்கு அணியில் வாய்ப்பு மறுக்கப் பட்டு வந்தது.

இந்நிலையில், உள்ளூர் போட்டிகளில் திறமையை நிரூபித்த இவர், நியூஸிலாந்துக்கு எதிரான முதலிரண்டு ஒரு நாள் போட்டிகளுக்கான அணியில் இடம்பிடித்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துக் கூறும்போதே யூசுப்பதான் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எனது துடுப்பாட்டத்தில் ஒரு சில குறைபாடுகள் இருந்தன. அதற்காக தீவிர பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறேன். தற்போது இதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.

உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளேன். இதுதவிர, பந்துவீச்சிலும் சாதிக்க முயற்சி செய்து வருகிறேன்.

தற்போது நியூஸிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டி யில், சாதிப்பதுதான் எனது குறிக்கோளாக உள்ளது.

# சமனிலை நோக்கி நகர்கிறது அபுதாபி டெஸ்ட்!

அபுதாபி, நவ. 24

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி சமனிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

தென்னாபிரிக்கா-பாகிஸ்தான் அணிகள் மோதும் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் அபுதாபியில் நடைபெற்றுவருகிறது.

இதன் முதலாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

தற்போது இரண்டாவது போட்டி நடைபெற்றுவருகிறது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 584 ஓட்டங்களைக் குவித்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது.

பின்னர் தனது இனிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 317 ஓட்டங்களைப் பெற் றிருந்தது.

மீண்டும் நேற்று தனது இனிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 434 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர், 150 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, ஆரம்பத்தில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

எனினும், நேற்று ஆட்ட நேரம் முடியும்போது 173 ஓட்டங்களை பெற 4 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

இன்று ஆட்டத்தின் கடைசி நாள் ஆகும்

# வெள்ளி வென்றது சானியா ஜோடி!

குவாங்சு, நவ. 24

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் கலப்பு இரட்டையர் டென்னிஸ் இறுதியாட்டத்தில் இந்தியாவின் சானியாமிர்ஷா - வீரர் விஷ்ணுவர்தன் ஜோடி, சீனத்தைபேயின் சான் யங் ஜான்-யங் டிசங் ஹூவா ஜோடியைச் சந்தித்தது.

இதில், சானியா-விஷ்ணு ஜோடி 6-4, 1-6, 2-10 என்ற செற் கணக்கில் தோல்வி கண்டு, வெள்ளிப்பதக்கத்துடன் திருப்திபட வேண்டியதாயிற்று.

சானியாவுக்கு இது 2ஆவது பதக்கமாகும். ஏற்கனவே பெண்கள் ஒற்றையரிலும் [illegible]




சீனாவில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நேற்றுமுன்தினம் நடந்த பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜப்பான் வீராங்கனையான ஹிசாடே புருஷிமா தங்கப்பதக்கத்தை வென்றார்.

இவர் 11.33 வினாடிகளில் ஓட்ட தூரத்தைக் கடந்து தங்கப்பதக்கத்தை வென்றார்.




ஆசிய விளையாட்டு போட்டிகளில் நேற்றுமுன்தினம் நடந்த ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் சீன வீரரான லாவ் ஜி தங்கத்தைக் கைப்பற்றினார்.

இவர் 10.24 வினாடிகளில் ஓட்ட தூரத்தைக் கடந்து தங்கப்பதக்கம் வென்றார்.

சவூதிஅரேபிய வீரரான அல்னாஷிரி யாசிர் 10.26 வினாடிகளில் ஓட்ட தூரத்தைக் கடந்து வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தவறிவிட்டது: காங்கேசன்துறை, தையிட்டி தெற்கு எனும் முகவரியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவரத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (490033203V) கொக்குவிலுக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தொடர்பு:- நந்தாவில் லேன், கொக்குவில்,கிழக்கு T.P- 0771751457

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்- கிளிநொச்சி

### கிளிநோச்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளுதல்

மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்கள் விவரம் கடந்த போர் சூழலினால் கைவிடப்பட்டுள்ளன. இச் சங்கத்தின் பொதுச் சபையை அழைத்து இயக்குநர் சபையை தெரிவு செய்வதற்கு முன்னோடியாக அங்கத்தவர்கள் விவரத்தை திரட்ட வேண்டியுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் மற்றும் தேவையான விவரங்கள் கரைச்சி பிரதேச பிரிவில் உள்ள சகல கிராம சேவகர் அலுவலகங்களிலும், கரைச்சி பிரதேச செயலகத்திலும், கணேசபுரத்தில் அமைந்துள்ள அரச கால்நடை வைத்தியர் பணிமனையிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அங்கத்தவர்கள் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி சங்கத்தின் தலைவர் அல்லது செயலாளரிடம் சமர்ப்பிக்கவும். மேற்படி சங்கம் அரச கால்நடை வைத்திய பணிமனை கிளிநொச்சியில் உள்ள கணேசபுரத்தில் இயங்குகிறது.

தலைவர்

கிளி. கால்நடை . வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

## மரண அறிவித்தல்

### சதாசிவஐயர் ஞானபூங்கோதைஅம்மா

தெல்லிப்பழை தோதரைஅம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவஐயர் ஞானபூங்கோதையம்மா கடந்த 20.11.2010 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவஐயரின் அன்பு மனைவியும் மகாலட்சுமி, ஜெயலட்சுமி, சந்தானலட்சுமி, பரஞ்சோதி, வைத்தியநாதீக்குருக்கள், யோகேஸ்வரசர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், தணிகாசலக்குருக்கள், சிவசுதக்குருக்கள், நித்தியானந்தசர்மா, கிருஷ்ணானந்த சர்மா, ஸ்ரீசரஸ்வதி, செல்வி ஆகியோ ரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அல்விஸ் பிளேஸ், கொட்டாஞ் சேனையில் அமைந்துள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதம்பிட்டி மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்விஸ் பிளேஸ்,
கொட்டாஞ்சேனை, கொழும்பு- 13
(0112345540 0770521634)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் வேலாயுதம்
### (இளைப்பாறியபாடசாலை அதிபர்)

மலேசியாவில் பிறந்தவரும் மூளாயில் வசித்தவரும் வெள்ளவத்தையை இருப்பிடமாகவும் கொண்டவருமான வைத்திலிங்கம் வேலாயுதம் நேற்று முன்தினம் (22.11.2010) திங்கட்கிழமை அதிகாலையில் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வைத்திலிங்கம் தம்பதியினரின் மூத்தமகனும் யோகநாயகியின் அன்புக் கணவரும் கேசவன், தயா, முகுந்தன், கிரிதரன், வத்சலா, பராபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராமச்சந்திரன், திருவண்னன், தனலட்சுமி, சௌமினி, சுஜித்திரா, தேவதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌசிகா, விகாஸ், லக்சனா, நிதர்சினி, நேத்திரன் ஆகியோரின் செல்லத்தாத்தாவும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நவரத்தினம் ஆகியோரின் மூத்த சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.11.2010) வியாழக்கிழமை காலை 8மணிமுதல் மகிந்தமலர்ச்சலையில் (கல்கிசை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 2மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.30 மணியளவில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## உள்ளூராட்சி வார விழா

சாவகச்சேரி, நவ. 24

சாவகச்சேரிப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா நிகழ்வு இன்று புதன் காலை 10 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைச் செயலாளர் வே. சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் உள்ளூராட்சி வார நிகழ்வையொட்டி மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பிரிசில்கள் வழங்கப்படும். (ஒ-131)

## சாவகச்சேரியில் நடமாடும் சேவை

சாவகச்சேரி, நவ. 24

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பொதுமக்களுக்கான நடமாடும் சேவையொன்று எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையைத் தென்மராட்சிப் பிரதேச செயலகமும் தென்மராட்சியில் உள்ள 523 ஆவது படைப்பிரிவினரும் இணைந்து நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவையில் அடையாள அட்டை பெறுதலுக்குரிய நடவடிக்கைகள் முதியோர் அடையாள அட்டை வழங்கல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் உட்பட ஏனைய விடயங்கள் இடம்பெறவுள்ளன. (ஐ-131)

## நெல்லி மரத்தில் இருந்து விழுந்த சிறுவன் மரணம்

சங்கானை, நவ.24

சங்கானையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லி மரத்தில் இருந்து தவறி வீழ்ந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த சிறுவன் நேற்று உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் சங்கானை, தேவாலய வீதியைச் சேர்ந்த சுதாகரன் அமலன் (வயது-11) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-10-29)

## ஹொக்கி வீரர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.24

இலங்கை ஹொக்கி சம்மேளனத்தினால் தேசிய ஹொக்கி சுற்றுப் போட்டி அடுத்த மாதம் 2ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை கொழும்பு பொலிஸ் பாக் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்ட ஹொக்கி ஆண்கள் அணி பங்குபற்ற உள்ளது. யாழ். மாவட்ட ஆண்கள் அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்யவுள்ளதால் ஆர்வமுள்ள ஹொக்கி வீரர்களை இன்று மாலை 4 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு சமுகம் தருமாறு யாழ். மாவட்ட ஹொக்கி சங்கத்தின் செயலாளர் ஆர். குகன் கேட்டுள்ளார். (ஒ-23-10)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் வேலுப்பிள்ளை (சக்கரை)



காரைநகர், களபூமி தன்னையைப் பிறப்பிடமாகவும் கருவியாத்தனையை வசிப்பிடமாகவும் தற்போது வேப்பங்குளம், உதயாமில் வீதி, முதலாம் ஒழுங்கை, இலக்கம் 417/50 இனை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் வேலுப்பிள்ளை (சக்கரை) நேற்றுமுன் தினம் (22.11.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் துரைராசசிங்கம் (வவுனியா), சண்முகம் (கனடா), தவமலர் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகமலர், ராஜேஸ்வரி காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனும் பகீரதன், அஞ்சலா, விக்னேஸ்வரன், ஐங்கரன், திருவரங்கன், கஜன், மயூரி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (25.11.2010) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணம் குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 417/50, உதயா மில் வீதி,
முதலாம் ஒழுங்கை,
வேப்பங்குளம், வவுனியா.

தகவல் :
மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(வ/572582)



### இராசையா சபாரத்தினம்

வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல. 230, சட்டநாதர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சபாரத்தினம் 22. 11. 2010 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும் பன்னீர்செல்வன்(பிரான்ஸ்), இளங்கோ, தமிழ்செல்வி, அருட்செல்வி, தமிழ்செல்வன், திருச்செல்வன்(பிரான்ஸ்), பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரகலா, வதனி, குகபாலன், வரதராஜன்(பிரான்ஸ்), உஷா, சந்திரகுமார் (சாந்தன்) ஆகியோரின் அன்புமாமனாரும், விதுசன், சுனித்தா, சர்மி, லக்சிகா, கிந்துஜன், அனுஜன், விதுஷா, திவ்வியா, ஆருஜன், சஞ்யே, வைஸ்னவி, அஸ்வின், அஜித் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, நீலாம்பிகை, வல்லிபுரம் மற்றும் சத்தியபாமா, காலஞ்சென்ற அம்பிகாபதி மற்றும் இரத்தினவல்லி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2010) புதன் கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இல.230,சட்டநாதர் வீதி,
யாழ்ப்பாணம். (106483)

சந்திரகுமார் (சாந்தன்)
மருமகன்.


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.10.2009 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் | |
|---|---|---|---|
| | | திகதி | இடம் |
| 01 | யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளையும் மானிப்பாய் சேவை நிலையமும் | 12.12.2010 மு.ப 8.30 | மக்கள் வங்கி, யாழ்..ஸ்ரான்லி வீதிக்கிளை |
| 02 | காங்கேசன்துறைக் கிளையும், மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03 | யாழ் பிரதான வீதிக்கிளையும் உரும்பிராய் சேவை நிலையமும் | | |
| 04 | நெல்லியடிக்கிளை | | |
| 05 | அச்சுவேலிக்கிளை | | |
| 06 | சங்கானைக்கிளை | | |
| 07 | சுன்னாகம் கிளை | | |
| 08 | சாவகச்சேரிக்கிளை | | |
| 09 | வல்வெட்டித்துறைக்கிளை | | |
| 10 | யாழ். பல்கலைக்கழகக்கிளையும், திருநெல்வேலி சேவை நிலையமும் | | |
| 11 | யாழ். கன்னாதிட்டிக்கிளையும் இணுவில் சேவை நிலையமும் | | |
| 12 | பருத்தித்துறைக்கிளை | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

2010.11.24. (வி/572529)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவன் 'ராகிங்' விவகாரம் மௌனம் காக்கிறார் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புதுமுக மாணவன் ஒருவர் சிரேஷ்ட மாணவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர் ஆலோசகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, மாங்குளத்தைச் சேர்ந்த பிரஸ்தாப மாணவன் தனக்கு ஏற்பட்ட இம்சை குறித்து தெரிவித்துள்ள அந்த முறைப்பாடு வருமாறு:-

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் பல்கலைகழக வளாகத்தில் நின்ற சமயம் சிரேஸ்ட மாணவர் சிலர் என்னை வகுப்பறை ஒன்றினுள் ரகசியமாகக் கூட்டிச் சென்று 'ரீப்பைத்' தடிகளாலும், கைகளாலும், கால்களாலும் மாறிமாறிக் கடுமையாகத் தாக்கினர்.

இந்தத் தாக்குதலைக் கண்ட வேறு சில சிரேஷ்ட மாணவர்கள் அதனைத் தடுத்து நிறுத்தினர்.

இந்தத் தாக்குதலில் இருந்து மீண்டு ஒருவாறு சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே வந்த சமையம் பல்கலைக்கழகத்தின் முன் வீதியில் வைத்து இடைமறித்த அந்தச் சிரேஷ்ட மாணவர்கள் மீண்டும் 'ரீப்பைத்' தடிகளால் தாக்கினர். எனது சைக்கிளையும் அடித்துச் சேதமாக்கினர். - என்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளாகிய மாணவன் தலையில் பிடரிப் பகுதியிலும் நாடிப் பகுதியிலும் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளான்.

மிகவும் வறுமைக்குட்பட்ட இந்த மாணவன் சிரஷ்ட மாணவர்களின் 'ராகிங்' கால் மன உளைச்சலுக்குள்ளாகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

தன் மீது தாக்குதலை மேற்கொண்ட சிரேஷ்ட மாணவர்களின் பெயர்களையும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இது விடையம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் நா. சண்முகலிங்கனிடம் நேற்று மாலை தொடர்பு கொண்டு விவரங்களை அறியமுற்பட்டபோது.

துணைவேந்தர் வேலைப்பழுவுடன் இருப்பதால் அவரைத்தொடர்பு கொள்ள முடியாது என்று அவரது செயலாளர் பதிலளித்தார். மேற்படி 'ராகிங்' சம்பவம் தொடர்பாக தகவல்கிடைத்திருப்பதாகவும் அது தொடர்பாகத் துணைவேந்தரிடம் விளக்கம் கேட்கவுள்ளதாகவும் உதயன் செய்தியாளர் அவரிடம் சொன்னபோது எந்தத் தகவல் கிடைத்திருப்பினும் துணைவேந்தருடன் கதைக்க முடியாது. என்றும் அவரது செயலாளர் அடித்துக் கூறிவிட்டார். இதனால் மேலதிக விளக்கம் எதுவும் பெறமுடியவில்லை. (ஒ-9)

## சங்கிலியன் சிலை அகற்றப்படாது

யாழ்ப்பாணம், நவ.24

பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணியின்போது சங்கிலியன் சிலை மற்றும் சங்கிலியன் வளைவு என்பன அகற்றப்படமாட்டாது எனவும் அதற்கான மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார்.

கே.கே.எஸ் வீதி அகலிப்பின் போது பாதிக்கப்படும் ஆலய நிர்வாகத்தினருடன் தாம் கலந்துரையாடியதாகவும் அதனடிப்படையில் அவர்கள் வீதி அகலிப்புக்கு காணிகளை விட்டுக்கொடுக்கச் சம்மதித்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

கலாசாரத் தொன்மையான விடயங்களைப் பாதிக்காத வகையில் மாற்று ஏற்பாடுகளின் மூலம் வீதி அகலிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (த-15)

# அரசின் இன அழிப்பு....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரம்பரியங்களைக் கொண்ட ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளை இலங்கை அரசு எதிரிகளாகவோ அல்லது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடும் சக்திகளாகவோதான் பார்க்கின்றது. ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் உரிமை தொடர்பான சர்வதேச சட்டங்கள் இலங்கை அரசால் மதிக்கப்பட வேண்டும் என இலங்கை அரசை சர்வதேச சமூகம் வற்புறுத்துகின்றது.

ஆனால் வற்புறுத்தல்கள் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு சமனானது என இலங்கை அரசு கருதுகின்றது. இவ்வாறான மோதல்களால் ஐரோப்பிய யூனியன் வழங்கி வந்த ஜி. எஸ்.பி. போன்ற வரிச் சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளன. தவிர யுத்தக் காலத்தில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட யுத்தக் குற்றங்கள் என்பனவும் இலங்கை அரசுக்கு சர்வதேச ரீதியில் அபகீர்த்தியை ஏற்படுத்தி வருவது மாத்திரமல்லாது, இந்த யுத்தக் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் பல நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இதுவும் இலங்கைக்குப் பெரிய பின்னடைவுகளை ஏற்படுத்தி வருகின்றது.

### ஆயிரக்கணக்கானோர் யுத்தத்தில் பலி

நடந்து முடிந்த யுத்தம் மனிதாபிமானத்தை நிலைநாட்டுவதற்கான யுத்தம் என்றும் அங்கு எந்தவிதமான உயிரிழப்புகளும் இல்லை என்றும் இலங்கை அரசு பிரசாரம் செய்தும் கூட பல ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே கொல்லப்பட்டிருக்கின்றார்கள்; வைத்தியசாலைகளுக்கு மேல் குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. அரசு உருவாக்கிய பாதுகாப்பு வலயங்களில் இருந்த மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்; பால் உணவுக்காக வரிசையில் நின்ற சிறுவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்; முதியவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்; வெள்ளைக் கொடியுடன் சென்று சரணடைந்தவர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் ஆகிய உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் யுத்தக் குற்றங்களாகவே கணிக்கப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை உண்டென்பதை எந்தப் பொருளாதார வல்லுநரும் நம்பப்போவதில்லை. யுத்தம் முடிந்திருக்கலாம், ஆனால் நாடு இன்னும், அவசரகாலச் சட்ட ஆட்சிக்குள்ளும், ஜனநாயக மறுப்பிற்குள்ளும், சர்வாதிகாரப் போக்கிற்குள்ளும் தான் இருக்கின்றது.

இப்படியான சூழ்நிலையில் அந்நிய முதலீடுகள் வந்து குவியும் என்று எதிர்பார்ப்பதும், அதிசயங்கள் நடக்கும் என கூறுவதும் ஒட்டுமொத்த நாட்டுக்கும் புலுடாவிடும் கதையே தவிர, அதில் எதுவித உண்மைத்தன்மையுமில்லை என்பதை நாடறியும்.

### கே.பியை நம்பமாட்டார்கள்

இவற்றைப் புரிந்துகொண்டதன் அடிப்படையில்தான் கே.பி. மூலம் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் மூலதனத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றார்கள். ஆனால் அது கூட உங்களால் முடியாது. கே.பியை நம்பி தமது பணத்தை முதலீடு செய்ய அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்லர். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, கலாசார, பாதுகாப்பு, நிர்வாக வேலைகளைக் கவனிக்கக்கூடிய சகல அதிகாரங்களுடன் கூடிய ஓர் நிறுவனம் என்று தோற்றுவிக்கப்படுகின்றதோ அப்பொழுதுதான் புலம்பெயர் தமிழர்கள் முதலீடு செய்ய முன்வருவார்களே தவிர கொழும்பை நம்பியோ, கே.பியை நம்பியோ அவர்கள் எதனையும் செய்யமாட்டார்கள் என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்.

எனவே தான் உங்கள் உள்நாட்டுக் கொள்கைகளையும், வெளிநாட்டுக் கொள்கைகளையும் மறுபரிசீலனை செய்யுங்கள். சிங்கள கடும் போக்காளர்களும், சிங்கள மேலாதிக்கவாதிகளும் நாட்டுப்பற்றாளர்கள் என்ற பெயரில் ஐரோப்பியர், அமெரிக்கர் எல்லோரும் காலணி ஆதிக்கவாதிகள் எனக் குதிக்கலாம். இந்நாட்டில் சிறுபான்மை தேசிய இனங்களுக்காக உரிமைகள் கொடுக்க கூடாதென அறிவுரை கூறலாம். இன்றைய உலகில் இவையெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத, காலம் கடந்த சிந்தனைகள் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். இத்தகையவர்களால் நாட்டை மேலும் அழிவுப்பாதையில்தான் கொண்டு செல்ல முடியும்.

எனவே தமிழின அழிப்பிற்கென்றே தயாரிக்கப்பட்ட இவ்வரவு-செலவுத் திட்டம் பெரும் மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும் போரினால் அழித்தொழிக்கப்பட்ட திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி மாவட்ட மக்களின் மீள்குடியேற்றம், பாடசாலைகள், வைத்திய சாலைகள், கோவில் கள் மற்றும் தேவாலயங்களின் புனரமைப்புக்காகப் போதிய நிதி ஒதுக்கப்பட வேண்டும். இராணுவச் செலவீனங்கள் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டு வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்களும் செயற்பாடுகளும் 83 இற்கு முந்திய நிலைக்கு செல்ல வேண்டும்.

வடக்கு, கிழக்கில் அழிக்கப்பட்ட மக்களின் சொத்துகளுக்கு நிவாரணமும் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த போதிய நிதியும் சிறப்பாக ஒதுக்கப்பட வேண்டும். இல்லாவிடத்து இது வெறும் தமிழ் இன ஒழிப்பு வரவு-செலவுத் திட்டமாகவே இருக்கும் என்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தகைய அப்பட்டமான இனவாத வரவு-செலவுத் திட்டத்தை முற்று முழுமாக எதிர்க்கும் என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்பு கின்றேன். - என்றார் பிரேமச்சந்திரன்


## பாராட்டி வாழ்த்து

வலிகாமம் கல்வி வலயத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி அகவை அறுபதில் இளைப்பாறும்

**திரு.வன்னியசிங்கம் குகவேள்** (கல்விமாணி)

அவர்கள் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.



அவையினில் எழுந்து முழக்கமிடும் மேதையிடம்
"வெயிட், வெயிட்" கூறியே கேள்விகளைத் தொடுப்பான்
பகுத்தறிவாளனாய் அவையேற்கும் பதில் கொடுப்பான்
சிரிப்பூட்டும் கதைகூறி சிந்தனையைக் கிளறிடுவான்
ஆடல், பாடல், அபிநயம் என்றனைத்தும் கைவந்த கலைஞன்
தன்றினில் ஏற்றிய தீபமென சேவையில் தடம்பதித்த குமரன்
ஆரம்பக்கல்வியதில் அளப்பரிய பணிசெய்த குகவேள்ஐயா
குவலயத்தில் நீ நீடூழி வாழிய வாழியவே!

உதவிக்கல்விப் பணிப்பாளர்,
ஆசிரிய ஆலோசகர்கள்,
ஆரம்பகல்வித்துறை.

வலயக்கல்வி அலுவலகம்
வலிகாமம்.

## தேவை

சாரதி 1,
(விற்பனைப் பிரதிநிதியாகவும் செயற்பட வேண்டும்)

சாரதி 2,
(உதவி விற்பனைப்பிரதி நிதியாக செயற்பட வேண்டும்)
சாரதிகளுக்கு A.D சாரதி அனுமதிப் பத்திரம் கட்டாயம்

Accounts Clerk ( M.S Office அறிவு அவசியம்)

**Elephant House Distributor**
தொடர்பு: No.4, கிருஷ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
T.P: 0215671024
(106458)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை கலைப்பீடம்

### அறிவித்தல்
### பரீட்சை நேர அட்டவணை மாற்றம்

*கலைமாணி முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு 2009 பரீட்சை*

தவிர்க்கமுடியாத காரணத்தினால் மேற்படி பரீட்சைகள் நேர அட்டவணையில் கீழ் வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

| பாட அலகு | பரீட்சை நடக்கவிருந்த திகதி | பரீட்சைக்கான புதிய திகதி |
|---|---|---|
| APSC 12013 Forms of Government | 25.11.2010<br>9.00 a.m.to 12.00 noon | 08.12.2010<br>9.00a.m. to 12.00 noon |
| AGYC 12013 Cartographic Methods | 29.11.2010<br>9.00 a.m.to 12.00 noon | 08.12.2010<br>01.00 p.m. to 04.00 p.m. |

பதிவாளர்
23.11.2010

(சி/575524)

## விற்பனைக்கு

புறொயிலர் சுத்தம் செய்யப்பட்டது 1Kg - 450/=
அத்துடன் கல்பேட், ஊர்ச்சேவல் என் பனவும் விற்பனைக்குண்டு.
158/5, தாசன் பாம், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

## CALL SERVICE
T.P : 021-222 4459, 0774192275

Computer,(Laptop, Desktop) Mobile Phone, TV, DVD Player, Monitor (LCD, CRT) Power Supply, UPS, Printer, உட்பட இலத்திரனியல் பொருட்கள் உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.

## தவறிவிட்டது

நாவற்குழி சந்தி, கைதடி என்னும் முகவரியைச் சேர்ந்த வீரகத்தி தர்மலிங்கம் என்பவரது தே. அ. அ (712723386v), லைசன்ஸ், தொழில் அ. அட்டை, இன்சூரன்ஸ், வரிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் 19.11.2010 அன்று அரியாலை மேற்கு, நொத்தாரிஸ் லேனில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P. 0776121801

## கடை அல்லது வீடு தேவை

கொழும்பில் இயங்கிவரும் பிரபல கணினி வர்த்தக நிலையம் ஒன்றிற்கு யாழ். நகரப்பகுதியில் அல்லது அருகில் காட்சியறைக்கு வீடு அல்லது கடை தேவை.

தொடர்பு:
0772510994, 0777578277.

## தவறிவிட்டது

492, கே.கே. எஸ் வீதி எனும் முகவரியில் வசிக்கும் கணபதிப்பிள்ளை நடேசன் ஆகிய எனது Yamaha. RX 100 மோட்டார் சைக்கிளின் NPGL 9140 என்னும் இலக்கமுடைய பின் பக்க இலக்கத் தகடு 22.11.2010 அன்று யாழ். நகரிற்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இலங்கை வங்கி, மானிப்பாய் கிளையில் கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

கைதடியில் இருந்து சுன்னாகம் (யாழ்ப்பாணம் ஊடாக) செல்லும் மினி பஸ்ஸில் 10,000/= பணம் தவறிவிட்டது எடுத்தவர்கள் தயவு செய்து பார்வை குறைவுள்ள எனது பணத்தை தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
தொடர்பு: 0771880186, 0214909483

## கண்ணீர் அஞ்சலி

### தர்மலிங்கம் சிறிதரன்

எமது வெதுப்பகத்தில் கடமையாற்றிய

தர்மலிங்கம் சிறிதரன்



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

No.118, Rolex வெதுப்பகம்,
*கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

## மரண அறிவித்தல்

### திருமதி தியாகராசா ஜானகி



வேலணை வடக்கு, மணியகாரன் வீட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா ஜானகி 18.11.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - உருக்குமணி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தியாகராசாவின் (ஆசிரியர், யா/வேலணை மேற்கு, நடராசா வித்தியாலயம்) அன்பு மனைவியும் அனுஷா, திவ்வியராசன், திவ்வியகாந்தன், மகிஷி ஆகியோரின் பாசமிகு தாயும் ரகுநாதனின் (ஓய்வு பெற்ற விலை மதிப்பீட்டாளர்) பாசமிகு சகோதரியும் திலகமலரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.11.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணியகாரன் வீட்டடி,*
*வேலணை வடக்கு 5,*
*வேலணை.*
*தொ.பே : 0215680352*

தகவல் :
பிள்ளைகள், தாயார்,
சகோதரன்
குடும்பத்தினர்.

(106470)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. நிபுணர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் சபைக் கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டதனால் இக்கட்டான நிலை எனும் தலைப்பில் 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையில் கட்டுரை வெளியானதை அடுத்தே இந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கேள்விக்கு பர்கான் ஹக் பதிலளிக்கையில், சவேந்திர சில்வா ஓர் இலங்கை அரச ஊழியர். அதனால் கேட்க வேண்டிய கேள்விகளை அரசிடம்தான் கேட்க வேண்டும். நிபுணர்குழு ஒவ்வொருவரிடமும் பெற்றுக்கொள்ளும் சாட்சியங்களை எங்களால் நாள்தோறும் வெளியிட முடியாது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு நிபுணர் குழு விசாரணை தொடர்பான அறிக்கை தயார் என அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் எங்களிடம் சில தகவல்கள் கிடைக்கப் பெறலாம் என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இறுதி அறிக்கை மக்களுக்கு அறிவிக்கப்படுமா என எழுந்த கேள்விக்கு குறிப்பிட்ட அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரிடம் கையளிக்கப்படும். அவர் அதனை மக்களுக்கு அறிவிப்பாரா என்பதனை பொறுத்திருந்துதான் தெரிந்துகொள்ள வேண்டும் என பர்கான் ஹக் தெரிவித்துள்ளார். (சி)

## முடிவளர்ப்புக்கும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மா்நாட்டில் இவ்வாறு வேடிக்கையாகத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இதுகுறித்து விளக்கமளித்தார். பெருந்தோட்டத்துறை அமைச்சராக மஹிந்த சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். சிறு ஏற்றுமதிபயிர் ஊக்குவிப்பு அமைச்சராக அதாவது கறுவா, மிளகு, கராம்பு போன்றவற்றுக்கு ரெஜினோல்ட் குரே நியமிக்கப்பட்டுள்ளார். தென்னை அபிவிருத்திக்கென மாத்திரம் அமைச்சராக ஜகத் புஷ்பகுமார நியமிக்கப்பட்டுள்ளார்.

மொத்தத்தில் முடி வளர்ப்புக்குத்தான் ஓர் அமைச்சர் நியமிக்கப்படவில்லை. விரைவில் முடி வளர்ப்புக்குப் பொறுப்பாக அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. - இவ்வாறு அவர் சொன்னார். (சி)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரம் வீடுகளை அமைக்க இந்தியா வழங்கவுள்ள நிதி உதவியின் முதல் கட்ட மாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஆயிரம் வீடுகள் திட்டத்தையே அமைச்சர் கிருஷ்ணா அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைப்பார்.

அமைச்சர் கிருஷ்ணா துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான 100 டிரக்டர்கள் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்த பின்னர் இந்திய கிளைத் தூதரகத்தையும் யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்க வுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு, மக்களுக்கான இந்திய அரசினால் அமைக்கப் பட உள்ள 50 ஆயி ரம் வீட்டுத்திட்டப் பணிகளில் முதல் கட்டமாக மேற் கொள்ளப்பட உள்ள ஆயிரம் வீட் டுத் திட்டத்துக்கான அடிக்கல்லையே அரியாலையில் நடவுள்ளார்.

இந் நிகழ்வில் இந்தியத் தூதுவர் அசோக். கே. காந்த், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இலங்கையின் வெளி விவகார அமைச் சர் ஜி.எஸ். பீரிஸ், பாரம்பரிய கைத் தெழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-15)

## அரச ஊழியர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 600 ரூபா சொற்ப தொகையை வழங்கி அவர்களை ஏமாற்றிவிட்டதாக ஐ.தே. கட்சி செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. நேற்று குற்றஞ்சாட்டினார்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. இங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரசு உலகிலேயே மிகப் பெரிய அமைச்சரவையை நியமித்துள்ளது. சிரேஷ்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என 93 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு அமைச்சருக்கு மாதாந்தம் 25 லட்ச ரூபா செலவிடப்படுகிறது. நியமிக்கப்பட்டுள்ள 91 அமைச்சர்களுக்கும் மாதாந்தம் 2,200 லட்சம் ரூபா செலவிடப்படுகிறது. வருடாந்தம் இந்த அமைச்சர்களுக்கு 264 கோடி ரூபா செலவிடப் படுகின்றது.

அரசுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் நிலையில் மக்கள் மீது ஏன் மென்மேலும் வரிச்சுமையை சுமத்தவேண்டும்?

கடந்த இரண்டு வாரங்களுக்குள் சீனியின் விலை 25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. தேங்காய் ஒன்றின் விலை 40 முதல் 50 ரூபாவாக உயர்ந்துள்ளது. பருப்பு 240 ரூபாவாக உயர்ந்துள்ளது. அரசு அமைச்சரவையை நடத்திச் செல்லவும் வீண் விரயத்துக்காகவும் வரவு-செலவுத் திட்டத்துக்கு அப்பால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வரிகளை விதிக்கின்றது.

அமைச்சரவையை 20 ஆக கட்டுப்படுத்த வேண்டுமென கூச்சலிட்ட விமல் வீரவன்ஸ இன்று மௌனம் சாதிக்கின்றார்.

மக்களுக்கு எதுவித நிவாரணத்தையும் வழங்காத இந்த வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக ஐ.தே.கட்சி வாக்களிக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ)


யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)

Course Fees - Rs.7500/= Only

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

வகுப்பு ஆரம்பம் - 27/11/2010 நேரம் 10மணி காலம் 2 மாதங்கள்

உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!

விபரங்களுக்கு - UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

மாபிள் பதித்துக் கொடுக்கப்படும்

வீடுகள், கடைகள், அலுவலகங்கள், ஹோட்டல்கள் போன்றவற்றுக்கு நிபுணத்துவம் வாய்ந்தவர்களினால் தரமாகவும் நியாயவிலையிலும் மாபிள் பதித்துக்கொடுக்கப்படும்

AXSHAYA CONSTRUCTION, JAFFNA.
தொடர்புகளுக்கு: 0776679564, 0213207202, 0213218088

January Semester - 2011

* UK / Canada கல்வி பயில்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
* துறைசார் கல்விகளுக்கான பயணம்.
01) IELTS அவசியமில்லை.
02) முன்கட்டணம் அவசியமில்லை.
03) College fees $ 2,500
04) Sponsor வசதி (2500000/= → 130000/=)
05) அனைத்து செலவுகளுக்குமான தொகை - 700000/=

நம்பிக்கைக்குரிய கல்வி மையம்

தொடர்புகளுக்கு : European College of higher Studies
315 ½, Parameaswara Junction,
Palaly Road, Jaffna.
Tel :- 0773537378, 0773823872, 0213734747
(106468)

MyWay English சனி ஞாயிறு டிப்ளோமா பயிற்சிநெறி

ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி இலகுவாக ஆங்கிலத்தினை பேச முடியும்

ஆரம்பம் : 27.11.2010 காலம் : 3 மாதங்கள்

பிரிவுகள் : காலை 8 - 9, 10 - 11, மாலை 1 - 2, 3 - 4, 4 - 5, 5 - 6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

தனியார் அலுவலர், வங்கியாளர், மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு அனுமதி இல்லை

பல்கலைக்கழகம் பூர்த்திசெய்து அரச பணி நியமனம் பெறாதோரும் பயிற்சியில் சேரலாம்

MyWay 182, Stanley Rd Jaffna 077 33 63 456

3ஆம் தவணை பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற வெற்றிதுளிர் - 6

வெளிவந்துவிட்டது. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
சிவசன் கிறபிக்ஸ்,
362, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0773717353

ஓட்டோ ஓட்டுநர் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் வியாபாரம் செய்த அனுபவமுள்ள ஓட்டோ ஓட்டுநர் தேவை.
தொடர்பு :- புதன் - வெள்ளி வரை மு.ப 10-2 மணி வரை.

அஸ்லினி மல்ரி பிளாசா,
ராஜா பிளாசா பில்டிங்,
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி அருகாமை.

உடனடியே ..........

★ மாணவர்களின் நலன் கருதியும், January க்குப் பின் வெளிநாட்டுக் கற்கை நெறிக்குமான இலங்கையில் பூர்த்தி செய்ய வேண்டிய -
1) IELTS
2) Spoken English
27.11.2010
வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

I. 24ஆம் திகதியில் இருந்து அனுமதிகள் வழங்கப்படும்.
II. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்பு :-
European College of higher Studies,
315 ½, Parameswara Junction,
Palaly Road, Jaffna.
Tel : 0771882507, 0213734747

SAKTHIMICRO SYSTEM
Sankaththanai Chavakachcheri www.sakthizone.com 0212270084

கணனி உலகின் மிகப்பெரிய நிறுவனமான Adobe (USA) இன் அங்கீகாரம் அளிக்கப்பட்ட இலங்கையில் ஒரே ஒரு பயிற்சி நிறுவனம்

Adobe AUTHORISED Training Centre — Master Diploma in Multimedia — Adobe SOLUTION PARTNER

நீங்களும் ஒரு Adobe மல்ரிமீடியா வல்லுனர் ஆகுங்கள்

இந்தியாவில் இருந்து வருகை தரும் மல்ரிமீடியா வல்லுனர்களால் கற்பிக்கப்படுகின்றது

ஒவ்வொரு மல்ரிமீடியா அனுமதிகளுக்கும் புத்தம் புதிய கணனி இலவசம்

அனுமதிகளுக்கு யாழ்ப்பாணம், சாவகச்சேரி
Hotline - 0776102609

| | | |
|---|---|---|
| STP Computer World<br>49, Kasthuriyar Road, Jaffna.<br>0212222674 | Arrul Global Express<br>01, Navalar Road Junction,<br>Jaffna. 0212226113 | CB Computer Academy<br>Station Road,<br>Kondavil<br>0213217903 |
| RS Communication<br>Kaddudai, Sandilippai.<br>0212240313 | Telesoon Phone Shop<br>K.K.S Road,<br>Inuvil, Jaffna. | Ultra Speed Netcafe.<br>23A, Dutch Road,<br>Chavakachcheri.<br>0212270232 |

Quick Learning Course

Spoken English with Grammar

Duration 1 Month Rs.2000.00

உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

30-11-2010
Batch 6 : 8.00 AM- 11.00 AM
Batch 7 : 11.00 AM - 2.00 PM
Batch 8 : 2.00 PM - 5.00 PM

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
BCHS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.